
A
SUSPENSE
THRILLER
JUNE-12 முதல்
TO
JUNE-12 வரை

*ஜூன் 12 முதல்..*

*ஜூன் 12 வரை..*

*சுபா*

சுபா©SUBHA

sureshbala.subha@gmail.com

இந்நூலின் முழு உரிமை ஆசிரியரைச் சாரும்.
மதிப்புரைகள், விமர்சனங்கள் வழங்குவோர்,
தம் தேவைக்கு ஏற்ப இந்நூலின் சில பகுதிகளை
மேற்கோளாக எடுத்துக் காட்டுவது தவிர,
இதிலிருந்து சில பகுதிகளைப் பயன்படுத்துவதோ
வேறு வகையில் மறுபிரசுரம் செய்வதோ,
அச்சு மற்றும் மின் ஊடகங்களில் மறு பதிப்பிடுவதோ
காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

ஒன்று

ஈகிள்ஸ் ஐ.

ராம்தாஸின் குளிரூட்டப்பட்ட அறை.

ராம்தாஸ் தன் பைப்பில் எரிந்து முடிந்திருந்த புகையிலைக் குப்பையை சுத்தம் செய்துகொண்டிருந்தார்.

நரேந்திரன் அறைக் கதவைத் திறந்து புயல் போல் நுழைந்தான்.

"ராம்தாஸ், நாம் கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குப் போகிறோம்.." என்றான்.

ராம்தாஸ் நிமிர்ந்து "இந்த ராத்திரியிலா..?" என்று சிரித்தார். "வழக்கு யாருக்கெதிராக? தப்பான அளவில் ஜிப் வைத்துத் தைத்திருக்கும் உன் டைலர் மீதா..?"

"இல்லை. என்னுடைய இன்டர்நெட் சர்வீஸ் மீது"

ராம்தாஸ் பைப்பை குப்புறத்தி ஆஷ்ட்ரேயில் தட்டிவிட்டு நிமிர்ந்தார்.

"பில்கள் அதிகமாக வருகிறதா..?"

"அப்படி வந்தால் பிரச்னை இல்லையே"

"ஈகிள்ஸ் ஐ தானே செக் அனுப்புகிறது என்கிறாயா..?" ராம்தாஸ் பைப்பில் புகையிலையை அடைக்கத் துவங்கினார்.

"சரியான சமயத்துக்காகக் காத்திருந்து கோல் போடுவீர்களே.." என்று முணுமுணுத்துவிட்டு, "என் பிராப்ளம் வேறு.." என்றான்.

"இந்த மேட்டருக்கு எதற்கு இவ்வளவு சஸ்பென்ஸ்..?"

"எனக்கு வரும் ஈமெயில்களைப் பார்த்தால் உங்களுக்குப் புரியும், தாஸ்"

"சுலபமான வட்டிக்குக் கடன் தருகிறோம் என்று அமெரிக்கன் பாங்க்ஸ் லெட்டர் அனுப்புவதைத்தானே சொல்கிறாய்? எனக்குக்கூட நிறைய கடிதங்கள் அப்படி வருகின்றன"

"அதெல்லாம் கண்ணியமான கடிதங்கள். எனக்கு ஒரு நாளைக்கு நானூற்றி இருபது கடிதங்களுக்குக் குறையாமல் வருகிறது, தாஸ். அதில் நானூற்றி பத்தொன்பது 'அந்த' மாதிரிக் கடிதங்கள்"

"அந்த மாதிரி என்றால்..?"

"ஐயோ பாவம். இந்த வழுக்கை மண்டைக்குள் வால்மீகியும், வியாசரும் மட்டும்தான் குடியிருக்கிறார்கள். அந்த மாதிரி என்றால் புரியாது"

ராம்தாஸ் பைப்பை சோதித்துவிட்டு பற்களால் கவ்விக்கொண்டார். "நீயே சொல்.." என்றார்.

"காதரீன் என்கிறாள், ஒருத்தி. வயலட் என்கிறாள் ஒருத்தி. மார்கரெட் என்கிறாள் ஒருத்தி. என்னவோ எனக்காகவே காத்திருக்கிற மாதிரி எல்லோரும் புதிய அனுபவம் கிடைக்கும் வா

என்று பச்சையாகக் கூப்பிடுகிறார்கள். போதாத குறைக்கு வயாகரா தயாரிக்கும் நான்கைந்து கம்பெனிகள் எனக்காகக் கவலைப்பட்டு மெயில் ஆர்டரில் வாங்கிக்கொள்ளச் சொல்லி வற்புறுத்துகின்றன. இருபத்து நாலு மணி நேரமும் அதையே நினைத்துக்கொண்டா அலைகிறேன்..?"

"எதையே..?" ராம்தாஸ் முதல் தீக்குச்சியைப் பற்ற வைத்தார்.

"என்னை இப்படியே கொல்வது என்று முடிவு செய்துவிட்டீர்களா, தாஸ்.." என்று சிணுங்கினான், நரேந்திரன். "என் மெயில் அட்ரஸ் அந்த கம்பெனிகளுக்கு எப்படிக் கிடைத்தது? யார் கொடுத்தது? அந்த இன்டர்நெட் சர்வீஸ் எப்படி என் பர்மிஷன் இல்லாமல் என் முகவரியை மற்றவர்க்கு விற்கலாம்..?"

"நீ 'அந்த மாதிரி' வெப்சைட்களுக்குப் போகும்போது ஆட்டமாடிக்காக உன் அடையாளம் அங்கே பதிவாகிவிடும் என்பார்கள், அவர்கள். தினமும் இன்டர்நெட்டில் அந்த மாதிரி விவகாரங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறாயா என்று வைஜயந்திக்கு எதிரில் கேள்வி கேட்டு கோர்ட் உன்னை நாறடித்துவிடும்"

"எந்த மாதிரி வெப்சைட்கள்..?"

ராம்தாஸ் மூன்றாவது குச்சியைக் கிழித்தார். பைப் பற்றிக்கொள்ளவில்லை. "இப்போது நீதான் வியாசர் மாதிரி பேசுகிறாய்"

"என்ன செய்யட்டும்..?"

"நரேன், உன் மெயில் ஐ.டி.யை மாற்றி விடு"

"தீராத வயிற்று வலி என்று டாக்டரிடம் போனானாம் ஒருத்தன். பேசாமல் தற்கொலை செய்துகொள் என்றாராம், டாக்டர்"- நரேந்திரன் குரலில் சீற்றமிருந்தது.

"வைஜயந்தியிடம் கேட்டால், கரெக்டான தீர்வு சொல்வாளே"

நரேந்திரன் படக்கென்று கைகளைத் தட்டிக் கும்பிட்டான். "வேண்டாம், சாமி. ஆளை விடுங்கள். பூதத்திடமிருந்து தப்பிக்க பிசாசிடம் போகச் சொல்கிறீர்களே! காதரீன் யார், ரீட்டா யார், அவர்களுக்கு எங்கெங்கே மச்சம், எப்படி உன் மெயில் ஐ.டி. கிடைத்தது என்று கோர்ட்டில் குடைவார்களோ மாட்டார்களோ, அவள் கேட்டுக் குடைந்து எடுத்துவிடுவாள்"

ஆறாவது குச்சியில் பைப் பற்றிக்கொண்டது. ராம்தாஸ் என்ஜின் போல் புகைவிட்டு நிமிர்ந்தார்.

"அப்படியா, வைஜ்..?" என்றார்.

நரேந்திரன் படக்கென்று திரும்பிப் பார்த்தான். வைஜயந்தி இடுப்பில் இரண்டு கைகளையும் ஊன்றி நின்றிருந்தாள். வீட்டுக்குக்

கிளம்பும் மூடில் இருந்தாள்.

"ராத்திரி இரண்டு மணி, மூன்று மணி என்று நீ இன்டர்நெட்டில் மேய்ந்துகொண்டிருப்பதன் காரணம் இப்போதல்லவா புரிகிறது..?"

"ஐயோ, வைஜ். க்ரைம் ஆன்லைனில் மற்ற நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட கேஸ்களைப் பற்றி தெரிந்துகொள்வதற்காகத்தான் இன்டர்நெட் கனெக்ஷனே வைத்திருக்கிறேன்"

"கேஸ்களைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறாய். ஆனால், எந்த மாதிரி கேஸ்களைப் பற்றி என்றுதான் உனக்கு வரும் லெட்டர்களிலேயே புரிந்துவிட்டதே.." வைஜயந்தியின் குரல் எகிறியது.

"தாஸ், இப்போது திருப்திதானே..?" நரேந்திரன் அவரைத் திரும்பி முறைத்தான்.

"நரேன், வைஜ், ப்ளீஸ் மெயின்டெயின் ஆபீஸ் டெக்கோரம். தண்ணி லாரி சண்டையெல்லாம் என் ரூமில் வைத்துக்கொள்ளாதீர்கள்.." பைப்பைக் கடித்துக்கொண்டு புன்னகையை அடக்கியபடி ராம்தாஸ் சொன்னார்.

வைஜயந்தியின் குரல் வெடுக்கென்று குறுக்கில் புகுந்தது. "உன் ரூமில் விடாமல் போன் அடித்துக்கொண்டிருக்கிறது. உன் வெள்ளைக்கார கேர்ள் ஃப்ரெண்ட் எவளோ உன்னுடன் பேசத் துடித்துக்கொண்டிருக்கிறாள்"

நரேந்திரன் சடக்கென்று திரும்பி வெளியேறினான்.

இரண்டு

நரேந்திரன் தன் அறைக்குள் நுழைந்தபோது செல் போன் இசை பாடிக்கொண்டிருந்தது.

அதன் குட்டித் திரையில் பார்த்தான். அவனுக்குப் பரிச்சயமில்லாத எண்.

"ஹலோ"

"ஹாய், நரேன்.. ஆறு, ஏழு தடவை போன் செய்தால்தான் எடுப்பாயா..?"

மறுமுனைக்குரல் வித்தியாசமான ஆண் குரலாக இருந்தது. அந்தக் குரலை அது வரை அவன் கேட்டதில்லை. போன் கருவியில் எதையோ வைத்து அடைத்தது போல் குரல் வெகு மங்கலாக மெலிந்து ஒலித்தது.

"யார் பேசுவது..?"

"சைக்கோ"

"வாட்..?"

"ஒரு சைக்கோ கொலைகாரன்"

"கட் தி ஜோக்ஸ்"

"நரேன், என் அடுத்த திட்டத்தைப் பற்றி உனக்கு ஒரு ஈமெயில் அனுப்பியிருக்கிறேன். படித்துப் பார்"

மறுமுனைத் தொடர்பு அறுந்துபோனது.

"பமீலாவா, பத்மலாவா, எந்த சிறுக்கியிடமிருந்து போன்..?"

வைஜயந்தி நரேந்திரனின் மேஜை மீது ஏறி அமர்ந்துகொண்டாள். எம்பி ஏறியபோது, டீ ஷர்ட் சற்றே மேலேறி இறங்கியது. அதை ரசிக்க முடியாதபடி குரலில் பச்சை மிளகாய்.

"எவனோ மென்ட்டல் கேஸ்.." என்றான் நரேந்திரன்.

"எவனோவா, எவளோவா..?"

"இந்த மாதிரி சந்தேகப்பட்டு சித்ரவதை செய்யும் பெண்களைத் தேடிப் பிடித்துக் கொலை செய்யும் சைக்கோ கொலைகாரன் ஒருத்தன். போதுமா..?"

"வாட்..?"

"ஜீரோ வாட் தான். சைக்கோ மர்டரர் என்றுதான் சொன்னான். அவன் ஒரு ஈமெயில் அனுப்பியிருக்கிறானாம். அதை உடனே படித்துப் பார்க்க வேண்டுமாம்"

வைஜயந்தியின் கண்கள் சுருங்கின. "அப்படிப் போடு அரிவாளை. என்னை வைத்துக்கொண்டு ஈமெயில் எப்படிப் படிப்பது என்று இப்படி ஒரு புருடாவா? அந்த ஈமெயில்காரி லோக்கலா, வெளியூரா..?"

"இன்றைக்கு நான் யார் முகத்தில் விழித்தேன்..?"

"நிச்சயம் என் முகத்தில் இல்லை"

"அதற்கெங்கே வாய்ப்பு தருகிறாய்? நீதான் ராத்திரியானால், உன் அம்மாவோடு போய்ப் படுத்துக்கொள்கிறாயே? காலையில் எப்படி உன் முகத்தில் விழிக்க முடியும்..?"

வைஜயந்தி மேஜையிலிருந்து நழுவி இறங்கினாள்.

"உனக்கு இப்போது ஈமெயில் பார்க்க வேண்டும். அவ்வளவுதானே? பார். கூப்பிட்டவள் பின்னாலெல்லாம் வாலாட்டிக்கொண்டு ஓடு. சீரழிந்து போ"

"பத்தினிப் பெண்கள் சாபமிட்டால் பலிக்கும் என்பார்கள், வைஜ். ப்ளீஸ்.. கடைசி வார்த்தைகளை வாபஸ் வாங்கு. இன்றைக்கு இன்டர்நெட்டை நீயே திற. மெயிலை நீயே செக் பண்ணு. என் கண்ணில்கூட காட்ட வேண்டாம்"

நரேந்திரன் லாப்டாப் கம்ப்யூட்டரை அவள் பக்கம் திருப்பினான்.

"அப்படி எந்தக் குரங்குகள்தான் உனக்கு மெயில் அனுப்புகின்றன, நானும் பார்க்கிறேன்.." என்று வைஜயந்தி கம்ப்யூட்டரை ஆன் செய்தாள்.

"முன்னூற்றி இருபது மெயில் வந்திருக்கிறது.." வைஜயந்தி முகத்தை நொடித்தாள். "அதில் ஆறேழுதான் உபயோகமானது. மற்றதெல்லாம் உன் கவுன் போட்ட கொஞ்சு மாதர்கள் அனுப்பியது. ஏன்ஜலா என்ன சொல்கிறாள், பார்ப்போமா..?"

நரேந்திரன் பதறினான்.

"அந்தப் பலான மெயிலை எல்லாம் ஓபன் பண்ணித் தொலைக்காதே. வைரஸ் வந்து தொற்றிக்கொள்ளப் போகிறது. அப்படியே அழித்துவிடு"

"உன் ஃபிகர்களுக்கு பெயர் வைத்து மாளாது என்று நம்பர் வேறு கொடுக்க ஆரம்பித்துவிட்டாயா..?"

"நம்பரா? ஒன்றுக்கு மேல் இந்த விஷயத்தில் நம்பரே கிடையாது. உன் மேல் சத்தியம்"

"ராவணப் பரம்பரை, சத்தியம் செய்கிறார், சத்தியம். 715 என்பது யார்..?"

நரேந்திரன் ஆவல் தாங்க முடியாமல் வைஜயந்தியின் பின்னால் வந்து நின்றுகொண்டான். 'முதல் எச்சரிக்கை' என்று அழுத்தமான எழுத்துக்களில் அறிவித்த அந்த மின்னஞ்சல் கடிதத்தை அனுப்பியவர் பெயர் 715 என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

"அந்தக் கடிதத்தை மட்டும் திற. பார்ப்போம்.."

வைஜயந்தி க்ளிக் செய்தாள். கடிதம் தமிழில் இணைக்கப்பட்டிருந்தது.

'நாளை, அதாவது ஞாயிறு, பெங்களூரில் நடக்கும் இரண்டு இளம் பெண்களின் கொலைகளுக்கும் நானே காரணம்'

“சொன்னேனே, சைக்கோ என்று ஒருத்தன் பேசினான் என்று. அந்தக் கிறுக்கன் அனுப்பியதாக இருக்கும்..” என்றான், நரேந்திரன்.

வைஜயந்தியின் முகத்தில் விளையாட்டுத்தனம் விலகியது.

“உனக்கேன் கடிதம் அனுப்புகிறான்..?”

“மனரீதியாக பாதிக்கப்பட்ட சிலர் இருப்பார்கள். ஒரு கொலை நடந்தால், ‘நான்தான் கொலை செய்தேன்’ என்று தெனாவட்டாக போலீஸிற்கு எழுதிப் போடுவார்கள். அல்லது ‘கொலைகாரனை நான் பார்த்தேன், அவன் சின்ன கிராப் வைத்திருப்பான், எட்டடி இருப்பான்’ என்றெல்லாம் மொட்டைக் கடிதம் எழுதிப் போடுவார்கள்”

“நீ இதைப் படிக்க வேண்டும் என்று போன் வேறு செய்தானே..?”

“என் ஈமெயில் ஐ.டி அவனுக்கு எப்படித் தெரியும்? என் செல்போன் நம்பர் அவனுக்கு எப்படித் தெரியும்..?”

“அதுதான் உலகத்துக்கே தெரிந்திருக்கிறதே..?”

“நமக்குத் தெரிந்தவர்கள் யாரோ விளையாடுகிறார்கள் என்கிறேன்”

“ஜானா? அவன் அனிதாவுடன் டார்ஜிலிங்கில் விளையாடிக்கொண்டிருப்பான்”

“வந்த போன் சென்னை செல்போன் நம்பர்”

“ஸோ? நாளைக்குக் கொலை எதுவும் நடக்காது என்கிறாயா..?”

“என்னைக் கிண்டல் செய்ய யாரோ போன் செய்தானே, அவன் அனுப்பியிருக்கும் விளையாட்டுத்தனமான மொட்டைக் கடிதம். விட்டுத் தள்ளு”

“கம்ப்யூட்டரை ஆஃப் செய்துவிடலாமா..?”

“வெயிட், வைஜ்..” என்று மெல்ல அவள் இடுப்புகளில் கை வைத்தான், நரேந்திரன். “அதற்குள்ளாகவா வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டாய்? நாம் இந்த நேரத்தில் சேர்ந்து பார்ப்பதற்காகவே சில வெப்சைட்கள் இருக்கின்றன, வைஜ்”

அவன் குரலில் பொங்கி வழிந்த அசட்டுத்தனம் வைஜயந்தியை சடக்கெனத் திரும்பிப் பார்க்க வைத்தது. “ராஸ்க்கல், இப்போது தெரிகிறது, உனக்கு ஏன் அந்த மெயிலெல்லாம் வருகிறது என்று”

அவன் கெஞ்சக் கெஞ்ச, கம்ப்யூட்டரை படக்கென்று அடித்து மூடி அவன் பக்கம் தள்ளிவிட்டு வைஜயந்தி மின்னல் போல் வெளியேறினாள்.

நரேந்திரனின் செல்போன் ஒலித்தது. அந்த சைக்கோதானா? எடுத்தால் மெஸேஜ்.

‘விவேக் ஓபராயுடன் தேநீர் அருந்த வேண்டுமா? உடனே எங்கள் சில கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள்’ என்றது, எஸ். எம். எஸ்.

“போடாங்ங்..க..” என்று நரேந்திரன் போனை சோபாவில்

எறிந்தான்.

மூன்று

பெங்களூர்.

குளிரான இரவு. தெரு விளக்குகளின் வெளிச்சம் எட்ட முடியாத நிழல்களில் அவன் வேகமாக நடந்தான். மார்பை மட்டுமல்லாது கழுத்தையும் மூடும் ஸ்வெட்டர். அதன் மீது காற்றை எதிர்க்கும் ஜெர்கின். கண்களைத் தவிர மற்றப் பகுதிகளை மூடிவிட்ட குரங்குக் குல்லா.

நல்ல வெளிச்சம் இருந்தபோதே வந்து முற்றிலும் ஆராய்ந்துவிட்டுப் போயிருந்ததால், அந்தப் பேட்டையின் அமைப்பு பற்றி அவனுக்கு எந்தக் குழப்பமும் இல்லை. விடுவிடுவென்று நடந்தான். மரங்கள் அடர்ந்த அந்த குறுக்குத் தெருவில் நுழைந்தான். மூன்றாவது வீட்டின் காம்பவுண்டு சுவரை சுலபமாகத் தாவியேறித் தாண்டினான்.

அவன் அணிந்திருந்த ஷூக்கள் ஈரமண்ணில் ஏற்படுத்திய சுவடுகளைக் காலால் தேய்த்து அழித்தான். சிமெண்ட் பாதைக்கு மாறினான். பூட்டியிருந்த அந்த வீட்டைச் சுற்றிக்கொண்டு பின்புறம் வந்து, பின்புறக் காம்பவுண்டு சுவர் மீது ஏறினான். அந்தச் சுவருக்கு அடுத்த பக்கம் பின்தெருவின் வீடு இருந்தது.

அகலக் குறைவான அந்தச் சுவரில் கவனமாக அடி அடியாய் எடுத்து வைத்து நடந்தான். சுவரை ஒட்டி வளர்ந்திருந்த வேப்ப மரத்தின் பருத்த உடலைப் பிடித்து லாகவமாக ஏறினான். மரம் அந்த பின்புற வீட்டின் ஜன்னலை ஒட்டி வளைந்திருந்த பகுதி வந்ததும், கவனமாக, மரத்திலிருந்து ஜன்னலின் வெயில் ஷேடுக்கு மாறினான்.

திறந்திருந்த ஜன்னல் வழியே அவள் தெரிந்தாள். கட்டிலில் கவலையில்லாமல் கலைந்த போர்வைக்குக் கீழ் உறங்கிக்கொண்டிருந்தாள்.

மணிக்கட்டைத் திருப்பி வாட்சைப் பார்த்தான். நேரம் இரவு இரண்டு. ஞாயிற்றுக்கிழமை பிறந்து இரண்டு மணி நேரங்களாகிவிட்டன. கைக்குட்டை எடுத்து மூக்கை மறைத்துக் கட்டிக்கொண்டான். ஜெர்கினுள்ளிருந்து அந்த நீளமான குப்பியை எடுத்தான். செண்ட் பாட்டில் போல் இருந்த அதன் உச்சி அமைப்பை ஜன்னல் வழியே உள்ளே திருப்பி அழுத்தினான்.

அந்த வாசம் தாக்கி அவள் கட்டிலில் தொந்தரவு செய்யப்பட்டு கலைந்து எழுந்தாள். உட்காரப் பார்த்தாள். ஆனால், நிலையாக உட்கார முடியாமல், குழப்பமாக அவனைப் பார்த்துக்கொண்டே, அப்படியே ஒருக்களித்துப் படுத்தாள்.

ஏய், யார் நீ, ஏன் அத்து மீறி நுழையப் பார்க்கிறாய் என்று கேட்க ஆசைப்பட்டு வாயைத் திறந்தாள். ஆனால், உதடுகளோ, பற்களோ

ஒத்துழைக்கவில்லை. அசைய முடியாதவளாகப் பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

அவன் புன்னகையுடன், கருவிகள் எடுத்து ஜன்னல் கிரில் அமைப்பைக் கழற்றத் துவங்கினான்.

மணி இரவு மூன்று நாற்பது.

அவன் கட்டிலில் கிடந்தவளைத் திருப்தியாகப் பார்த்தான். அவள் முகத்தை மூடியிருந்த துணி இரண்டு திட்டுக்களில் மெல்ல மெல்ல சிகப்பாய் நனைந்துகொண்டிருந்தது. தலையணையைச் சுற்றி சிகப்பு ரத்தம் தேங்கியிருந்தது.

அவனுடைய வேலை எப்போதும் கச்சிதம்தான். ஷூக்களைக் கழற்றாமல் ஹால் மொஸய்க்கில் நடந்து வாஷ்பேஸினை அடைந்தான். சோப் போட்டுக் கைகளைத் தேய்த்துக் கழுவினான். ஸ்வெட்டரில் மார்பருகே அவளுடைய ரத்தம் கறையாகப் படிந்திருந்தது. கைகளைத் துடைத்துக்கொண்டு, அந்தக் கறையை மூடி ஜெர்கினை அணிந்தான்.

"அடுத்தது உன் அக்கா.." என்றான்.

அவளிடமிருந்து பதில் எதுவும் இல்லை.

ஜன்னல் திறப்பை அடைந்து, வந்த வழியே வெளியேறினான்.

நான்கு

அலாரம் அடித்து சீனிவாசன் எழுந்தபொழுது ஜன்னலுக்கு வெளியே இன்னும் சற்று இருட்டு இருந்தது.

ஞாயிற்றுக்கிழமைகூட நினைத்த நேரத்துக்குத் தூங்கவிடாமல் அவனை எழுப்பிவிட்ட அலாரத்தின் மேல் அவனுக்குக் கோபமாக வந்தது. கடிகாரத்தின் உச்சியில் அவன் அடித்த வேகத்தில் அலாரம் நின்று கடிகாரம் கவிழ்ந்து படுத்தது.

"மாலினி!" என்று இமைகளை இம்மியளவு திறந்து பக்கத்தில் மனைவியைத் தேடினான்.

அவளுடைய இடம் காலியாக இருந்தது. சதீஷ் மட்டும் கால்களைக் குறுக்கிக்கொண்டு போர்வைக்கடியில் சுருண்டிருந்தான்.

சீனிவாசன் எழுந்து உட்கார்ந்தான்.

இமைகளை முழுவதுமாகத் திறக்க முடியாதபடி ஏதோ ஒரு பாரம் அழுத்தியது.

இன்னும் சற்று தூங்கேன் என்று உடல் கெஞ்சியது. மண்டைக்குள் ஙண்ஙண்வென்று ஏதோ ஒரு வேதனை.

மாலினி எங்கே? பாத்ரூமுக்குப் போயிருக்கிறாளா? அல்லது வழக்கம்போல பால் பாக்கெட்டை எடுத்துக்கொண்டு கிச்சனுக்குள் நுழைந்துவிட்டாளா? அவளைவிட்டு சூடாக ஒரு டம்ளர் காஃபி போடச்சொல்லி சாப்பிட்டால் இந்த மண்டையில் இருக்கும் திருகுவலி குறையும் என்று அவனுக்குத் தோன்றியது.

வலுக்கட்டாயமாக எழுந்தான். சுவரைப் பிடித்துக்கொண்டு தன்னை சுதாரித்தான்.

இமைகள் ஏன் இப்படி கனத்திருக்கின்றன?

ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து தொழிற்சாலைக்குப் போய்க்கொண்டிருப்பவன்தானே! கூடுதலாகவே அரைமணி நேரம் தூங்கியாயிற்று. இன்னும் ஏன் உடல் தூக்கம், தூக்கம் என்று ஏங்குகிறது? அவனுக்குப் புரியவில்லை.

தண்ணீரை வாரி முகத்தில் அடித்துக்கொண்டு கண்களைக் கசக்கிவிட்டால் தூக்கம் பறந்தோடிவிடும் என்று அவனுக்குத் தோன்றியது.

சற்றே மசமசப்பாகத் தெரிந்த வாஷ்பேசினை அடைந்தான். வாஷ்பேசினை அடையும் முன் இன்னும் இரண்டு, மூன்று முறை மாலினியின் பெயரைக் கூப்பிட்டான். எங்கிருந்தும் பதில் இல்லை. குழாயைத் திறந்து கைகளில் தண்ணீரைப் பிடித்து முகத்தில் அடித்துக்கொண்டான்.

தண்ணீர் வழக்கம்போல் இல்லை. சருமத்தில் வேறு ஏதோ மாற்றம் தெரிவதுபோல் இருந்தது. கண்களை வலியத் திறந்து கண்களுக்குள்

தண்ணீரை அடித்துக்கொள்ள கை நிறைய தண்ணீரைப் பிடித்தவன் தூக்கி வாரிப் போடப்பட்டு இரண்டடி பின்னே நகர்ந்தான்.

குழாயிலிருந்து சிகப்பாய் நீர் வந்துகொண்டிருந்தது.

என்ன.. என்ன ஆயிற்று? தண்ணீரின் நிறம் ஏன் இப்படி திடீரென்று சிகப்பாக மாறிப்போனது? பதட்டத்துடன் குழாயை மூடிவிட்டு பாத்ரூமுக்குள் ஓடினான்.

அங்கே பார்த்த காட்சி அவனை நிலைகுலைய வைத்தது.

மயக்கம் முற்றிலும் தெளியாதவனாக கதவைப் பிடித்துக்கொண்டு தன்னை நிதானப்படுத்திக்கொண்டான்.

எப்படி ஃபோனை அடைந்தான்? எப்படி டயல் செய்தான்? எதுவுமே அவனுக்கு சரியாக நினைவில்லை.

அரைமணி நேரத்தில் போலீஸ் அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தபொழுது, சீனிவாசன் சுவர்கள் சேரும் ஒரு மூலையில் தன்னை குறுக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

ஐந்து

சென்னை. ஈகிள்ஸ் ஐ.

நரேந்திரனின் அறை. வைஜயந்தி கம்ப்யூட்டரில் எதையோ தட்டிக்கொண்டிருந்தாள். திடீரென்று வலது காதில் சில்லீரென்று பனிக்கட்டி வைத்தது போல் ஒரு உணர்வு.

சடக்கென்று திரும்பிப் பார்த்தாள்.

நரேந்திரன் கோன் ஐஸ்க்ரீம் நீட்டியபடி நின்றிருந்தான்.

வைஜயந்தியின் கண்கள் பெரிதாக விரிந்தன.

"ஏய்.. எப்போதிலிருந்து ஆஃபீஸிற்கே ஐஸ்க்ரீம் வாங்கி வரத் துவங்கிவிட்டாய்..?" என்றாள் வைஜயந்தி.

"லுக் தேர்.." என்றான் நரேந்திரன்.

அவளுடைய மேஜை மீது சிறிய சதுர தெர்மோக்கோல் பெட்டி.

"புதியதாக ஒரு ஐட்டம் வந்திருக்கிறது என்று பார்லரில் இருந்து எனக்கு மேஸேஜ் வந்தது.. பெட்டி நிறைய வாங்கி வந்துவிட்டேன்.. இது வலது கைக்கு.. இது இடது கைக்கு.." என்று முதுகுக்குப்பின் மறைத்து வைத்திருந்த இன்னொரு கையையும் முன்னே கொண்டுவந்தான். அதில் இன்னொரு கோன் ஐஸ்.

வைஜயந்தி இரண்டு ஐஸ்க்ரீம்களையும் வாங்கிக்கொண்டாள்.

"இந்த ஐஸ்க்ரீம் கொடுப்பதினால் மட்டும் ராத்திரி நேரத்தில் நீ பார்க்கின்ற வெப்ஸைட்களை நான் மன்னிக்கப் போவதில்லை.."

"ச்சீ.. ச்சீ.. எதற்காக மன்னிக்க வேண்டும்? இன்டர்நெட்டில் ஹிஸ்டரி என்று ஒரு பகுதி இருக்கிறது. நான் எந்தெந்த வெப்சைட்டுகளுக்குப் போய்வந்தேன் என்று அதில் நீ செக் செய்துகொள்ளலாம்.."

"நரேன், இன்டர்நெட் பற்றி எனக்கும் தெரியும். தேவையில்லாத வெப்சைட்களின் பெயர்களை அழித்துவிடவும் அதில் வசதி உண்டு.."

வைஜயந்தி ஐஸ்க்ரீமின் உச்சியை நுனிநாக்கால் தொட்டு வருடினாள்.

முழங்காலுக்கு சில அங்குலங்கள் கீழே வரை முக்கால் டைட்ஸ் பேன்ட். மேலே ஒரு சைஸ் சின்னதாக வாங்கியதுபோல உடலை இறுகப் பிடித்திருக்கும் டாப்ஸ்.. கழுத்தில் மிக சன்னமான மணிமாலை.. காதுகளில் லவ்பேர்ட்ஸ் உட்கார்ந்து ஊஞ்சலாடக்கூடிய அளவுக்கு வளையங்கள்.

"வைஜ், யூ லுக் கிரேட்.. அப்படியே உன்னை வெப் கேமிராவில் பதிவு செய்து விளம்பர ஏஜென்சிகளுக்கு அனுப்பினால்.. லைவ்வாக பயன்படுத்திக்கொள்வார்கள்."

"ஐஸ்க்ரீம் விளம்பரத்துக்கா..?"

"ஐஸ்க்ரீம் கம்பெனி, அந்த பிராஜக்டுக்கு சரி என்பார்கள்..

துணிக்கடைக்காரர்கள் உன்னுடைய ட்ரஸ்ஸிற்காக உன்னை சேர்த்துக்கொள்வார்கள். பியூட்டி பார்லர் நடத்துபவர்கள், உன்னுடைய கூந்தலுக்காகவும், புருவங்களுக்காகவும் மாடலாக சேர்த்துக்கொள்வார்கள். நகைக்கடைக்காரர்கள்.."

"ஏய்.. போதும் நிறுத்து.. விட்டால் கிரிக்கெட் காமென்ட்ரிபோல் உடான்ஸ் விட்டுக்கொண்டே போவாயே.."

"கிரிக்கெட் என்றதும்தான் நினைவுக்கு வருகிறது. இன்றைக்கு மஹாராஷ்டிராவும், தமிழ்நாடும் மோதுகின்றன இல்லை..?"

நரேந்திரன் அவசரமாக ரிமோட் பட்டனை அழுத்தினான். டெலிவிஷன் உயிர் பெற்றது.

சானல்களை மாற்றிக்கொண்டே வந்தபொழுது செய்திச்சேனலில் ஒரு கணம் நிலைத்தான்..

கன்னட செய்திகள்..

"இன்று பெங்களூரில் துணிகரமான இரட்டைக் கொலை.." என்றாள் கன்னடப் பெண்மணி.

பெங்களூரில் இரண்டு இளம்பெண்கள் இன்று அதிகாலையில் குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் கொலைகாரனை வலை வீசித் தேடுகிறது என்று செய்தி விரிவடைந்துகொண்டே போயிற்று.

நரேந்திரனின் செல்ஃபோன் ஒலித்தது.

டி.வி ஒலியைத் துண்டித்துவிட்டு ஃபோனை எடுத்து காதில் வைத்தான்.

"நரேந்திரன்? நான்தான்.."

முந்தின தினம் கேட்ட அதே குரல்.

"நேற்றைக்கே உன்னிடம் சொல்லிவிட்டேன். நீ நினைத்திருந்தால் அந்தக் கொலைகளைத் தடுத்திருக்கலாம். ஆனால் அலட்சியம் செய்துவிட்டாயே.. இப்போது பார்த்தாயா? சுமலதாவும், மாலினியும் அநியாயமாகப் பிணமாகிவிட்டார்கள். இரண்டு பேரையும் கொலை செய்தது நான்தான்.." குரலில் சற்று எள்ளல் இருந்தது.

"ஏய்.. யார் நீ.. உன் பெயர் என்ன..?"

"என் பெயர் நேற்றே சொன்னேனே.. மூன்றே எழுத்து.. சைக்கோ.."

"எங்கிருந்து பேசுகிறாய்..?"

"என்ன நரேன், இத்தனை வருட அனுபவத்துக்குப் பிறகு இந்தக் கேள்வியை நீ கேட்கலாமா? எங்கிருந்து பேசுகிறேன்? என்னுடைய செல்ஃபோனிலிருந்து.. இந்த நம்பரை டிரேஸ் செய்து என்னைப் பிடித்துவிடலாம் என்று கனவு காணாதே.. இன்னும் சில நிமிடங்களில் இந்த எண் உபயோகத்தில் இருக்காது. வேறு நம்பர்.. வேறு ஃபோன்.. மறுபடியும் உன்னைத் தொடர்புகொள்வேன்.. அடுத்த கொலை

செய்வதற்கு முன்னால்.."

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

"என்ன நரேன்..?" என்றாள் வைஜயந்தி.

"நேற்று ஒரு கிறுக்கன் ஃபோன் செய்தான் என்று சொன்னேனே. அவனை அவ்வளவு விளையாட்டாக எடுத்துக்கொண்டிருக்கக்கூடாது. பெங்களூரில் நிஜமாகவே இரண்டு பெண்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இரண்டையும் தான்தான் செய்ததாக அவன் கூறுகிறான். வைஜ், ஐஸ்க்ரீமை முடித்ததும் சொல், நாம் பெங்களூர் புறப்படுகிறோம்.."

ஆறு

கண்கள் இரண்டும் சிவந்திருந்தன.

கன்னங்கள் இரண்டும் அழுது அழுது வீங்கி இருந்தன. உடலில் இருந்த சக்தியை எல்லாம் அழுதே இழந்துவிட்டதுபோல சீனிவாசன் நாற்காலியில் துவண்டுபோய் உட்கார்ந்திருந்தார்.

பெங்களூர் போலீஸ் அந்த வீட்டின் சகல அங்குலங்களையும் ஆராய்ந்துகொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் தேவகிருஷ்ணா கைரேகை நிபுணர்களுக்கு சில உத்தரவுகள் கொடுத்துக்கொண்டிருந்தபோது வாசலில் கார் வந்து பிரேக் அடிப்பதை கவனித்தார்.

திரும்பிப் பார்த்தார்.

காரிலிருந்து நரேந்திரனும் வைஜயந்தியும் உதிர்ந்தார்கள்.

"ஹாய் மிஸ்டர் தேவா.." நரேந்திரன் அங்கிருந்தபடியே கையை வீசினான்.

தேவகிருஷ்ணா உடனடியாக புன்னகையை பதிலாகத் தந்தார்.

சென்னையில் ஒரு வழக்குக்காகப் போயிருந்தபொழுது பால்ராஜ் மூலம் நரேந்திரனின் அறிமுகம் கிடைத்திருந்தது. அந்த வழக்கில் அவருக்கு மிக முக்கியமான உதவியை அவன் செய்திருந்தான். அந்த நினைவுகள் சட்டென்று அவருடைய மூளை கம்ப்யூட்டரில் ஊர்வலம் போக, தேவகிருஷ்ணா நரேந்திரனின் கையைப் பிடித்து அழுத்திக் குலுக்கினார்.

"ஹலோ நரேன், என்னைத் தேடியா வந்தீர்கள்..?"

"இல்லை மிஸ்டர் தேவா. நாங்கள் வந்தது இந்தக் கொலையைப் பற்றித் தெரிந்துகொள்ள.."

"வாட்..? பெங்களூரில் நடந்திருக்கும் கொலைக்கு சென்னையிலிருந்து துப்பறியும் நிபுணர்களா? ஏதாவது குறிப்பிட்ட காரணம் உண்டா..?"

"உண்டு.." நரேந்திரன் அந்தத் தாளை எடுத்து அவரிடம் நீட்டினான்.

"நேற்று இரவு எனக்கு ஈ மெயிலில் வந்த கடிதம்..."

இன்ஸ்பெக்டர் பார்வையை அந்தக் கடிதத்தில் ஓட்டினார். தமிழில் இருந்த கடிதத்தின் கீழேயே அதன் ஆங்கில வாசகங்களையும் நரேந்திரன் சேர்த்திருந்தான்.

"ஞாயிற்றுக்கிழமை இரண்டு கொலைகள் செய்வேன் என்று சனிக்கிழமை இரவே உங்களுக்குத் தகவல் தந்துவிட்டானா? யார் இந்த 715..?"

"தெரியாது.." என்றான் நரேந்திரன்.

"இவனிடமிருந்து வரும் முதல் கடிதம் இதுதான்.. என்னுடைய செல்ஃபோன் நம்பரும் அவனுக்குத் தெரிந்திருக்கிறது.

தொடர்புகொண்டு பேசினான். இந்தக் கொலைகளைப் பற்றி நான் தெரிந்துகொள்ளலாமா..?"

"ஷ்யூர்.." என்றார் இன்ஸ்பெக்டர் தேவகிருஷ்ணா.

"ஆனால் உங்களுடன் வந்திருக்கும் வைஜயந்தி காரிலேயே இருக்கட்டும்.."

"ஏன் இன்ஸ்பெக்டர்..?"

வைஜயந்தி சற்றே சூடாகக் கேட்டாள்.

"மேடம், இரண்டு கொலைகளும் குரூரமானவை. இந்த வீட்டில் கொலை செய்யப்பட்டு கிடக்கும் மாலினியின் பிணத்தை நாங்கள் இன்னும் அப்புறப்படுத்தவில்லை. அதைப் பார்த்தால் உங்களால் தாங்க முடியாது.."

"இன்ஸ்பெக்டர், பிறப்பால் நான் ஒரு பெண். ஆனால் தொழில் முறையில் நான் துப்பறியும் நிறுவனத்தைச் சேர்ந்தவள். ரத்தத்தையும், பிணத்தையும் பார்த்து அரண்டு போகிறவள் இல்லை.."

இன்ஸ்பெக்டர் தோள்களைக் குலுக்கினார்.

"எதற்கும் உங்களை தைரியப்படுத்திக்கொண்டு பாருங்கள்.." என்று இருவரையும் அழைத்துக்கொண்டு அந்த வீட்டுக்கு வெளியே வந்தார்.

அது சிறிய தனிமையான வீடு. முக்கால் கிரவுண்டு நிலத்தில் எழுப்பப்பட்டிருந்த எளிமையான வீடு. சுற்றிலும் தோட்டம். வெளியிலிருந்து மொட்டை மாடிக்குச் செல்லும் படிகளில் அவர்களை அழைத்துப்போனார் இன்ஸ்பெக்டர்.

பெங்களூர் காற்று இதமான குளிராக வீசியது. வெளியில் நிறுத்தப்பட்ட போலீஸ் ஜீப்பிலிருந்து கமறலான குரல்கள் ஒலித்துக்கொண்டே இருந்தன.

ஒரே தளம்கொண்ட அந்த வீட்டின் ஜன்னல்களை ஒட்டி படிகள் ஏறின. ஜன்னல் வழியே உள்ளே பார்த்தபொழுது சீனிவாசன் உடைந்து உட்கார்ந்திருப்பது தெரிந்தது. உறவினர்கள் சிலர், பக்கத்து அறையில் பொருந்தாமல் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் இரண்டு வயது சிறுவன் ஒருவன் அப்பாவிடம் போக வேண்டும் என்ற துடிப்புடன் அழுதுகொண்டிருந்தான்.

படிகள் ஏறி மொட்டை மாடிக்கு வந்து சேர்ந்தனர்.

அங்கே நான்கைந்து போலீஸ்காரர்கள் நின்றிருந்தார்கள். ஆகாயத்தில் காகங்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

மொட்டை மாடியில் ஒரு புறமாக வெள்ளைத் துணி போர்த்தப்பட்டு அவள் படுக்க வைக்கப்பட்டிருந்தாள். போர்த்தியிருந்த துணி முழுவதும் நனைந்திருந்தது. தன்னுடைய இயல்பான வெள்ளை நிறத்தை இழந்து சிகப்பை ஏற்றிக்கொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் தேவகிருஷ்ணாவைப் பார்த்ததும் பிணத்தின் அருகே உட்கார்ந்து சில குறிப்புகளை எடுத்துக்கொண்டிருந்த டாக்டர் நிமிர்ந்தார்.

"டாக்டர், திஸ் ஈஸ் நரேந்திரன்.. ஈகிள்ஸ் ஐ என்கிற பிரபல துப்பறியும் நிறுவனத்திலிருந்து வருகிறார். இந்தக் கொலைகளைப் பற்றி அவருக்கு முன்கூட்டியே தகவல் கிடைத்திருக்கிறது. கொலை செய்யப்பட்டிருக்கும் மாலினியைப் பற்றிய முக்கியமான விபரங்களை அவரிடம் சொல்லுங்களேன்.."

டாக்டர் சதுரமான முகத்துடன், சிக்கனமான மீசையை வருடிக்கொண்டே எழுந்து நின்றார்.

"இது சாதாரண மனநிலையில் இருப்பவன் யாரும் செய்ய முடியாத கொலை. ஒரு சைக்கோ தான் செய்திருக்க முடியும்."

சைக்கோ என்ற வார்த்தையைக் கேட்டதும், வைஜயந்தியும் நரேந்திரனும் ஒருவரையொருவர் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டனர்.

"இறந்திருப்பவள் பெயர் மாலினி. முப்பது வயது. அவளுடைய வீட்டில் அவளைத் தவிர, அவள் கணவனும் இரண்டு வயது குழந்தையும்தான். கொலைகாரன் ஆண்கள் இருவரையும் காயப்படுத்தக்கூட விரும்பவில்லை. வெளியிலிருந்தே ஒரு மயக்க மருந்தை அறைக்குள் பாய்ச்சியிருக்கிறான். கணவன், மனைவி, குழந்தை மூவருமே மயக்கமாகியிருக்கிறார்கள். அப்புறம் மாலினியை மட்டும் மொட்டை மாடிக்கு எடுத்துச் சென்றிருக்கிறான் அந்தக் கயவன். அவளுடைய உடைகளைக் களைந்து நிர்வாணமாக்கி கத்தியால் கழுத்து நரம்பை வெட்டியிருக்கிறான். வயிற்றுப் பகுதியில் கத்தியால் குரூரமாக மூன்று என்று ஒரு எண்ணை செதுக்கியிருக்கிறான்.

"எந்தத் தண்ணீர்த் தொட்டியிலிருந்து மாலினியின் வீட்டுக்கு தண்ணீர் போகிறதோ, அந்தத் தொட்டிக்குள் ரத்தம் கசியும் நிலையில் அவளைத் தூக்கிப் போட்டுவிட்டு போயிருக்கிறான்.."

"மை காட்.." என்றாள் வைஜயந்தி.

"நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லை.. மாலினியின் உடலைப் பார்த்ததும் டாக்டராக இருக்கும் எனக்கே அதிர்ச்சியாக இருந்தது. கழுத்துக்குக் கீழ் பார்த்த அதிர்ச்சியைவிட கழுத்துக்கு மேல் அவள் முகத்தைப் பார்த்ததும்தான் அதிர்ச்சி அதிகம்.. வந்தவன் இரக்கமில்லாதவன். மிகவும் கொடூரமானவன். மாலினியின் இரண்டு கண்களையும் தோண்டி எடுத்திருக்கிறான்."

வைஜயந்தி வாயை மூடிக்கொண்டு மாடியின் ஒரு மூலைக்கு ஓடினாள்.

நரேந்திரன் விக்கித்து நின்றிருந்தான்.

"போஸ்ட்மார்ட்டம் முடிந்ததும் அந்த உடலை நான் பார்க்க விரும்புகிறேன்.." என்றான்.

"நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன்.." என்றார் இன்ஸ்பெக்டர் தேவகிருஷ்ணா.

"டேக் கேர் ஆஃப் வைஜயந்தி.."

வைஜயந்தி கொஞ்சம் தண்ணீர் எடுத்து முகத்தில் அடித்துக்கொண்டாள். தன்னை நிதானப்படுத்திக்கொண்டு எழுந்தாள்.

இன்ஸ்பெக்டரிடம் சவாலாகப் பேசியிருந்தாலும், டாக்டர், மாலினியைப் பற்றி சொன்ன தகவல்கள், அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தன.

"டாக்டர், மாலினியின் உயிர் இருக்கும்பொழுதே அவளுடைய உடலில் அந்த எண் எழுதப்பட்டிருக்கின்றதா..?" நரேன் மெல்லிய குரலில் கேட்டான்.

"இல்லை.. கழுத்தை வெட்டி அவளைக் கொலை செய்தபின், அவன் உடலில் மூன்று என்ற எண்ணை எழுதியிருக்கிறான். தண்ணீருக்குள் போட்டிருந்தால் ரத்தம் குறைவாகத்தான் வெளியேறும் என்று அவளைத் தூக்கி தண்ணீர்த் தொட்டிக்குள் போட்டிருக்கிறான். யூ நோ சம்திங். மாலினி இன்றைக்கு நான் பார்த்த இரண்டாவது பலி."

"ஆமாம்.. எனக்கு வந்த தகவல்படி அவன் இரண்டு கொலைகள் செய்திருக்க வேண்டுமே.."

"இறந்துபோனது, வேறு யாருமல்ல.. மாலினியின் தங்கை.. அவள் பெயர் சுமலதா.. அவளுடைய ஃபிளாட்டில் பிணமாக காலையில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறாள். அவளும் இதே மாதிரி குரூரமாகத்தான் கொலை செய்யப்பட்டிருக்கிறாள்."

"அவளுடைய வயிற்றில் இரண்டு என்ற எண் இருந்ததா..?"

இன்ஸ்பெக்டர் இடதும் வலதுமாகத் தலையை அசைத்தார்.

"யூ ஆர் ராங். அவளுடைய உடலிலும் மூன்று என்று இதே எண்தான் இருந்தது. அவளுடைய கண்களும் அவள் இறந்த பிறகு தோண்டி எடுக்கப்பட்டிருந்தன."

"மை குட்னஸ்.. சுமலதாவின் வீடு எங்கே இருக்கிறது..?"

"இங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் தள்ளி. பசவப்பா நகரில்."

"போலீசிற்கு ஏதாவது தடயம் கிடைத்ததா..?"

"ஒரு ஷூ மார்க் கிடைத்திருக்கிறது. அதுவும் சுமலதா வீட்டில்.. இந்த வீட்டில் இதுவரை எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. ஆனால் மனம் தளராமல் ஒவ்வொரு அங்குலமாக ஆராய்ந்துகொண்டிருக்கிறோம்.."

"வெயிட்.." என்றான் நரேந்திரன்.

"இதேபோன்ற கொலைகளைப்பற்றி நான் எங்கேயோ படித்திருக்கிறேனே!"

"யூ ஆர் கரெக்ட்..!.." என்றார் இன்ஸ்பெக்டர்.

"நானும் தகவல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறேன். இது ஒரு தொடர் கொலை. இரண்டு மாதங்களுக்கு முன் சேலத்தில் மங்களம் என்ற பெண் இதே போல் குரூரமாக கொலை செய்யப்பட்டிருந்தாள். அவளுடைய முகத்திலும் கண்கள் தோண்டப்பட்டிருந்தன. அவளுடைய வயிற்றில் ஒன்று என்ற எண் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அதை வெறும் கோடு என்றுதான் போலீஸ் முதலில் நினைத்திருந்தது. அந்த முதல் கொலைக்குப் பிறகு முப்பது நாட்கள் கழித்து பம்பாயில் ஒரு கொலை. அங்கே இறந்துபோனது ஸ்வப்னா என்ற மாடல் அழகி. அவளுடைய கண்களும் குருடாக்கப்பட்டிருந்தன. அவளுடைய வயிற்றில் இரண்டு என்று எழுதப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும்தான் சேலத்தில் மங்களத்தின் வயிற்றில் எழுதப்பட்டிருந்தது கோடு அல்ல, ஒன்று என்ற எண் என்று போலீஸ் முடிவு செய்தது.."

"மங்களம் - ஒன்று, ஸ்வப்னா இரண்டு, சுமலதா மூன்று, என்றால் மாலினி – நான்காகத்தானே இருக்க வேண்டும். கொலைகாரன் கணக்கில் வீக்கா..? இருவருக்கும் மூன்று என்ற எண்ணையே ஏன் எழுதியிருக்கிறான்..?"

"இன்னும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதும், கண்டுபிடிக்க வேண்டியதும் நிறைய இருக்கிறது நரேன்.. கம்.. டாக் டு மிஸ்டர் சீனிவாசன்."

"எனக்கு இங்கே ஐந்து நிமிடங்கள் கிடைக்குமா இன்ஸ்பெக்டர்..?"

"ப்ளீஸ்.." என்றார் தேவகிருஷ்ணா..

"ஆனால் தடயம் ஏதாவது கிடைத்தால் அதை போலீஸிடம் ஒப்படைத்துவிட வேண்டும்."

"ஷ்யூர்.."

"வைஜ், நீ இன்ஸ்பெக்டருடன் கீழே போக வேண்டுமானால் போய்விடு.."

"நான் காரில் இருக்கிறேன்.." என்றாள் வைஜயந்தி.

வைஜயந்தி கீழே இறங்கிப் போனதும், நரேந்திரன் அந்த மாடியிலிருந்து சுற்று வட்டாரத்தை ஆராய்ந்தான்.

அந்த வீடு அப்படி ஒன்றும் தனிமைப்பட்டு ஒதுங்கியிருக்கவில்லை. வீட்டுக்கு இரண்டு பக்கமும் பங்களாக்கள்.. வீட்டுக்குப் பின்னாலும் மூன்றடுக்கு குடியிருப்பு.. வந்தவன் இவர்கள் யார் கண்ணிலும் படாமல் வந்திருக்க வாய்ப்பே இல்லை.

தெருவில் இரவு நேரத்தில் ரோந்து சுற்றும் வாட்ச்மேன்களைக் கேட்டால் ஏதாவது விபரம் கிடைக்கலாம்.

நரேந்திரன் மொட்டை மாடியைச் சுற்றி வந்தான். மூன்றடி உயரத்துக்கு எழுப்பப்பட்டிருந்த சுவரை கவனித்துக்கொண்டே வந்தான்.

ஒன்றிரண்டு இடங்களில் பாதங்கள் பதித்த அடையாளம் இருந்தது. ஆனால் அவை செருப்பு அணியாத பாதங்கள்.. வீட்டைச் சேர்ந்தவர்கள் யாராவது மிதித்திருக்கக்கூடும்.

வீட்டை ஒட்டி வளர்ந்திருந்த தென்னை மரத்தைப் பார்த்ததும், சீனிவாசன்கூட இந்த சுவர் மீது ஏறி தேங்காய்களைப் பறித்திருக்கலாம் என்று தோன்றியது.

சிமெண்ட்டால் கட்டப்பட்ட தண்ணீர்த் தொட்டியின் அருகே வந்ததும் நரேந்திரன் சற்று உன்னிப்பாக கவனித்தான். சூரியன் சாய்கோணத்தில் இருந்தது. அந்த வெளிச்சத்தில் தண்ணீர்த் தொட்டியின் வெளிச்சுவரில் சிகப்பாக தீற்றப்பட்ட கறைகள் தெரிந்தன.

"டாக்டர், மாலினியைக் கொலை செய்ததும் அவளைத் தூக்கி தண்ணீர்த் தொட்டியில் போட்டிருக்கிறான் என்றால் அவளுடைய உடலில் அவனுடைய கைரேகைகள் பதிந்திருக்குமா..?"

"இன்னும் தீவிரமாக கவனிக்கவில்லை நரேன். ஆனால் பார்த்தவரையில் அப்படி ஒன்றும் இல்லை. அவன் முன்னேற்பாடாக கைகளில் கிளவுஸ் அணிந்து வந்திருக்கலாம்."

நரேந்திரன் ரத்தக்கறை தீட்டியிருந்த சுவரில் ஏதாவது கைரேகை பதிந்திருக்கிறதா என்று உன்னிப்பாக கவனித்தான்.

அவனுடைய பார்வையை வேறொரு விஷயம் கவர்ந்தது.

"இன்ஸ்பெக்டர்.." என்று வியப்பான குரலில் அழைத்தான்.

தேவகிருஷ்ணா, வைஜயந்தியை அனுப்பிவிட்டுத் திரும்பியிருந்தார்.

"என்ன நரேன்..?"

"இங்கே பார்த்தீர்களா.. ?"

அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் சுவரில் இருந்த பெயின்ட் பல் பல்லாக உதிர்ந்திருந்தது.

"இது என்ன என்று புரிகிறதா இன்ஸ்பெக்டர்.. ?"

"ஏதோ சீப்பை வைத்துத் தேய்த்தது போல் இருக்கிறது."

"சீப்பு இல்லை இன்ஸ்பெக்டர்.. இது கனமான ஒரு மெட்டல் ஜிப் அழுந்தியதின் அடையாளம். மாலினியின் பாரத்தைத் தூக்கிக்கொண்டு, அவன் தண்ணீர்த் தொட்டிக்குள் இறக்க முயற்சி செய்தபொழுது அவன் உடல் தண்ணீர்த் தொட்டியின் வெளிச்சுவரின்

மேல், அழுந்தியிருக்க வேண்டும். அப்பொழுது அவனுடைய சட்டையிலிருந்த ஸிப் பகுதி சுவரில் அழுந்தியிருக்கிறது. பெரிய பெரிய இடைவெளிகளைப் பார்த்தால் இது பெரிய ஸிப்பாகத் தோன்றுகிறது. கொலைகாரன் ஜெர்கின் அணிந்து வந்திருப்பான் என்பது என்னுடைய யூகம். அக்கம்பக்கத்தில் விசாரிக்கும்பொழுது ஜெர்கின் அணிந்த யாருடைய நடமாட்டமாவது கவனிக்கப்பட்டதா என்று கேட்போம்."

"குட் பாயின்ட்.." என்றார் இன்ஸ்பெக்டர். அந்த இடத்தைச் சுற்றி பென்சிலால் ஒரு கோடு போட்டு 'ஃபாரன்சிக்' நிபுணர்களை அழைத்துக் காட்டினார்.

கொலை செய்யும்போது சட்டையில் ரத்தம் தெறித்துவிடலாம் என்பதால் அதை மறைக்க சட்டையின் மீது அவன் ஜெர்கின் அணிந்து வந்திருக்கலாம் என்று மட்டும் புலப்பட்டது.

மற்றபடி, மொட்டை மாடியில் தரையிலும், தண்ணீர்த் தொட்டியின் கீழேயும் கிடைத்த ரத்தக்கறைகளைத் தவிர வேறு எதுவும் உருப்படியான தடயம் கிடைக்கவில்லை.

"மாலினியின் உடலைத் தண்ணீருக்குள் மெல்ல இறக்கவில்லை அவன். தொப்பென்று போட்டிருக்கிறான். தண்ணீர் தெளித்து சிதறியிருக்கிறது.." என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஸோ, இந்தத் தண்ணீர்த் தொட்டியின் உயரம் ஐந்து அடி. அவன் வெகு உயரமாக இருந்திருந்தால் மாலினியை சுலபமாக தண்ணீர்த் தொட்டிக்குள் இறக்கியிருக்க முடியும். அப்படியில்லாமல் தலைக்கு மேல் உயர்த்தித் தள்ளியிருப்பதைப் பார்த்தால் அவனுடைய உயரம் ஐந்திலிருந்து ஐந்தரை அடிவரையில்தான் இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது."

"பாஸிபிள்.." என்றார் இன்ஸ்பெக்டர்.

அதையும் தன் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக்கொண்டார்.

"கம்.. லெட் அஸ் கோ.. ஏதாவது சாப்பிட்டீர்களா நரேன்..?"

நரேந்திரன் தலையை இடதும் வலதுமாக அசைத்தான்.

"எதுவும் சாப்பிடவில்லை. இனி எதையும் சாப்பிட முடியும் என்றும் தோன்றவில்லை.."

ஏழு

சீனிவாசன் சூடான காப்பிக்குப் பிறகு சற்று தெளிந்திருந்தான்.

எதிரில் அமர்ந்திருந்த நரேந்திரன், வைஜயந்தி, இன்ஸ்பெக்டர் மூவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

"புதிதாக நான் என்ன சொல்லப்போகிறேன்? மாலினி என்னுடைய உயிர். இன்றைக்கு இவ்வளவு மோசமாக எனக்கு விடியும் என்று தெரிந்திருந்தால் நான் விழித்திருக்கவே மாட்டேன்.. மாலினியை கொலை செய்தவன் அதே கத்தியால் என் கழுத்தையும் வெட்டிவிட்டுப் போயிருந்தால் சந்தோஷப்பட்டிருப்பேன்."

சொல்லும்பொழுது மீண்டும் கண்களில் கண்ணீர் திரும்பியது.. குரல் கம்மி உதடுகள் நடுங்கின.

"சீனிவாசன், உணர்ச்சிகளை நாங்கள் மதிக்கிறோம். ஆனால் இவ்வளவு குரூரமாகக் கொன்றவனை நாம் விரைவில் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு உங்களின் ஒத்துழைப்பு வேண்டும்."

"என்ன ஒத்துழைப்பு தர வேண்டும் இன்ஸ்பெக்டர்..?"

"மாலினியைப் போலவே அவள் தங்கை சுமலதாவும் மிகவும் குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கிறாள். இரண்டு கொலைகளையும் செய்தது ஒரே நபராகத்தான் இருக்க வேண்டும்.. இருவருக்கும் பொதுவான எதிரிகள் யாராவது உண்டா..?"

சீனிவாசன் நிமிர்ந்தான்.

"மாலினியை நான் காதலித்து திருமணம் செய்துகொண்டேன். எங்கள் காதலுக்கு முழு ஆதரவு கொடுத்தவள் சுமலதா.. சின்ன வ்யதிலேயே பெற்றோரை இழந்துவிட்டு அக்காவும் தங்கையும் தோழிகளைப் போல நெருக்கமாக வளர்ந்திருந்தார்கள். இருவருக்குள்ளும் ரகசியங்கள் கிடையாது. எங்கே போனாலும் சேர்ந்தே போவார்கள். வருவார்கள். ஆனால் எங்கள் கல்யாணத்துக்குப் பிறகு எங்களுடன் சுமலதா சேர்ந்திருக்க மறுத்துவிட்டாள்.

"கணவன் மனைவி என்றால் சின்னச் சின்ன சச்சரவுகள் இருக்கும். என்னதான் உனக்குத் தங்கையாக இருந்தாலும் நான் உன் விஷயங்களில் தலையிட்டால் சரியாக இருக்காது. நான் விலகியிருப்பதுதான் நியாயம் என்று தெளிவாகச் சொல்லி அவள் தனியே வேறொரு பிளாட் எடுத்திருந்தாள்.

"மாலினி இந்தியன் ரயில்வேயில் புக்கிங் கிளார்க்காக வேலை பார்த்து வருகிறாள், ஸாரி, வேலை பார்த்து வந்தாள். சுமலதாவோ ஒரு தனியார் கம்பெனியில் ரிசப்ஷனிஸ்ட்டாக வேலை பார்த்து வந்தாள்.

"இருவரின் வேலைகளும் வேறு வேறு. பாதைகளும் வேறு வேறு.

அவர்களுக்குப் பொதுவான எதிரிகள் யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

"எப்பேர்ப்பட்ட எதிரியாக இருந்தாலும், அவர்களைக் கொலை செய்தவனுக்கு, அவர்களுடைய முகங்களை அசிங்கப்படுத்தி சிதைப்பதில் என்ன வக்கிரமான சந்தோஷம் இருந்திருக்க முடியும்..?"

சீனிவாசன் குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்துவிட்டான்.

"என் குழந்தை சதீஷுக்கு மாலினி மட்டும் அம்மா இல்லை.. சுமலதாவும் அவனை அம்மா போல்தான் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் இன்னும் கல்யாணம் செய்துகொள்ளவில்லை. அடுத்த வருடம் இன்னும் சிறப்பான வேலையில் சேர்ந்து கூடுதலான சம்பளம் வாங்க ஆரம்பித்த பிறகுதான் கல்யாணம் என்பதில் தீர்மானமாக இருந்தாள். அதற்காக மாலைநேர வகுப்புகளில் மேனேஜ்மெண்ட் கோர்ஸ் படித்துக்கொண்டிருந்தாள். எல்லாம் வேஸ்ட்டாகிவிட்டது."

சீனிவாசனிடம் துருவித் துருவி வெவ்வேறு விதமான கேள்விகளில் அறிய முடிந்தது அவ்வளவுதான்.

"இன்ஸ்பெக்டர், சுமலதாவின் அபார்ட்மென்ட்டை நான் பார்க்க முடியுமா..?"

நரேந்திரன் மெல்ல கேட்டான்.

"நானும் அங்கேதான் போகிறேன். கம்.." என்றார் இன்ஸ்பெக்டர்.

சீனிவாசனை தோள்களில் தட்டிக்கொடுத்து, "உங்களை இவ்வளவு துக்கத்துக்கு உள்ளாக்கிய அந்தக் கொலைகாரனை விரைவில் கண்டுபிடிப்போம்.." என்றான் நரேந்திரன்.

பெங்களூர் சாலைகளின் ஏற்ற இறக்கங்களில் போலீஸ் ஜீப் விரைந்தது.

"சுமலதாவும், மாலினியும் கொலை செய்யப்பட்ட நேரத்தை டாக்டரால் கணிக்க முடிந்ததா..?" வைஜயந்தி கேட்டாள்..

"உத்தேசமாகச் சொல்லியிருக்கிறார் மேடம்.." என்றார் தேவகிருஷ்ணா.

"சுமலதா அவளுடைய அபார்ட்மென்ட்டில் இரவு சுமார் இரண்டு மணிக்கு இறந்திருக்கிறார். மாலினியை எடுத்துக்கொண்டு போய் தண்ணீர்த் தொட்டியில் போட்டது போல, சுமலதாவை அவன் எங்கேயும் தூக்கிப் போகவில்லை. கொலை செய்த இடத்திலேயே போட்டுவிட்டுப் போய்விட்டான். கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் கழித்து அதாவது நான்கு மணிக்கு மாலினி கொலை செய்யப்பட்டிருக்கிறாள்."

சுமலதாவின் வீடு இருந்த தெருவிற்குள் கார் நுழைந்தது. நிறுத்தத்துக்கு வந்தது.

அந்த சிறிய அபார்ட்மென்ட் கட்டிடத்தின் வாசலில் போலீஸ் ஜீப்கள்

நின்றிருந்தன.

ஆர்வம்கொண்ட மக்கள் தத்தம் வேலைகளை விட்டுவிட்டு மொட்டை மாடியிலும், பால்கனியிலும், தெருவிலும் அங்கங்கே நின்றுகொண்டு போலீஸ்காரர்களின் அசைவுகளையே உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தனர்.

நரேந்திரன் அந்த குடியிருப்புப் பகுதியைச் சுற்றி வந்தான்.

"சுமலதாவின் வீடு எத்தனாவது மாடி..?"

"இரண்டாவது மாடி.." என்றார் தேவகிருஷ்ணா.

"அதோ அந்த மரம் வளைந்து செல்கிறதே.. அந்த ஜன்னல்.. அந்த வழியேதான் கொலைகாரன் உள்ளே சென்றிருக்கிறான். கிரில்லை பொறுமையாகக் கழற்றி எடுத்து வைத்துவிட்டு உள்ளே நுழைந்தவன் வெளியேறும்போது ஒரே ஒரு ஸ்க்ரூவை மட்டுமே முடுக்கியிருக்கிறான்."

"அக்கம் பக்கத்திலிருப்பவர்களை விசாரித்தீர்களா..?"

"நிறைய விசாரித்துவிட்டோம்.. அந்த நேரத்தில் சந்தேகப்படும்படியாக நடமாட்டம் இருந்ததாக யாரும் சொல்லவில்லை. பக்கத்துத் தெருவில் பெரிய பங்களாக்கள், அதற்கு வாட்ச்மேன்கள்கூட உண்டு. அவர்களிடம்கூட கேட்டுப் பார்த்துவிட்டேன். அந்த நேரத்தில் எந்த வாகனமும் இந்தப் பக்கம் வந்ததாகத் தெரியவில்லை..." என்றார் இன்ஸ்பெக்டர்.

"அவன் வண்டியை எடுத்துக்கொண்டு வந்திருந்தாலும் வெகு தூரத்திலேயே அதை நிறுத்திவிட்டு நடந்து வந்து காரியத்தை முடித்துவிட்டுப் போயிருக்க வேண்டும்.." என்றான் நரேந்திரன்.

"இங்கே பார்த்தீர்களா இன்ஸ்பெக்டர்..?"

அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் காம்பவுண்டு சுவரின் மீது தேய்க்கப்பட்ட ஷூவின் அடையாளம்.

"கவனித்துவிட்டோம்.." என்றார் தேவகிருஷ்ணா.

"இதை ஃபோட்டோ எடுத்தாயிற்று.. அளவுகளை குறித்துக்கொண்டாயிற்று. ஷூவின் தடயம் தெரியக்கூடாது என்று அழித்திருப்பதிலிருந்து அவன் இந்தப் பக்கமாகத்தான் வந்திருக்க வேண்டும் என்று யூகித்தோம். இந்த மரத்தின் வழியே ஏறி அவன் முதல் மாடியின் சன்ஷேட் மீது குதித்திருக்கிறான். அங்கே நின்றுகொண்டே இரண்டாவது மாடியின் ஜன்னல் கிரில்லை திறந்திருக்கிறான் அல்லது மரத்தின் மீது அமர்ந்தபடியே அவனால் இந்தக் காரியத்தை செய்திருக்க முடியும்.. வீட்டுக்குள் போவோமா..?"

நரேந்திரன் அந்தப் பக்கம் அதிக நேரம் தேடிப் பார்த்தான். எந்த குறிப்பும் தென்படவில்லை..

லிஃப்டில் இரண்டாவது மாடியில் இறங்கிக்கொண்டார்கள். வீடு

திறந்திருந்தது.

"இந்த வீட்டில் முதலில் பிணத்தைக் கண்டுபிடித்தது யார்..?"

"போலீஸ்தான்.." என்றார் தேவகிருஷ்ணா.

"மாலினி இறந்துகிடந்ததைப் பார்த்து போலீஸிற்கு தகவல் கொடுத்த சீனிவாசன் மச்சினியிடம் இந்தத் தகவலைத் தெரிவிப்பதற்கு பலமுறை ஃபோனில் முயற்சி செய்து பார்த்திருக்கிறார். ஃபோனை யாரும் எடுக்கவில்லை என்றதும் எங்களிடம் சொன்னார். நாங்கள் வந்து காலிங்பெல்லை அழுத்திப் பார்த்தோம். யாரும் திறக்கவில்லை. வாசலிலேயே பால் பாக்கெட்டும், தினசரியும் கிடந்தன.

"சந்தேகம் வந்து செக்ரட்டரியைக் கேட்டு மாற்றுச்சாவி வாங்கி கதவைத் திறந்தோம். உள்ளே நாங்கள் பார்த்த காட்சியை இப்பொழுது நீங்கள் பார்க்கப்போகிறீர்கள்."

தேவகிருஷ்ணா நரேந்திரனை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார்.

வைஜயந்தி தன்னை நிலைப்படுத்திக்கொண்டு பின்தொடர்ந்தாள்.

உள்ளே நுழைந்ததும் சிறிய ஹால். உயர் மத்திய தர குடும்பத்துக்குத் தேவயான அத்தனை வசதிகளும் அங்கே இருந்தது.

சோஃபா, டெலிவிஷன், டிவிடி பிளேயர், ஸ்டீரியோ சிஸ்டம், ஏர்கண்டிஷன், அலங்காரமான செயற்கை பூச்சாடி.

ஹாலைத் தாண்டியதும் இடதுபுறம் சமையலறை. வலதுபுறம் படுக்கையறை. படுக்கையறைக் கதவைத் திறந்து உள்ளே அடியெடுத்து வைத்ததும் நரேந்திரன் பிரேக் அடித்து நின்றான். மெத்தை முழுவதும் சிகப்பாய் இருந்தது.

சுமலதாவை மூடியிருந்த துணியும் சிகப்பாக மாறியிருந்தது.

படுக்கையறையின் ஜன்னலை நெருங்கி எதையும் தொடாமல் நரேந்திரன் ஆராய்ந்தான்.

இன்ஸ்பெக்டர் சொன்னதுபோல ஒரே ஒரு ஸ்க்ரு பொருத்தப்பட்ட கிரில் சற்று ஒதுங்கியிருந்தது. கைரேகை நிபுணர்கள் ஏற்கெனவே அதிலிருந்த அத்தனை ரேகைகளையும் ஒற்றி எடுத்ததற்கான பவுடர் அடையாளங்கள் தெரிந்தன.

"எனக்கென்னவோ இந்த ரேகைகள் எல்லாம் சுமலதாவின் ரேகைகள் என்றுதான் தோன்றுகின்றன..." என்றார் தேவகிருஷ்ணா.

"வந்தவன் சாமர்த்தியசாலி. இங்கேயும் கிளவுஸ் அணிந்துகொண்டுதான் வந்திருப்பான். என்னால் சில விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை.." என்றான் நரேந்திரன்.

"இரவு இரண்டு மணிக்கு கிரில்லில் இருக்கும் பன்னிரண்டு

ஸ்க்ரூக்களையும் ஒருவன் கழற்றிக்கொண்டு உள்ளே வரும் வரை உறக்கம் கலையாமல் சுமலதா தூங்கிக்கொண்டிருப்பாளா என்ன..?"

"இங்கேயும் அவன் மருந்தடித்துவிட்டுத்தான் வந்திருக்கிறான். நாங்கள் வந்து அறைக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழையும்பொழுது மிக மெல்லியதாக மயக்க மருந்தின் வாடையை உணர முடிந்தது.

"டாக்டரும் எங்கள் சந்தேகத்தை உறுதி செய்தார், சுமலதாவை மெலிதான மயக்கத்துக்குள்ளாக்கிவிட்டுத்தான் அவளையும் அவன் கொலை செய்திருக்கிறான்."

"அக்காவையும், தங்கையையும் ஒரே மாதிரி குரூர முறையில் அவன் தீர்த்துக்கட்டியிருக்கிறான்."

"அவன் அவன் என்று சொல்கிறோமே அது ஆண்தான் என்று நமக்கு எப்படித் தெரியும்..?" என்றாள் வைஜயந்தி.

"பெண்களுக்கு இவ்வளவு கொடூரம் இருக்காது. நரேந்திரனுக்குக் கடிதம் அனுப்பியதும், ஃபோனில் பேசியதும் ஒரு ஆண்குரல்.. எனக்கென்னவோ அந்த சைக்கோ ஒரு ஆணாகத்தான் இருப்பான் என்று தோன்றுகிறது."

"சுமலதாவைப் பற்றியும், மாலினியைப் பற்றியும் இன்னும் நிறைய தகவல்கள் நாங்கள் சேகரிக்க வேண்டும். சேகரித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவர்களுக்கும், பம்பாயில் கொலையான ஸ்வப்னா, சேலத்தில் கொலை செய்யப்பட்ட மங்களம் அவர்களுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.." என்றான் நரேந்திரன்.

வைஜயந்தியும், நரேந்திரனும் அந்த அறையின் பல அங்குலங்களையும் தீவிரமாகக் கண்காணித்துப் பார்த்தனர்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த சுமலதா இருபத்திமூன்று வயதில் புத்தம்புது மலர்போல பூத்துச் சிரித்து சந்தோஷமாகத் தெரிந்தாள்.

வளைந்த புருவங்களுக்குக் கீழ் பெரிய பெரிய கண்கள்.. அந்தக் கண்களில் நட்பும், சிரிப்பும் இருந்தன. அந்தக் கண்கள் இப்பொழுது..

"போகலாம்.." என்றான் நரேந்திரன்.

எட்டு

பெங்களூர் – சென்னை நெடுஞ்சாலையில் நுழைவதற்கு முன்னால் ஐஸ்க்ரீம் பார்லரின் வாசலில் காரை நிறுத்தினான் நரேந்திரன்.

"எனக்கு வேண்டாம்.." என்றாள் வைஜயந்தி.

சுமலதா, மாலினி இருவரும் கொலை செய்யப்பட்ட விதத்தைப் பார்த்ததிலிருந்து அவளது உற்சாகம் காணாமல் போயிருந்தது.

"சைக்கோ கொலைகாரர்கள் என்றாலே இப்படித்தான் வக்கிரமாக ஏதாவது செய்வார்களா நரேன்..?"

"ஆமாம். ஆனால் நமக்கு ஃபோன் செய்தவன் உண்மையிலேயே கொலைகாரன்தானா..?"

"ஏன் நரேன் இந்த சந்தேகம்..?"

"சைக்கோ கொலைகாரர்கள் கூடியவரை மாட்டிக்கொள்ளாமல் மேலும் மேலும் கொலைகளைச் செய்துகொண்டே இருக்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். பெரும்பாலும் அதீத புத்திசாலிகளாகவும் இருப்பார்கள். திட்டமிட்டு, மாட்டிக்கொள்ளாதபடி கொலைகளைச் செய்வார்கள்..

"சேலத்தில் ஐம்பது வயதுப் பெண்மணி, ப்ம்பாயில் இருபத்திமூன்று வயது இளம்பெண், பெங்களூரில் சகோதரிகள் இருவர் என்று தொடர்பில்லாமல் அவன் கொலைகளை செய்வதைப் பார்த்தால் சுலபத்தில் அவனைப் பிடித்துவிட முடியும் என்று தோன்றவில்லை.. அப்படியிருக்க, அவனாக ஃபோன் செய்து, ஈமெயில் அனுப்பி என்னை உசுப்புவானேன்..?"

"இவன் ஒரு வித்தியாசமான சைக்கோவாக இருக்கலாம். போலீசுக்கு சவால்விட்டு சிலர் குற்றங்களை செய்வார்கள் என்று பார்த்திருக்கிறோம். இவன் துப்பறியும் நிறுவனத்துக்கு சவால்விட்டு கொலைகளை செய்வான் போலிருக்கிறது."

"இல்லை வைஜ். அவன் விட்டிருக்கும் தடயங்கள் மோசமானவை."

"தடயங்களா.. என் கண்களுக்கு எதுவும் தென்படவில்லையே.."

"இது கண்ணில் தென்படும் தடயமில்லை. கவனித்து ஆராய வேண்டிய தடயம்.. என்னிடம் அவன் ஃபோன் பேசியபொழுது அவனது எண் என் ஃபோனில் பதிவாகியிருக்கிறது. அதை வைத்து அவனை ட்ரேஸ் செய்யலாம்."

"முடியாதே நரேன்.. அவன்தான் ஃபோனை மாற்றிவிடுவேன் என்றானே.."

"மாற்றினாலும் முந்தின ஃபோன் வாங்குவதற்கு அவன் ஃபோன் கம்பெனியில் முகவரி பற்றி ஏதாவது அத்தாட்சி கொடுத்திருக்க வேண்டும். போலீசால் அதைக் கண்டுபிடிக்க முடியும். இரண்டாவதாக

அவன் நமக்கு அனுப்பிய ஈமெயில் 715 என்ற அடையாளத்துடன் அவன் ஈமெயில் அனுப்பியிருந்தாலும் அந்த அடையாளத்துடன் பதிவாகியிருக்கும் நபரின் விபரங்களை நாம் இன்டர்நெட் சர்வீஸில் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும். ஏதாவது ஒரு சிறு உண்மையாவது நமக்கு அதில் கிடைக்கக்கூடும்."

"பால்ராஜிடம் சொன்னால் நிச்சயம் உதவி செய்வார், நரேன்."

"எஸ்.. நமது அடுத்த இலக்கு பால்ராஜ்."

ஒன்பது

பால்ராஜ் கிச்சனில் முட்டை ஆம்லெட் போட்டுக்கொண்டிருந்தார்.

"ஹாய் நரேன், என்ன ஜோடியாக இந்த ராத்திரி நேரத்தில் வந்திருக்கிறாய்..?" என்று கதவைத் திறந்தார்.

அவரது இடது கையில் விரல்களுக்கிடையில் புகையும் சிகரெட்டைப் பார்த்ததும் நரேந்திரன் புருவங்களை உயர்த்தினான்.

"ரோஸ்லின் ஆன்ட்டி ஊருக்குப் போயிருக்கிறார்களா..?"

"அஃப்கோர்ஸ்.. அதனால் கிச்சன் வேலையும் சேர்ந்துவிட்டது. ஹவ் அபௌட் ஆம்லெட் ஃபார் போத் ஆஃப் யூ..?"

"நீங்கள் முட்டையை ஆம்லெட் போடுகிறீர்கள்.. மனிதர்களையே ஆம்லெட் போடும் ஒருவனைப் பற்றிப் பேச வந்திருக்கிறோம், பால்ராஜ்."

பால்ராஜ், வீட்டில் விறைப்பான உடைகளை அணியாமல், ஷாட்ஸும் மேலே வெள்ளை பனியனும் அணிந்திருந்தார். சீருடையில் மட்டுமே பார்த்திருந்தவர்களுக்கு இந்த உடையில் புதிதாக யாரும் பார்த்தால் அவரை போலீஸ் இன்ஸ்பெக்டர் என்றே மதிக்க மாட்டார்கள்.

சிகரெட்டை நசுக்கி ஜன்னலுக்கு வெளியே எறிந்துவிட்டு பால்ராஜ் வந்து சோஃபாவில் அமர்ந்தார்.

"இரண்டு பேரும் ரொம்ப தூரம் பயணம் செய்துவிட்டு வந்தாற்போல் தெரிகிறது..?"

"எஸ் பால்ராஜ்.. பெங்களூர் போயிருந்தோம்."

"ஈவினிங் ஹனிமூனுக்கு ஒத்திகையா..?"

"போயும் போயும் பெங்களூருக்கா போவேன்? சொல்லும்பொழுதாவது அன்டார்ட்டிகா, ஆஸ்திரேலியா என்று பெரிய பெயராகச் சொல்லக்கூடாது..?" நரேந்திரன் ஜோக்கடித்தாலும் அவன் முகத்தில் சிரிப்பு இல்லை.

"உன்னை என்ன அரித்துக்கொண்டிருக்கிறது நரேன்..?"

பால்ராஜ், ஆம்லெட்களை தட்டுகளில் வைத்து மேஜைமீது பரத்திக்கொண்டே வந்து அமர்ந்தார்.

நரேந்திரன் தனக்கு வந்த ஈமெயில் பற்றியும், ஃபோன் பற்றியும், அதை அவன் அலட்சியம் செய்தது பற்றியும், பெங்களூரில் உண்மையிலேயே இரண்டு பெண்கள் கொலை ஆனது பற்றியும் விவரமாக எடுத்துச் சொன்னான்.

"நானும் செய்தியைப் பார்த்தேன். தமிழ்நாடு போலீசும் அவனைத் தீவிரமாகத் தேடிக்கொண்டிருக்கிறது. சேலத்தில் அவன் செய்த கொலையும் கிட்டத்தட்ட இதைப் போலத்தான்.

"மங்களம் என்ற ஐம்பது வயதுப் பெண்மணி- பள்ளிக்கூடத்தில்

டீச்சராக இருந்திருக்கிறாள். இரண்டு வருடங்களுக்கு முன்பு கணவனும் ஒரு விபத்தில் இறந்துவிட்டார். தனியாக போர்ஷன் எடுத்து அங்கே வாழ்ந்துகொண்டிருந்தாள். அக்கம்பக்கத்தில் அவளுக்கு நல்ல பெயர். பள்ளியிலும் குழந்தைகளுக்கு அவள் மிகவும் பிடித்த டீச்சர். கடிகாரம் போல காலை எழுந்ததும் வாக்கிங். அப்புறம் கோவில். பிறகு பள்ளிக்கூடம். மாலை நேரத்தில் இலவசமாக டியூஷன். சீக்கிரமே சமைத்து சாப்பிட்டுவிட்டு தூக்கம் என்று வழக்கமாக வைத்துக்கொண்டிருந்த பெண்மணி.

"இரவு நேரத்தில் அவள் வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவளை கொலை செய்து நிர்வாணமாக்கி, வயிற்றில் ஒரு கத்தியால் கோடு இழுத்துவிட்டுப் போயிருந்தான். அவளுடைய கண்கள் இரண்டையும் பெயர்த்து எடுத்திருந்தான். அவன் கொஞ்சமும் இரக்கமில்லாதவனாக இருக்கக்கூடும் என்று போலீசுக்குப் புரிந்தது.

"அந்த வீட்டில் எந்தவித தடயமும் கிடைக்கவில்லை. அக்கம்பக்கத்தில் துருவித் துருவி விசாரித்ததில் சந்தேகப்படும்படியாக நடமாட்டம் எதையும் பார்த்ததாக யாரும் சொல்லவில்லை.

"இந்த சமயத்தில்தான் பம்பாய் கொலை பற்றி எங்களுக்குத் தகவல் வந்தது. இதேபோன்ற கொலை. அந்தப் பெண் வயிற்றில் இரண்டு என்று எழுதியிருப்பதைப் பார்த்ததும்தான், மங்களத்தின் வயிற்றில் எழுதப்பட்டிருந்தது நம்பர் ஒன் என்று எங்களுக்குப் புரிந்தது.

"தமிழ்நாடு போலீஸ் பம்பாய்க்குக்கூட போய் தேடிவிட்டு வந்துவிட்டது. உபயோகமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இப்பொழுது பெங்களூருக்குக் கிளம்பிப் போயிருக்கிறது. பழைய இரண்டு கொலைகளைப் பற்றிய எல்லா விபரங்களையும் என்னால் சேகரித்துத் தரமுடியும்.."

"பால்ராஜ், இந்த ஃபோன் அப்புறம் ஈமெயில் அடையாளம் இவற்றை வைத்து எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் அவனை நெருங்கிவிட வேண்டும்."

"எனக்கு ஒரு சந்தேகம்.." என்றாள் வைஜயந்தி.

"இந்த சைக்கோ கொலைகாரர்கள் பெரும்பாலும் பெண்களையே தேர்ந்தெடுத்து இப்படி கொடூரமாக கொலை செய்கிறார்களே.. என்ன காரணம்..?"

"வைஜ், இதை மனரீதியாகப் பார்த்தால் சில விபரங்கள் தெரியும். ஆண்களால் வஞ்சிக்கப்பட்ட பெண்கள் தங்களுக்குள் ஒரு சோகத்தைப் புதைத்துக்கொள்ளும் அளவுக்கு பக்குவம் பெற்றிருக்கிறார்கள். அந்த பக்குவம் இல்லாதவர்கள் தற்கொலை

என்ற முடிவுக்குப் போய்விடுகிறார்கள்.

"ஆனால், ஆண்களைப் பொறுத்தவரையில் ஒரு பெண்ணால் வஞ்சிக்கப்பட்டால் அந்தப் பெண் இனத்தையே அழித்துவிட வேண்டும் என்று முட்டாள்தனமான வன்மத்தை வளர்த்துக்கொள்கிறார்கள்.

"எல்லா ஆண்களுக்கும் மனதில் இருக்கிறது.. என்னைப் போன்றவர்களுக்கு தைரியம் இல்லை.. இந்த சைக்கோ கொலைகாரர்களிடம் அந்த தைரியத்தைப் பார்க்க முடிகிறது.." என்றான் நரேந்திரன், குரலைக் குறைத்துக்கொண்டு.

சொன்னவுடன் மூக்கின் மேல் பீங்கான் தட்டால் அடிபட்டான். பால்ராஜ் சிரித்தார்.

நரேந்திரனின் செல்ஃபோன் அடித்தது. எண்களைப் பார்த்தான். புருவங்கள் உயர்ந்தன. ஆன் செய்ததும் எதிர்முனையில் அந்த ஆண்குரல் ஒலித்தது.

"என்ன நரேன், போலீஸ் வரை போய்விட்டாயா? எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. முதலில் நான் செய்த எச்சரிக்கையை நீ மதிக்கவில்லை. உண்மையிலேயே இரண்டு பெண்களின் தலை விழுந்ததும் உனக்கு பயம் வந்துவிட்டது. போலீசில் சொல்லி என் செல்ஃபோன் நம்பரை வைத்து என்னைக் கண்டுபிடிக்கலாம் என்று நீ திட்டமிட்டு இருக்கலாம். நான் ஃபோன் நம்பரை ஏற்கெனவே மாற்றிவிட்டேன் என்பதை, இப்பொழுது இந்த நம்பரைப் பார்த்ததும் நீ புரிந்துகொண்டிருப்பாய். பழைய நம்பரை வைத்து முகவரி கண்டுபிடிக்க நீ கஷ்டப்பட வேண்டாம். எந்த முகவரியில் அது பதிவாகியிருக்கிறது என்பதை நானே சொல்கிறேன். குறித்துக்கொள்.

"49, கங்கை அம்மன் தெரு, ராயப்பேட்டை

"அங்கே போய் தேடிப் பார்க்காதே. அங்கே ஒரு மருந்துக்கடைதான் இருக்கும். எப்படி சரியான முகவரியில்லாமல் ஒரு ஃபோன் வாங்க முடிந்தது என்று யோசிக்கிறாயா? யோசி.. நன்றாக யோசி.. ரொம்ப சிம்ப்பிள். செலவு சற்று அதிகம், அவ்வளவுதான்.. அந்த மருந்துக்கடையில் வேலை பார்ப்பவரின் பர்ஸ் சில நாட்களுக்கு முன் பிக்பாக்கெட் அடிக்கப்பட்டது.

"அதில் டிரைவிங் லைசென்ஸின் காப்பி இருந்தது. அதைக் காட்டி ஃபோன் கனெக்ஷன் வாங்குவது எனக்கு கஷ்டமாகவேயில்லை. இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிறேனே ஒரு ஃபோன், அதை வைத்துக்கொண்டு என் முகவரியைத் தேடினாலும் உனக்கு பிரயோஜனமில்லை. அது ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியின் டிரைவர் ஒருவரின் முகவரி.."

அவன் சின்னதாக சிரித்துவிட்டுத் தொடர்ந்தான்.

"இன்டர்நெட்டைப் பொறுத்தவரையில் முகவரிக்கு அத்தாட்சி யாரும் கேட்பதில்லை.. ஒவ்வொரு இடத்திலிருந்து ஒவ்வொரு முகவரி கொடுத்து ஒவ்வொரு விதமான அடையாளத்தை நான் ஏற்படுத்திக்கொள்கிறேன்.

"உன்னிடம் வீணடிக்க நிறைய நேரமிருந்தால் அந்த இன்டர்நெட் சர்வீஸ் சென்ட்டர்களுக்குப் போய் எந்த கம்ப்யூட்டரிலிருந்து நான் முகவரியை பதிவு செய்தேன் என்று வேண்டுமானால் நீ கண்டுபிடிக்கலாம்.

"அங்கே இருப்பவனிடம் என்னைப் பற்றி அடையாளம் கேட்டால் ஆளாளுக்கு ஒவ்வொன்று சொல்வார்கள். வெறும் அடையாளங்களை வைத்து என்னைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று நினைக்கிறாயா நரேன்..?" அவன் சிரிப்பு தொடர்ந்தது.

"உனக்கு என்னதான் வேண்டும்? உன் பெயரையாவது சொல்.." நரேந்திரன் பரபரத்தான்.

"என் பெயரை எத்தனை தடவை சொல்வது? என் பெயர் சைக்கோ. அடுத்தது நான் என்ன செய்யப்போகிறேன்? உனக்குப் பதற்றமாக இருக்கலாம். துடிப்பாக இருக்கலாம். விரைவில் ஈமெயில் வரும். இன்ஸ்பெக்டரிடம் நான் விசாரித்ததாகச் சொல்.."

மறுமுனை தொடர்பு அறுந்தது.

ஃபோனை அணைத்ததும் நரேந்திரனின் முகத்தில் ஆத்திரம் குமுறியது.

"ராஸ்கல்.. பின்னாலேயே தொடர்ந்து வந்து எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறான். ஒளிந்து நின்று முதுகில் துப்புகிறான்."

"அவன்தானா..?" என்றாள் வைஜயந்தி.

"ஆமாம்."

"அவனுடைய அடுத்த நடவடிக்கை பற்றி ஈமெயில் வருமாம்.. தன்னுடைய விதவிதமான முகவரிகளை ஃபோனிலேயே சொல்கிறான். அவன் நேரடியாக சவால் விடுகிறான்.."

பால்ராஜ் புன்னகைத்தார்.

"பதட்டப்படாதே நரேன். இந்த சைக்கோக்களிடம் திடீரென்று இந்த மாதிரி ஒரு மாற்றம் ஏற்படும். பெரும்பாலும் அவர்கள் பிரபலத்துக்காக ஏங்குபவர்கள். பொதுமக்களை பீதி அடையச் செய்யக்கூடாதே என்பதற்காக போலீஸ் இந்தக் கொலைகளைப் பற்றிய முழு விபரங்களையும் வெளியிடுவதில்லை. அதனால் அவன் மிகவும் சிரமப்பட்டு செய்த ஒரு செயலுக்கு சரியான விளம்பரம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் அவனை ஆட்டிப் படைக்கிறது. அந்த விளம்பரத்துக்காகத்தான் இப்பொழுது உன்னைத்

தொடர்புகொண்டிருக்கிறான். உனக்கு அனுப்பிய ஈமெயில் போலவே அடுத்தது பத்திரிகைக்காரர்களுக்கும் அனுப்புவான்.

"ஆனால், எவ்வளவு புத்திசாலியான குற்றவாளி என்று தன்னை நினைத்துக்கொண்டாலும் அவனே எதிர்பாராத ஒரு இடத்தில் அவன் சறுக்கிவிடுகிறான். சின்னதாக ஒரு தப்பு செய்துவிட்டு போலீசிடம் சிக்கிக்கொள்கிறான். இந்த சைக்கோ மட்டும் விதிவிலக்காக இருப்பானா என்ன? இவனும் ஏதோ ஒரு தடயத்தை விட்டிருக்கிறான். நம் கண்ணில்தான் அது இன்னும் படவில்லை.."

"யூ ஆர் ரைட்.." என்றான் நரேந்திரன்.

"பால்ராஜ், நீங்கள் முந்தைய இரண்டு கொலைகளைப் பற்றிய ஃபைலைக் கொடுத்ததும், அந்த இடத்துக்கே போய் நான் சில தகவல்களை சேகரிக்கப்போகிறேன்.."

"ஒன் மோர் ஆம்லெட்.." என்றார் பால்ராஜ்.

"நோ.. தேங்க்ஸ்.. இதற்கு மேல் சாப்பிட்டால் வயிற்றில் கோழிப்பண்ணை வைத்ததுபோல் ஆகிவிடும்."

நரேந்திரன் எழுந்து தட்டுகளை சேகரித்து கிச்சனுக்குள் நுழைந்தான்.

பத்து

அரக்கு டிசைன் போட்ட மஞ்சள் மிடியை அணிந்திருந்தாள்.

கண்களைச் சுற்றி மெலிதாக மையிட்டிருந்தாள். நெற்றியில் கல் பதித்த ஸ்டிக்கர் பொட்டு. கூந்தலை விரித்துவிட்டிருந்தாள். காதுகளில் சின்னச் சின்ன ஜிமிக்கிகள். கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலி.

பெண்கள் பத்திரிகையின் ஏதோ ஒரு விளம்பரப் பக்கத்திலிருந்து அப்படியே எழுந்து வந்தாற்போல் வைஜயந்தி இருந்தாள்.

"யூ லுக் கிரேட்." என்றான் நரேந்திரன்.

வெளிர் நீல நிறத்தில் ஜீன்ஸும், பிங்க் நிற டி ஷர்ட்டும் போட்டு கூலிங்கிளாஸை மாட்டியதும் நரேந்திரனும் ஒரு ஆண் மாடல் போல் மாறிவிட்டான்.

"எதற்காக கருப்புக் கண்ணாடி..?"

"ராத்திரி முழுவதும் விழித்திருந்ததால் கண்கள் சிவந்திருக்கின்றன. நேராகப் பார்த்தால் நரசிம்ம அவதாரம் போல் தோன்றும்."

"கண்களைப் பார்த்தால்தான் நரசிம்ம அவதாரம் போல் தோன்றுமா? உன் முகத்தை எப்பொழுது பார்த்தாலும் ஆஞ்சநேயர் மாதிரிதான் தெரிகிறாய்."

"ஏய்.. என் குலதெய்வத்தைப் பற்றி எதுவும் சொல்லாதே.."

நரேந்திரன் இரண்டு ஃபைல்களையும் அள்ளிக்கொண்டான்.

"இது என்ன நோட்புத்தகம்..?"

"இரண்டு ஃபைல்களிலிருந்தும் பல குறிப்புகளை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தேன். சில விபரங்களை சேகரிக்க முடிந்திருக்கிறது."

நரேந்திரன், வைஜயந்தி இருவரும் ரிசப்ஷனில் இருந்த மீராவுக்கு கைகாட்டிவிட்டு படிகளில் இறங்கிக்கொண்டே பேசினார்கள்.

"என்ன குறிப்புகள் கிடைத்தன..?"

"அவன் சடாரென்று வீட்டுக்குள் நுழைந்து, கிடைத்த ஐந்து நிமிடத்தில் கொலை செய்துவிட்டுத் தப்பிக்கும் ஜாதியாகத் தெரியவில்லை.

"கொலை செய்தபின் அந்தப் பெண்ணுடன் குறைந்தது முப்பது நாற்பது நிமிடங்களாவது செலவிடுகிறான். உடம்பில் கத்தியால் எண்களை எழுதுவதற்கு திறமை வேண்டும். எந்த எண்ணையும் கோணலாக, அவசரமாக அவன் எழுதவில்லை. நடந்திருக்கும் நான்கு கொலைகளையும் அவன் அவசரப்படாமல் நிதானமாகச் செய்திருக்கிறான். கொலை செய்தபின் உடனடியாக எந்தத் தொந்தரவும் இருக்காது என்று நிச்சயித்துக்கொள்கிறான் என்றால், அவன் முன்கூட்டியே அந்த நபரைப் பற்றி சில விஷயங்களை விசாரித்து தெளிவாக இருக்க வேண்டும்.

"அதனால்தான் ஒரு கொலைக்கும் அடுத்த கொலைக்கும் நடுவில் அவனுக்கு இவ்வளவு நேரம் தேவைப்படுகிறது. எந்தப் பெண்ணை கொலைசெய்ய வேண்டும் என்று தீர்மானித்த பிறகு, அவளைத் தவிர வேறு யாருக்கும் ஒரு சிறிய கீறல்கூட விழுவதில்லை. சுற்றியிருப்பவர்களை மயக்கமடையச் செய்துவிட்டு தனக்குத் தேவையானவளை மட்டும் அவன் காயப்படுத்துகிறான். உயிரை வாங்குகிறான்.

"ஸோ.. அவனிடம் ஒரு நேர்த்தி இருக்கிறது. அவசரமில்லாத திட்டமிடல் இருக்கிறது. நமக்கு கடிதம் அனுப்பியபொழுதும், ஃபோன் செய்தபோதும் அடுத்து நாம் என்ன செய்வோம் என்கிற தீர்மானம் இருக்கிறது. ஒவ்வொரு நடவடிக்கையையும் கூர்ந்து கவனித்து ஒரு அடி முன்னதாகவே அவன் போய்க்கொண்டிருக்கிறான். ஸோ, அவன் விட்டுப்போன தடயங்கள் சுலபமாகக் கிடைக்காது. மிக நன்றாக கண்களைத் திறந்து வைத்து கவனிக்க வேண்டும்."

காரில் அவர்கள் ஏறியதும் நரேந்திரன் கியரைப் பொருத்தி சீறிக் கிளப்பினான்.

சேலம்.

சென்னையின் கொடூரமான வெயிலிலிருந்து ஒதுக்கப்பட்டு மலைகளின் நிழலால் பொத்தப்பட்ட சேலத்தில் ஜவஹர் நகர், பேருந்து நிறுத்தத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் உள்ளடங்கி இருந்தது. புதிதாக வளர்ந்துவரும் ஏரியா. நரேந்திரன் தன்னிடமிருந்த முகவரியை வைத்துக்கொண்டு விசாரித்தான்.

மரங்கள் முற்றிலும் அழிக்கப்படாத அந்தப் பகுதி கூடுதலாக குளுமையாக இருந்தது. ஜவஹர் நகரின் நான்காவது தெருவில் எட்டாவது நம்பர் வீட்டுக்கு முன் நரேந்திரனின் கார் நின்றது.

அவர்களுடைய வருகைக்காகவே காத்திருந்தது போல் அந்தப் பெண் கேட் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

சுமார் இருபத்தைந்து வயது. இடுப்பில் ஒன்றரை வயதுக் குழந்தை. கழுத்தில் கருப்புக் கயிறு கட்டியிருந்த அந்தக் குழந்தையின் உடம்பில் வேறு துணியில்லை.

"அதோ கார் பாரு.. உம்ம்.." என்று சத்தம் எழுப்பிக்கொண்டே விரல் நுனியில் தீற்றியிருந்த சாதப்பருக்கைகளை குழந்தையின் வாய்க்குள் செலுத்திக்கொண்டிருந்த அந்தப் பெண், நரேந்திரனைப் பார்த்ததும் கைகளை இணைக்காமலேயே கும்பிட்டாள்.

"மிஸ்டர் நரேன்..?" என்றாள்.

"எஸ்.."

"இதுதான் வைஜயந்தியா..?"

வைஜயந்தி அந்தப் பெண்ணை நெருங்கி அவள் இடுப்பில் இருந்த

குழந்தையின் கன்னத்தை விரலால் தட்டினாள். சாதப் பருக்கைகள் காய்ந்து தீற்றியிருந்த அந்தக் கன்னத்தில் குழிவிழ குழந்தை சிரித்தது.

"ஸ்மார்ட் கேர்ள்.." என்றாள் வைஜயந்தி.

"உள்ளே வாருங்கள்"

உள்ளே நுழைந்ததும் ஈஸிசேரில் செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்த எழுபது வயது மனிதர், தடித்த கண்ணாடிகளை நெற்றிக்குத் தூக்கிவிட்டுக்கொண்டு நரேந்திரனைப் பார்த்தார்.

"சென்னையிலிருந்து உன் அம்மாவைப் பற்றி விசாரிக்க வருகிறார்கள் என்று சொன்னாயே, அவர்கள் இவர்கள்தானா..?" மருமகளிடம் அவர் கேட்டார்.

நெற்றி நிறைய குங்குமம் வைத்திருந்த பெண்மணி வெளியே வந்து குழந்தையை வாங்கிக்கொண்டாள்.

"எங்களுக்குக் கிடைத்திருந்தது தங்கமான சம்பந்தி.. மூளை கலங்கிப்போன ஏதோ ஒரு முட்டாள் கொடூரமாக சித்திரவதை செய்துவிட்டுப் போய்விட்டான்.." என்று சொல்லும்போதே அந்த அம்மாளின் கண்கள் கலங்கின.

"ப்ளீஸ் கம்.." அந்தப் பெண் அவர்களை ஹாலுக்குள் அழைத்துப்போனாள்.

"என் பெயர் ராஜி.. என் அம்மாதான் மங்களம். இதோ இந்த ஃபோட்டோவில் என் தோள் மீது கைபோட்டு சிரித்தபடி இருக்கிறாளே.. நாங்கள் அம்மாவும் மகளுமாகப் பழகினதேயில்லை.. நெருக்கமான தோழிகளாகத்தான் இருந்திருக்கிறோம்.." அவள் குரல் சோகத்தில் உதறியது.

நரேந்திரனும், வைஜயந்தியும் நாற்காலிகளில் அமர்ந்ததும் கண்ணாடி டம்ளர்களில் மோர் வந்தது.

"அம்மாவின் பின்னணி பற்றிச் சொல்ல முடியுமா..?"

"எளிமையானவள். யாருடனும் அனாவசிய சண்டைக்குப் போனதில்லை. முதலில் மதுரையில் குடியிருந்தார்கள். அப்புறம் அப்பாவுக்கு டிரான்ஸ்ஃபர் ஆனபொழுது அம்மாவும் சேலத்துக்கு வந்துவிட்டார்கள். பள்ளிக்கூடத்தில் டீச்சராக இருந்து பழகிவிட்டதால் இங்கேயே வேலை தேடிக்கொண்டாள். அம்மாவுக்கு தன் மாணவ மாணவிகளிடம் அதிக பாசம்.."

"அம்மாவுக்கு மிரட்டல் கடிதம் போல் வித்தியாசமான கடிதங்கள் ஏதாவது வந்ததுண்டா..?"

"இல்லை.. ஒருபோதும் அப்படி வந்ததில்லை.. எனக்கும், என் அம்மாவுக்கும் நடுவில் எந்தவித ரகசியமும் இருந்ததில்லை. யாருக்கும் அம்மா மீது கோபம் இருந்ததாக என்னிடம்

சொன்னதில்லை. நீங்கள்தான் பார்த்தீர்களே. என் மாமனார், மாமியார்கூட அம்மாவிடத்தில் அன்பாகத்தான் இருப்பார்கள். என் கணவர்கூட சொந்த அம்மாவிடம் பழகுவதைப் போல்தான் பழகுவார்.. அவளைப் போய்.."

"உங்கள் அம்மா மட்டும் இல்லை. அதற்குப் பிறகு இன்னும் மூன்று பெண்கள் அதே முறையில் கொலையாகி இருக்கிறார்கள்.."

"படித்தேன்.. யார் அந்த கிறுக்கன்? அவனுக்கு என்ன வேண்டும்? அவனுக்கு என் அம்மா என்ன தீங்கு செய்தாள்..?"

"டைரி எழுதும் பழக்கம் அம்மாவுக்கு உண்டா..?"

"உண்டு.. எல்லா பழைய டைரிகளையும் நான் புரட்டிப் பார்த்துவிட்டேன்.. சந்தேகப்படும்படியான விஷயம் எதுவும் இல்லை.."

"அந்த டைரிகளில் அந்தரங்கமான விஷயங்கள் ஏதாவது இருக்குமா? நாங்களும் அதைப் புரட்டிப் பார்க்கலாமா..?"

"என் அம்மாவின் டைரிகளை நான் பொக்கிஷமாக நினைக்கிறேன். இங்கேயே உட்கார்ந்து பார்ப்பதென்றால் நான் தருகிறேன். தயவுசெய்து உங்களுக்குத் தேவையான குறிப்புகளை எடுத்துக்கொண்டு டைரிகளை என்னிடமே திருப்பிக் கொடுத்துவிடுங்கள் ப்ளீஸ்.."

"ஷ்யூர்.. அந்த விபத்து எந்த வீட்டில் இருந்தபொழுது நேர்ந்தது என்று தெரிந்தால் கொலைகாரனைக் கண்டுபிடிக்க ஏதாவது தடயம் கிடைக்கிறதா என்று பார்க்க முடியும்."

"அழைத்துப் போகிறேன்.." என்றாள் அவள்.

பதினொன்று

அங்கிருந்து இரண்டு தெருக்கள் தள்ளி மங்களத்தின் வீடு இருந்தது.

அது ஒரு சிறிய வீடு.. கீழே வீட்டின் சொந்தக்காரர்களும், மாடியில் மங்களமும் இருந்ததாகச் சொன்னார்கள்.

நரேந்திரன் காரிலிருந்து இறங்கியதும், அவன் எதிரில் வந்து நின்று விறைப்பாக சல்யூட் அடித்தார் ஒரு கான்ஸ்டபிள்.

"சென்னையிலிருந்து தகவல் வந்தது சார்.. நீங்கள் வந்தால் வீட்டுக்குள் அனுமதிக்கும்படி.. எந்தப் பொருளைத் தொடுவதாக இருந்தாலும் கைகளில் க்ளவுஸ் மாட்டிக்கொள்ளச் சொல்லி எஸ்.பி சார் சொல்லியிருக்கிறார்கள்."

நரேந்திரன், வைஜயந்தியுடன் அந்த வீட்டுக்கு வெளியிலேயே அமைந்திருந்த படிகளில் ஏறி மாடியை அடைந்தனர்.

கான்ஸ்டபிள் பூட்டைத் திறந்து அவர்களை உள்ளே அனுமதித்தார். சதுரமான ஒரு ஹால். அதை அடுத்து படுக்கையறை.. இன்னொரு பக்கம் கிச்சன். மறுபக்கம் பாத்ரூம், டாய்லெட்.

"அந்த அம்மாளை இங்கேதான் போட்டிருந்தான் சார்.."

கான்ஸ்டபிள் சுட்டிக்காட்டிய இடத்தில் ஹாலின் மத்தியில் சாக்பீஸால் கோடு வரையப்பட்டிருந்தது.

அங்கங்கே காய்ந்து போயிருந்த கறுத்த ரத்தக்கறைகளும் சாக்பீஸால் வட்டமிடப்பட்டிருந்தன.

நரேந்திரன், தன்னிடமிருந்த குறிப்புகளை சரிபார்த்துக்கொண்டான்.

மாடியில் ஏறிவந்து வீட்டுக்குள் கொலைகாரன் நுழையும்வரை யாருக்குமே சத்தம் கேட்கவில்லையா?

"சார் அவன் வழக்கமான முறையைத்தான் முதல் தடவையே கையாண்டிருந்தான்.." என்றார் கான்ஸ்டபிள்.

"கீழ் வீட்டில் இருப்பவர்கள் எல்லோரும் காலையில் எழுந்திருக்கும்போதே தலைவலியோடுதான் எழுந்தார்கள். அவர்கள் வீட்டிலும் மயக்கமருந்தை அடித்துவிட்டு, அவர்கள் மயக்கத்தில் இருக்கும்பொழுது அவன் செயல்பட்டிருக்கிறான்.."

"அவன் ஜன்னல் வழியாக நுழைந்ததாக ஃபைலில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே எந்த ஜன்னல்..?"

"இதோ இந்த ஹால் ஜன்னல்தான் சார்.. இந்தக் கதவுக்கு ஸ்ட்ராங்கான பூட்டு போடப்பட்டிருக்கிறது. உடைத்துத் திறப்பது என்பது இரவு நேரத்தில் நிச்சயம் ஒலி எழுப்பும்..

"கீழ் வீட்டில் இருப்பவர்கள் மயக்கமாக இருந்தாலும், அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் யாரும் சப்தத்தில் விழித்துவிடக்

கூடாதே என்று அவன் ஜன்னல் வழியாக நுழையத் தீர்மானித்திருக்கிறான்.

"ஜன்னலுக்கு வெளியே நிற்பதில் எந்தப் பிடிப்பும் இருக்காது என்பதால் அவன் ஏணியைப் போட்டு ஏறி கிரில்லைக் கழற்றி உள்ளே நுழைந்திருக்கிறான்.

"இரவு மூன்று மணிக்கு மங்களம் அம்மாள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.. அதன்பின் அதே ஜன்னல் வழியாக ஏணியில் இறங்கி அவன் போயிருக்கிறான்.

"ஏணியை சுவரில் பதித்த இரண்டு கோடுகளை வைத்துதான் போலீசால் இந்தத் தீர்மானத்துக்கு வர முடிந்திருக்கிறது. ஆனால் ஏணிப்படிகளில் அவன் பிடித்து ஏறியிருக்கும்பொழுது அவனுடைய கைரேகைகள் பதிந்திருக்கலாம் என்று ஆராய்ச்சி செய்ய எடுத்துப் போனார்கள். ஒவ்வொரு படியையும் ஈரத்துணி வைத்துத் துடைத்திருக்கிறான் சார்.."

"அதாவது காரியம் முடிந்ததும் ஏணியைப் படுக்க வைத்து அவனுடைய அடையாளங்களெல்லாவற்றையும் துடைத்துவிட்டுப் போகும் அளவுக்கு அவனுக்கு நேரம் இருந்திருக்கிறது.." என்றாள் வைஜயந்தி.

"நான் சொல்லவில்லை..? அவன் அவசரப்பட்டு செய்வதில்லை.. நிதானமாக திட்டமிட்டபடியே அவன் காரியங்களை நடத்திக்கொண்டு போகிறான்."

"வேறு ஏதாவது அடையாளம் கிடைத்ததா..?"

"இந்த வீட்டுக்கு வெளியே தோட்டத்தில் ஒரு சிகரெட் துண்டு கிடைத்தது. தினமும் தோட்டத்தைப் பெருக்கிவிடும் பழக்கம் இருப்பதால் முந்தின தினம் அந்த சிகரெட் துண்டு அங்கே இருந்திருக்க வாய்ப்பே இல்லை என்று வீட்டின் சொந்தக்காரர் சொல்லிவிட்டார்.

"அக்கம்பக்கத்து வீட்டில் இருப்பவர்களும் சிகரெட் பிடிப்பதில்லை.. வீட்டில் வேலை செய்பவர்களும் பெண்களாக இருப்பதால், அந்த சிகரெட் இங்கே வந்ததற்கு சரியான விளக்கம் இல்லை. அதனால் மங்களம் அம்மாளை கொலை செய்ய வந்தவன்தான் அந்த சிகரெட்டை உபயோகப்படுத்தியிருக்க வேண்டும் என்று போலீஸ் அதை பத்திரப்படுத்தி வைத்திருக்கிறது.

"அதில் எந்த கைரேகையும் கிடைக்காவிட்டாலும், ஃபில்டர் பகுதியில் அவனுடைய உதடுகளின் ரேகைகள் பதிந்திருக்கலாம் என்று பத்திரப்படுத்தியிருக்கிறார்கள்."

நரேந்திரன், கான்ஸ்டபிள் கொடுத்த விபரங்களைக் குறித்துக்கொண்டே அந்த வீட்டின் ஒவ்வொரு அறையையும்

ஆராய்ந்தான்.

வைஜயந்தி, மங்களம் அம்மாளின் அலமாரியில் அடுக்கியிருந்த எளிமையான காட்டன் துணிமணிகளைக் கலைக்காமல் நகர்த்தித் தேடினாள்.

"எந்தப் பொருளும் திருடு போகவில்லை மேடம். வந்தவன் கொலையை செய்தான்.. கண்களை பிடுங்கிப் போட்டான்.. வயிற்றில் கோடு கிழித்தான், கிளம்பிப் போய்விட்டான்.. மேஜை மீது பர்ஸ் இருந்தது.. அதில் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் இருந்தது. அதில் ஒரு காசுகூட அவன் தொடவில்லை. அவனுடைய ஒரே நோக்கம் மங்களம் அம்மாளை கொலை செய்வதாகத்தான் இருந்திருக்க வேண்டும்."

"தேங்க் யூ."

நரேந்திரன், கான்ஸ்டபிள்களுக்கு நன்றி சொல்லிவிட்டு அந்த வீட்டைவிட்டு வெளியே வந்தான்.

சிகரெட் விழுந்திருந்த இடத்தை கான்ஸ்டபிள் சுட்டிக் காண்பித்தார்.

ஏணி சாய்த்து நிறுத்தப்பட்ட இடத்தில் வெளிச்சுவரில் ஏற்படுத்தி இருந்த அடையாளங்களையும் நரேந்திரன் கவனித்தான்.

கீழ் வீட்டில், மற்றும் அக்கம்பக்கத்து வீடுகளிலும் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் வைஜயந்தி விசாரித்தாள்.

ஆனால் அவர்களுக்கு உபயோகமான புதிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

மங்களத்தின் மகளிடம் நன்றி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது நரேந்திரனுடைய ஃபோன் ஒலித்தது.

எண்களைப் பார்த்தவுடன் உஷாரானான். சைக்கோ!

"நரேன் எங்கேயிருக்கிறாய்? உன் ஆஃபீசிற்கு ஒரு கவர் அனுப்பியிருக்கிறேன்.. பார்"

நரேந்திரன் பேசுவதற்கு வாய்ப்பே கொடுக்காமல் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

நரேந்திரன் முகத்தில் பரபரப்பு குடியேறியது..

"வைஜ், அவன் எனக்கு ஏதோ கடிதம் அனுப்பியிருக்கிறானாம். இந்த முறை ஈமெயில் இல்லை. ஆஃபீஸிற்கு கவர் வந்திருக்கிறது.."

காரில் பரபரப்பாக ஏறினான் நரேந்திரன்.

வைஜயந்தி எல்லோருக்கும் நன்றி சொல்லிவிட்டு மறுபுறம் ஏறினாள்.

பன்னிரண்டு

ஈகிள்ஸ் ஐ ஆஃபீஸிற்குள் நுழையும்போதே மீரா அந்தக் கவரை நீட்டினாள்.

"நரேன்.. உனக்கு.."

"தெரியும்.."

நரேந்திரன் அதை அப்படியே பறித்துக்கொண்டு தன்னுடைய அறைக்குள் பாய்ந்தான்.

கவரின் ஓரத்தை கவனமாகக் கிழித்துவிட்டு, உள்ளிருந்த பொருட்களை கைகளால் தொடாமல் வெளியே எடுத்தான்.

வைஜயந்தி, அவன் கழுத்தில் மூச்சு விட்டுக்கொண்டு பின்னாலேயே நின்றாள்.

மேஜை மீது வந்து விழுந்தவை ஐநூறு ரூபாய் நோட்டுக்கள்.. தவிர கம்ப்யூட்டரில் அச்சடித்த ஒரு காகிதம்.

"டியர் நரேன்.. என்னைக் கண்டுபிடிக்க நீ முயற்சிகளை ஆரம்பித்துவிட்டாய்.. ஈகிள்ஸ் ஐயில் எந்த கேஸை எடுத்துக்கொண்டாலும் அதற்கு ஒரு கட்டணம் வசூலிப்பார்கள்.. உங்களுக்கு ஒரு வேலையைக் கொடுத்துவிட்டு, அதற்கான பணத்தைக் கொடுக்காமல் இருந்தால் எப்படி? இத்துடன் பதினைந்தாயிரம் ரூபாய் அனுப்பியிருக்கிறேன்.. கூரியரில் கரன்ஸி அனுப்பக்கூடாது என்று எனக்குத் தெரியும். ஆனால் செக்காகவோ, ட்ராஃப்ட் ஆகவோ அனுப்பிவிட்டு, அதைப்பற்றி ஆராய நீ நேரத்தை வீணடிக்கக் கூடாது என்பதால் நான் பணமாகவே அனுப்பியிருக்கிறேன்.

"என்னுடைய அடுத்த இலக்கு.. சென்னை. சென்னையில் எங்கே? இன்னும் இரண்டு நாட்களில் தெரிவிக்கிறேன். ஆல் தி பெஸ்ட்.." என்றது கடிதம்.

"அவன் தைரியத்தைப் பார்த்தாயா..?" வைஜயந்தி பிரமிப்புடன் கேட்டாள்,

"கம்ப்யூட்டர் இயக்கத் தெரிந்திருக்கிறது அவனுக்கு. இந்தக் கடிதத்தில் ஏதாவது கைரேகை கிடைக்குமா என்று பால்ராஜிடம் கேட்போம்.." என்று அதை உறையில் போட்டான் நரேந்திரன்.

பதின்மூன்று

பால்ராஜ் அந்தக் காகிதத்தை கவனமாக வாங்கிக்கொண்டார்.

"உடனடியாக இதையும், பணத்தையும் லேபுக்கு அனுப்பிவிடுகிறேன்.." என்றார்.

நரேந்திரன் நிலையில்லாமல் அவரெதிரில் நின்றான்.

"பால்ராஜ், உடனடியாக சென்னையில் இருப்பவர்களுக்கு நாம் எச்சரிக்கை கொடுத்தாக வேண்டும்.."

"என்னவென்று? முகம் தெரியாத ஒருவன், யாரை வேண்டுமானாலும், அர்த்த ராத்திரியில் வீட்டுக்குள் புகுந்து கொலை செய்வான் என்றா..?"

பால்ராஜ் தன்னுடைய தொப்பியைக் கழற்றி கழுத்துப் பகுதியில் விசிறிக்கொண்டார்.

"பொதுவான எச்சரிக்கையாவது கொடுக்க வேண்டும் பால்ராஜ்."

"தொடர் கொலைகள் செய்பவன். இரவு நேரத்தில் ஜன்னல் வழியாகத்தான் உள்ளே வருகிறான். எனவே ஜன்னல்களை சார்த்தி தாளிட்டுக்கொண்டு தூங்குங்கள் என்று சொல்லலாமே.." என்றாள் வைஜயந்தி.

"வைஜ்.. ஈகிள்ஸ் ஐ ஆஃபீஸில் ஏ.ஸி இருக்கலாம். இதோ போலீஸ் ஸ்டேஷனில் உட்கார்ந்திருக்கிறேனே, ஏதோ ஒரு ஆட்சியில் வாங்கிப் போட்ட ஃபேன் பழுதாகிக் கிடக்கிறது. காற்றுகூட சரியாக வரவில்லை.. சென்னையில் பெரும்பாலான வீடுகளில் மத்திய தர குடும்பங்கள் வாழ்கின்றன. ஏ.ஸி கிடையாது. ஜன்னல்களையும் மூடி வைத்துக்கொண்டால் இந்த கோடைப் புழுக்கத்தில் வெந்து சமைக்கப்பட்டிருப்பார்கள். இட்ஸ் நாட் பாஸிபிள். நான் கமிஷனரிடம் பேசி, போலீஸ் இரவு ரோந்து போவதை அதிகப்படுத்த முடியுமா என்று பார்க்கிறேன்.. ஆனால் சென்னை என்பது மாபெரும் நகரம். இதில் எங்கே, என்றைக்கு, யாரைத் தாக்குவான் என்பது தெரியாமல் நாம் பீதியைக் கிளப்பிவிட்டுவிட முடியாது.."

பால்ராஜின் வாதம் நியாயமாகத் தோன்றியது.

"வெல்.. சேலம் போனாயே? என்ன கண்டுபிடித்தாய்..?"

உதடுகளைப் பிதுக்கினாள் வைஜயந்தி.

"எங்கள் அடுத்த டிரிப் பாம்பே.." என்றான் நரேந்திரன்.

"இந்த கேஸ் கிடைத்தாலும் கிடைத்தது, காலையில் ஒரு ஊர், மாலையில் ஒரு ஊர் என்று ஜாலியாகச் சுற்றிக்கொண்டிருக்கிறீர்களாக்கும்.."

"ஜாலியாகவா..! ஏர்ஹோஸ்டஸ் என்னிடம் நின்று சிரித்துப் பேசினால்கூட இவளுக்குப் பொறுப்பதில்லை.. இரண்டு முறை தகராறுக்குப் போய்விட்டாள்.."

பால்ராஜ் புன்னகைத்தார்.

"பால்ராஜ், இவன் டூப் விடுகிறான். எந்த ஏர்ஹோஸ்டஸும் இவனிடம் நின்று பேசவில்லை.. அவசரம் அவசரமாக காஃபியை வைத்துவிட்டு அடுத்த இருக்கைக்குத்தான் ஓடினார்கள். இவனாகக் கூப்பிட்டு காதில் வைத்துக்கொள்ள பஞ்சு கொடு. வாயில் அடக்கிக்கொள்ள சாக்லேட் கொடு.. உங்கள் ஃப்ளைட்டில் கொடுக்கும் புஸ்தகம் எப்பொழுது கடைசியாக பிரிண்ட் செய்தது என்று ஏதாவது வழிந்துகொண்டே இருந்தான். அதனால் அவன் முழங்காலில் இரண்டு தட்டு தட்டினேன்.."

பால்ராஜின் புன்னகை விரிந்தது.

"பம்பாய்க்கு வைஜயந்தியை அழைத்துப் போகிறாயா நரேன்..?"

"ரோஸ்லின் ஆன்ட்டி இல்லாமல் உங்களுக்கு சுதந்திரம் கிடைத்திருக்கிறது. ஆனால் எனக்கு அந்த அதிர்ஷ்டம் இல்லை பால்ராஜ்."

வைஜயந்தி பால்ராஜின் மேஜை மீது இருந்த பேப்பர் வெயிட்டை கையில் எடுத்தாள்.

பதினான்கு

அண்மையில் நடந்து முடிந்த தேர்தலின் மிச்சங்களாக ஆளுயர கட் அவுட்கள், உயரத்தில் கட்டப்பட்ட காகிதத் தோரணங்கள் என்று பம்பாயின் உள்வீதிகள் அலங்காரமாக இருந்தன.

அவர்கள் தங்கியிருந்த ஹோட்டல் எட்டு புறமும் கான்க்ரீட் கட்டிடங்களால் சூழப்பட்டிருந்தது. ஷேவிங் பிளேடு வாங்கி வர பக்கத்து தெருவுக்குப் போய் வர வேண்டுமானாலும்கூட டாக்ஸி பிடித்தால் இரண்டு மணி நேரம் ஆகும் போல போக்குவரத்து.

வைஜயந்தி பாத்ரூம் கதவைத் திறந்து சற்றே எட்டிப் பார்த்தாள்.

"நரேன், நீ கீழே போய் லவுன்ஜில் பேப்பர் படித்துக்கொண்டிரு.."

"ஏய்? ஆறாயிரம் ரூபாய் கொடுத்து ரூமை எடுத்துவிட்டு யாராவது லவுன்ஜில் போய் உட்காருவார்களா என்ன..?"

"முட்டாள்.. நான் டிரெஸ் பண்ணிக்கொள்ள வேண்டும்."

"பண்ணிக்கொள்."

"நீ அதற்கு அறையை காலி செய்ய வேண்டும்."

"இதைப் பாருடா நியாயத்தை! நான் டிரெஸ் செய்துகொள்ளும்பொழுது உன்னை வெளியே போகச் சொன்னேனா..?"

"உனக்கு வெட்கம் கிடையாது.. டிரெஸ் செய்துகொள்வதிலும் வெட்கம் கிடையாது. டிரெஸ் செய்துகொள்வதைப் பார்ப்பதிலும் வெட்கம் கிடையாது. கெட் அவுட்.."

"மூன்றெழுத்துக்கு பதிலாக இரண்டெழுத்தை பயன்படுத்தக் கூடாதா..?"

"என்ன உளறுகிறாய்..?"

"கெட் அவுட் என்பதற்கு பதிலாக கெட் இன் என்று சொல்லியிருந்தால் உனக்கான டிரஸ்ஸ் எடுத்துக்கொண்டு நானே உள்ளே வந்திருப்பேனே.."

"கேவலமாக இருக்கிறது.."

"அட்ஜஸ்ட் செய்துகொள்வேன்.."

"நீ பேசுவது கேவலமாக இருக்கிறது என்று சொன்னேன்.."

நரேந்திரனின் செல்ஃபோன் ஒலித்தது.

"குட்மார்னிங் நரேன்."

"குட்மார்னிங் தாஸ்.."

"அங்கே என்ன வம்பு செய்துகொண்டிருக்கிறாய்? ஈகிள்ஸ் ஐயிலிருந்து வருபவர்கள் கண்ணியமானவர்கள் என்று முதலில் வைஜயந்திக்குப் புரிய வை.."

"தாஸ்"

"போ.. கீழே போய் நியூஸ் பேப்பர் படித்துக்கொண்டிரு.."

ஃபோனை அணைத்துவிட்டு நரேந்திரன் வைஜயந்தியைத் திரும்பிப் பார்த்தான்.

"நான் குளிக்கப் போவதற்கு முன்பே தாஸுக்கு தகவல் கொடுத்துவிட்டேன்.." என்று வைஜயந்தி பற்களைக் காண்பித்தாள்.

"யூ ஸ்கௌன்ட்ரல்.."

"அது என்னுடைய லாங்வேஜ்.. போ...போ.. சமர்த்துப் பையனாக கீழே போய்க் காத்திரு.."

"ஓகே.." நரேந்திரன் எழுந்தான்.

வைஜய்ந்தி பாத்ரூம் கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

கீழே லவுன்ஜ், டென்னிஸ் மைதானத்தைப் போல் நீளமாக இருந்தது.

நீல நிறச் சீருடைகள் அணிந்து, பாப் செய்யப்பட்ட கூந்தலுடன் பெண்கள் பிளாஸ்டிக் புன்னகை அணிந்திருந்தார்கள்.

நரேந்திரன் புன்னகைகளை உதிர்த்துவிட்டு, வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றை எடுத்துக்கொண்டு போய் அமர்ந்தான்.

இரண்டு மாதத்துக்கு முந்தைய பத்திரிகை. வாட்ச் வாங்கச் சொல்லும் பெண்கள்கூட வாட்சைத் தவிர வேறு எதுவும் அணியாமல் விளம்பரம் செய்துகொண்டிருந்தார்கள்.

ஐந்து நிமிடங்களில் வைஜயந்தி மணக்க மணக்க அவனருகில் வந்து அமர்ந்தாள்.

முகத்தில் கடும் கோபம் கொப்பளித்தது. உட்கார்ந்ததும் நரேந்திரனின் தொடையைப் பிடித்துக் கிள்ளினாள்.

"ஏய்.. சும்மா உட்கார்ந்திருந்த நேரம் இந்தப் புத்தகத்தைப் புரட்டினேன். அவ்வளவுதான்."

"கிள்ளு அதற்காக இல்லை.."

"பின்னே..?"

"உன் பாக்கெட்டுகளை காலி செய்து எடுத்துக்கொடு.."

"என்ன எடுத்துக் கொடுக்க வேண்டும்..?"

"நான் அணிவதற்காக வைத்திருந்த கருப்பு நிற.."

"கருப்பு நிற..?"

"ராஸ்கல்.. உனக்கு அது என்னவென்று தெரியும்."

"அடப்பாவமே.. கர்ச்சீஃப் என்று நினைத்து.." நரேந்திரன் பாக்கெட்டில் கையைவிட்டு எடுத்தான்.

"இதை கர்ச்சீஃப் என்று நினைப்பார்களா? நீ வேண்டுமென்றே செய்திருக்கிறாய். டர்ட்டி டாங்க்கி..!"

"வைஜ்.. இப்பொழுது ரூமுக்குப் போய் இதை மாட்டிக்கொள்ள நேரமிருக்கிறதா? பேசாமல் இப்படியே போகலாம் வாயேன்.."

"யூ டோன்ட் டிசைட் இட்.." வைஜயந்தி அவனிடமிருந்து பிடுங்கி

தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் அதை நுழைத்துக்கொண்டு பரபரவென்று லிஃப்ட்டை நோக்கிப் போனாள்.

"வைஜ், டெலிஃபோனுக்கடியில் மறைத்து வைத்திருக்கிறேன்.." நரேந்திரனின் குரல் அவளைத் துரத்தி வந்தது.

"எதை..?"

"இன்னொன்றைத் தேடுவாயே அதை.."

வைஜயந்தி நின்று திரும்பி அங்கிருந்து அவன் மேல் எறிந்த பார்வை அவனை சுட்டெரித்தது.

பதினைந்து

மின்சார ரயிலிலிருந்து வைஜயந்தியைப் பிடித்து இழுத்துக்கொண்டு நரேந்திரன் பிளாட்ஃபாரத்தில் குதித்தான்.

"ஏன் இழுக்கிறாய்..?"

"முட்டாள். இங்கெல்லாம் ரயில் முழுவதுமாகக்கூட நிறுத்தத்துக்கு வராது. நிற்பதுபோல் வேகத்தைக் குறைத்துவிட்டு, சடக்கென்று கிளப்பிவிடுவார்கள்.."

'தாணே' என்றது ஸ்டேஷன் போர்டு.

தாணேயில் பம்பாய் மாநகரத்தின் அசாத்தியமான போக்குவரத்து இரைச்சல்கள் இல்லை. உயரம் உயரமான கட்டிடங்களைக்கொண்ட காலனிகள் வரவேற்றன.

நரேந்திரன் முகவரி பார்த்து விசாரித்துக்கொண்டு, 'முகுந்த்' அபார்ட்மென்ட்ஸ் இருக்கும் பகுதிக்கு வைஜயந்தியை அழைத்துக்கொண்டு டாக்ஸியில் போய்ச் சேர்ந்தான்.

கிரில் கேட் வைத்த லிஃப்ட்டில் நுழைந்து ஆறாவது மாடியில் அவர்கள் வெளிப்பட்டார்கள்.

ஃப்ளாட் சிஸ்டத்தின் காரிடாரில் முண்டாசு கட்டிய ஒருத்தன் மீன்களை அரிந்துகொண்டிருந்தான். இன்னொரு புறம் மாம்பழத்தை கூடையில் சுமந்து வந்திருந்த ஒரு பெண் ஒவ்வொரு ஃப்ளாட் கதவாகத் தட்டிக்கொண்டிருந்தாள்.

தலைப்பாகை கட்டிய சர்தார்ஜி இளைஞர்கள் வைஜயந்தியை முறைத்துக்கொண்டே படிக்கட்டுகளில் இறங்கிப் போனார்கள்.

நரேந்திரன் எண் பார்த்து அழைப்பு மணியை அழுத்தினான்.

கதவு திறந்த பெண்மணி பக்கவாட்டில்தான் வீட்டுக்குள் நுழைய முடியும்போல வெகு அகலமாக இருந்தாள்.

"ஸ்வப்னா.." என்றான் நரேந்திரன்.

அந்தப் பெண் நரேந்திரனையும், வைஜயந்தியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"ஸ்வப்னா இப்பொழுது உயிருடன் இல்லை.."

"தெரியும். உங்கள் மகளா..?"

"அந்த மாதிரி கேடு கெட்ட பெண்ணைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு நான் கேவலமாகிப் போகவில்லை. இந்த வீட்டை விற்றுவிட்டு அவள் அம்மா எப்போதோ போய்விட்டாள்.."

"எங்கே போயிருக்கிறார்கள் என்று தெரியுமா..?"

"அது போஸ்ட் ஆஃபீஸ் வேலை.. என்னுடைய வேலை இல்லை.." அந்த அம்மாள் சரக்கென்று கதவைச் சாத்தினாள்.

நரேந்திரனின் செல்ஃபோன் ஒலித்தது.

"அந்த ராஸ்கல்தான்.."

நரேந்திரன் செல்ஃபோனை காதருகில் வைத்தான்.

"என்ன நரேன்.. போலீஸ் ரிக்கார்டில் இருக்கும் முகவரி தப்பாகிவிட்டதா? ஸ்வப்னாவின் அம்மா வேறு வீட்டுக்கு குடிபோய்விட்டது உனக்குத் தெரியாதா? பம்பாய் போலீசில் கேட்டால் முகவரி தருவார்கள்.. அவசரமென்றால் நானே தருகிறேன். நீ நின்றிருக்கிறாயே...அங்கிருந்து நான்கு கட்டிடம் தள்ளி 'கே' பிளாக்கில் ஏழாவது மாடியில் முப்பத்தி மூன்றாம் நம்பர் வீட்டில் இருக்கிறாள் ஸ்வப்னாவின் அம்மா.. யூ நோ சம்திங். அங்கேதான் ஸ்வப்னா கொலையானாள்.."

நரேந்திரன் பதில் வார்த்தை பேசுவதற்குள் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

"என்னவாம்..?" என்றாள் வைஜயந்தி.

"ஸ்வப்னாவின் அம்மாவை நாம் எங்கே போய்ப் பார்க்க வேண்டும் என்றுகூட அவன் சொல்கிறான்.."

"ஃபோன் நம்பரைப் பார்த்தால், அவன் சென்னையிலிருந்து பேசுகிறான் என்று தெரிகிறது. ஆனால் நாம் இங்கு நின்றிருப்போம் என்பதை அவனால் எப்படி மாயக்கண்ணாடியில் பார்க்க முடிகிறது..?"

"கம்.."

இருவரும் லிஃப்டில் நுழைந்தார்கள்.

கே பிளாக்கில் ஏழாவது மாடியில் அவன் குறிப்பிட்ட முகவரியை அடைந்து மணி தட்டியதும் கதவு திறந்தது.

ஸ்வப்னாவின் அம்மா நாற்பத்தைந்து வயதுப் பெண்மணி. புருவங்களைத் திருத்தி லேசாக ஆயில் மேக் அப் போட்டு, கண்களின் ஓரங்களில் மையால் கோடிழுத்து பளிச்சென்றிருந்தாள்.

அறிமுகங்கள் முடிந்ததும் அமரச் சொன்னாள்.

அந்த வீட்டின் அத்தனை சுவர்களிலும் ஸ்வப்னா விதம்விதமாக சிரித்தாள்.

"என் மகள், புதிதாய் பூத்த ரோஜா போலிருப்பாள். அந்த ரோஜாவை ஒருவன் நசுக்கிவிட்டான். மாடலிங் துறையில் அவள் மிகப் பிரபலம்.. அபிஷேக்பச்சனுடன் நடிப்பதற்காக சினிமாவில்கூட கூப்பிட்டார்கள். அவள் போகவில்லை. அவள் எந்தத் தப்பும் செய்யவில்லை. எதற்காக அவளைக் கொலை செய்து அந்த அழகான கண்களைத் தோண்டி எடுத்தான் அந்தக் கயவன்? அவளைக் கிள்ளக்கூட எனக்கு மனசு வந்ததில்லை.." சொல்லும்பொழுதே அவள் கதறி அழ ஆரம்பித்தாள்.

அவளுக்கும், சேலத்து மங்களத்துக்கும், பெங்களூரைச் சேர்ந்த மாலினி, சுமலதாவுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்று நரேந்திரன் விதம் விதமான கேள்விகளால் துருவி எடுத்தான்.

"அவர்களைப் பற்றியெல்லாம் தெரியாது. ஒரே தொடர்பு எல்லோரும் ஒரே மாதிரி கொல்லப்பட்டிருப்பதுதான்.."

"ஸ்வப்னாவுக்கு டைரி எழுதும் பழக்கம் உண்டா..?"

"அவளுடைய டைரியில் உங்களுக்கு எதுவும் பெரிய தகவல்கள் கிடைத்துவிடாது. அது அப்பாயின்ட்மென்ட் டைரி. எந்தெந்த இடத்தில் எங்கெங்கு படப்பிடிப்பு நடக்கும் என்பதை எழுதி வைத்திருப்பாள்."

"அந்த டைரிகளை நாங்கள் பார்க்கலாமா..?"

ஸ்வப்னாவின் அம்மா கடந்த மூன்று வருட டைரிகளைக் கொண்டுவந்து டீப்பாயின் மீது போட்டாள்.

"தமிழ்நாடு பக்கம் ஸ்வப்னா வந்திருக்கிறாளா என்று பார்.. அந்தத் தேதிகளை மட்டும் குறித்துக்கொள்.. தமிழ்நாட்டுக்கு இல்லையென்றால் கர்நாடகத்துக்காவது வந்திருக்கிறாளா பார்.. சென்னைக்கும், பெங்களூருக்கும், பம்பாய்க்கும், சேலத்துக்கும் எப்படியாவது தொடர்புபடுத்த முடியுமா என்று பார்ப்போம்.."

வைஜயந்தி டைரியிலிருந்து சில குறிப்புகளை எடுத்துக்கொள்ளத் துவங்கினாள்.

நரேந்திரனின் செல்ஃபோன் மீண்டும் ஒலித்தது.

"ஹாய் நரேன்.. ஸ்வப்னாவின் அம்மாவைப் பார்த்துவிட்டாயா..? விசாரித்துவிட்டாயா..? நேரம் கிடைக்கும்பொழுது உன்னுடைய ஈமெயிலையும் செக் பண்ணிப் பார்.." தொடர்பு துண்டிக்கப்பட்டது.

நரேந்திரன் அவசரம் அவசரமாக தன்னுடைய லேப்டாப்பை மடியில் திறந்து செல்ஃபோனை இயக்கி இன்டர்நெட்டை உயிர்ப்பித்தான்.

எழுநூற்றி பதினைந்து என்ற எண்களுடன் முகவரியை மாற்றி ஒரு புதிய கடிதம் வந்திருந்தது. நரேந்திரன் அந்தக் கடிதத்தை பரபரப்பாகத் திறந்தான்..

'என்னுடைய அடுத்த இலக்கு சென்னை என்று சொன்னேனே.. கூடுதலாக இரண்டு தகவல்கள் தருகிறேன்.. நான் இயங்கப்போகும் தினம் இருபத்தியேழாம் தேதி. இயங்கப்போகும் ஏரியா அண்ணா நகர். ஆல் தி பெஸ்ட்'

நரேந்திரன் வைஜயந்தியின் இடுப்பில் தட்டி கடிதத்தைக் காண்பித்தான்.

"நாம் உடனே சென்னைக்குத் திரும்ப வேண்டும்.. இன்று தேதி இருபத்தி ஐந்து."

வைஜயந்தி அவசரமாக குறிப்புகளை முடித்துக்கொண்டு, ஸ்வப்னாவின் அம்மாவிடம் கொடுத்தாள்.

"இங்கேதான் ஸ்வப்னா இருந்தாளா..?"

"இல்லை.. இது ஸ்வப்னாவின் அலுவலகம்.. நீங்கள் முதலில் சென்றிருந்தீர்களே அதுதான் ஸ்வப்னாவின் வீடு. நாங்கள் அங்கு

சேர்ந்துதான் இருந்தோம். தினமும் காலையில் இங்கே வந்துவிட்டுதான் வெளியில் போவாள். உடற்பயிற்சிகள் செய்வதற்கான இயந்திரங்களை இங்கேதான் வைத்திருக்கிறாள்.

"தோழிகளை சந்திப்பதற்கும், மாடலிங் தொடர்பாக விளம்பர ஏஜென்ஸி மனிதர்களை சந்திப்பதற்கும் அவள் இந்த இடத்தைப் பயன்படுத்தினாள்.

"அன்றைக்கும் அப்படித்தான்.. ஆஃபீசில் வேலைகள் முடிந்து சாயந்திரம் ஐந்து மணிக்கு அவள் வீடு திரும்பியிருந்தாள். என் மடியில் படுத்துக்கொண்டு டெலிவிஷன் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு ஃபோன் வந்தது. யார் பேசினார்கள் என்று அவளுக்குத் தெரியவில்லை. மிகப்பெரிய விளம்பரம் ஒன்றில் டெண்டுல்கருடன் நடிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அதுபற்றிப் பேச வரமுடியுமா..?" என்று யாரோ ஃபோனில் கேட்டார்கள். அவளுடைய ஆஃபீஸ் வாசலில் காத்திருப்பதாகவும் சொன்னார்கள். பரபரப்பாக உடைகளை மாற்றிக்கொண்டு அவள் கிளம்பிப் போனாள். அவ்வளவுதான். அப்புறம் அவள் வீடு திரும்பவே இல்லை..

"ஆறு மணி, ஆறரை மணி, இருக்கலாம்.. இன்னும் இரண்டு மணி நேரத்தில் வந்துவிடுவேன் என்று சொன்னாள். எட்டு ஆயிற்று.. எட்டரை ஆயிற்று. ஒன்பது ஆயிற்று. அவள் வரவில்லையே என்று ஃபோன் செய்தேன். மீண்டும் மீண்டும் ஃபோன் செய்தேன். செல்ஃபோன் அணைத்து வைக்கப்பட்டிருந்தது. முக்கியமான பேச்சு வார்த்தையில் இருக்கிறாளோ என்று நான் தொந்தரவு செய்யவில்லை. பதினோரு மணி வரை அமைதியாக இருந்தேன். அதற்குப் பிறகும் அவள் வரவில்லையென்றதும்தான் சந்தேகம் வந்தது. அதனால் நானே இங்கு புறப்பட்டு வந்தேன்.

"வீடு பூட்டி இருந்தது. என்னிடம் இருந்த இன்னொரு சாவியால் திறந்துகொண்டு உள்ளே வந்தேன். நுழைந்ததும்.. நுழைந்ததும்.."

பேச முடியாமல் அந்த அம்மாள் கதறிக் கதறி அழ ஆரம்பித்தாள்.

"என் செல்ல மகள் இதோ இந்த ஹாலில்தான் கிடத்தப்பட்டிருந்தாள். தரை பூராவும் ரத்தம். போலீஸ் வந்தது. மோப்ப நாய் வந்தது. எத்தனையோ பெரிய நிபுணர்கள் எல்லாம் வந்தார்கள். ஆனால் அவர்கள் யாராலும் கொலை செய்தவன் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

"ஸ்வப்னாவின் வயிற்றில் இரண்டு என்று கத்தியால் கிழித்து எழுதப்பட்டிருந்தது. அதற்கான காரணத்தையும் யாரும் இதுவரை சொல்லவில்லை.

"இப்பொழுதுதான் தெரிகிறது. கொலைகாரன் ஏதோ ஒரு பட்டியல் வைத்துக்கொண்டு, ஒன்று, இரண்டு, மூன்று என்று ஒவ்வொரு

கொலையாகச் செய்துகொண்டு இருக்கிறான் என்று.. அவனைப் பிடித்து தயவுசெய்து என்னிடம் உயிரோடு கொண்டுவாருங்கள். கசாப்பு கத்தியால் அவன் கழுத்தை சீவினால்தான் என் மனதுக்கு அமைதி கிடைக்கும்."

அழுகையில் ஆரம்பித்த அந்த அம்மாளின் வார்த்தைகள் கோபத்தில் முடிந்தன.

வைஜயந்தி அவள் தோளைத் தொட்டு ஆறுதல் வார்த்தைகள் சொல்லிவிட்டு, 'ஆள் கிடைத்ததும் நிச்சயம் தகவல் தருகிறோம்' என்று எழுந்தாள்.

பதினாறு

"இம்பாஸிபிள்.." என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"நீ சொல்வதுபோல் செய்வது சாத்தியமே இல்லை நரேன்.. உனக்குக் கிடைத்த தகவல்கள் வேண்டுமானால் உண்மையாக இருக்கலாம். இன்றைக்கு தேதி இருபத்தி ஆறு. நாளைக்கு அண்ணா நகரில் அவன் கைவரிசையைக் காட்டுவான் என்பதும் சரியாக இருக்கலாம். ஆனால் அத்தனை பெண்களையும் நாம் எப்படி எச்சரிக்க முடியும்..?"

"பள்ளிக்கூட சிறுமிகள் என்றோ, கல்லூரிக்குப் போகும் பெண்கள் என்றோ, வேலைக்குப் போகும் பெண்கள்தான் என்றோ, குறிப்பிட்டு நம்மால் சொல்ல முடியவில்லையே..?"

"இதுவரை கொலையான பெண்கள் வெவ்வேறு வயதைச் சேர்ந்தவர்கள்.. வெவ்வேறு நகரத்தைச் சேர்ந்தவர்கள்.. வெவ்வேறு தொழிலைச் சேர்ந்தவர்கள்."

"டி.வி நியூஸ் மூலம் சொல்ல முடியாதா பால்ராஜ்..?"

"என்ன வைஜ்.. உனக்குத் தெரியாததா? டெலிவிஷனில் இப்படி ஒரு செய்தியை ஒலிபரப்பினால் அண்ணா நகர் மட்டுமல்ல.. தமிழ்நாடே கொந்தளித்துவிடும். எங்கு பார்த்தாலும் பீதியும், கலவரமும் வெடிக்கும். கொலைகாரன் உஷாராகிவிடுவான்."

"பால்ராஜ், எனக்கு ஒரு ஐடியா தோன்றுகிறது.."

"சொல் நரேன்."

"அண்ணா நகரில் ஏரியாவுக்கு ஏரியா நற்பணி மன்றங்கள் இருக்கும்.. பெண்களுக்கான கிளப்புகள் இருக்கும்.. அங்கிருக்கும் பொறுப்பானவர்களை சந்தித்து நாளை இருபத்தி ஏழாம் தேதியும், இருபத்தியெட்டாம் தேதியும் பெண்கள் இருட்டிய பிறகு எங்கும் செல்ல வேண்டாம் என்று எச்சரித்தால் என்ன..?"

"அதில் எந்த பத்திரிகைக்காரனும் இருக்கக்கூடாது. ஆனால் தகவல் தெரிந்தும் நாம் பொறுப்பில்லாமல் கவனிக்காமல் விட்டுவிட முடியாது.."

பால்ராஜ் பெருமூச்சு ஒன்றை விடுவித்தார்.

அடுத்த இரண்டு நாட்களுக்கு இரவு ரோந்துப் பணியை அண்ணா நகரில் தீவிரமாக்கலாம்.

பெண்கள் ஹாஸ்டல், ஆண்கள் துணையில்லாமல் தனியாக இருக்கும் பெண்கள் இவர்களைத் தேடிப் பிடித்து எச்சரிக்கலாம். எந்த வீட்டிலும் ஜன்னல் கதவைத் திறந்து வைக்கக்கூடாது என்று எச்சரிக்கலாம்.

பொதுவான அறிவிப்பு செய்யாமல் மன்றங்கள் மூலமாக முயற்சி செய்து பார்க்கலாம்.

நரேந்திரன் சொன்னபடி செய்து பார்க்கலாம் என்று முடிவு செய்தார்.

பதினேழு

ஈகிள்ஸ் ஐ.

இரவு விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

ஜான்சுந்தரும், அனிதாவும் நரேந்திரன் கொண்டுவந்து போட்ட குறிப்புகளை எல்லாம் அலசிக்கொண்டிருந்தார்கள்.

"நேரம் குறைவாக இருக்கிறது. அந்த சைக்கோ உண்மையிலேயே சொன்ன சொல் தவறாதவனாக இருந்தால் அண்ணா நகருக்கு நாளை வருவான். அப்போது அவனைக் கையும் களவுமாகப் பிடிக்க வேண்டியது நமக்கு விடப்பட்டிருக்கும் சவால்.." என்றான் நரேந்திரன்.

"நம் முயற்சியை முழுமையாகச் செய்வோம்.." என்றான் ஜான்சுந்தர்.

பதினெட்டு

தேதி இருபத்தி ஏழு.

அவன் காத்திருந்தான். அண்ணா நகரின் உள்சாலைகளில் ஒன்றான முப்பத்தி எட்டாவது தெருவில் வெகுநேரமாக ஒரு மரத்தடியில் அவன் காத்திருந்தான்.

அவ்வப்போது கடந்துபோன போலீஸ் வாகனங்கள் அவன் முகத்தில் ஒரு புன்னகையைக் கொண்டுவந்தன. அவனுடைய எச்சரிக்கைக்கு இவ்வளவு துரிதமான பலன் இருக்கும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்தத் தெருவில் நடமாட்டம் இருந்தபோதெல்லாம் அவனும் அங்கும் இங்குமாக நடந்து யாருடைய கவனத்தையும் கவராமல் பார்த்துக்கொண்டான்,

அவனுடைய தோளில் சிறு பயணப்பை தொங்கியது. அவனுக்குத் தேவையான முக்கியமான கருவிகள் எல்லாமே அந்தப் பைக்குள் அடங்கிவிட்டன. வாட்சைப் பார்த்தான். மணி 4.30. இதோ இன்னும் சற்று நேரத்தில் கார் வந்துவிடும். காத்திருந்தான்.

அவன் எதிர்பார்த்திருந்தது போலவே அந்த எஸ்டீம் கார் சரியாக 4.45 க்கு அந்தத் தெருவுக்குள் நுழைந்தது. எட்டாம் எண் வீட்டு வாசலில் நின்றது. டிரைவர் இறங்கி கதவைத் திறக்க, உள்ளேயிருந்து பதினெட்டு வயது மதிக்கத்தக்க ஒரு பெண் இறங்கினாள். எட்டாம் நம்பர் கேட்டைத் திறந்து உள்ளே சென்று மறைந்தாள். காரை அங்கேயே நிறுத்திவிட்டு, காரைப் பூட்டிக்கொண்டு டிரைவர் அந்தத் தெருவைவிட்டு விலகினான்.

தினமும் மாலை 5 முதல் 6 வரை அந்தப் பெண் இசைப்பயிற்சி செய்வதற்காக வருவதை அவன் கவனித்து வைத்திருந்தது, இப்பொழுது பலனளித்தது.

டிரைவர் காரை அங்கே நிறுத்திவிட்டு, அடுத்த தெருவில் இருக்கும் விளையாட்டு மைதானத்தில் இளைஞர்கள் விளையாடிக்கொண்டிருக்கும் கிரிக்கெட்டை ரசித்துப் பார்த்துக்கொண்டிருப்பான். சரியாக ஐந்தே முக்கால் மணிக்கு மீண்டும் வந்து காரில் உட்கார்ந்துகொள்வான். ஆறு மணிக்கு பாட்டு டியூஷன் முடிந்து அந்தப் பெண் வந்ததும் கார் புறப்பட்டுவிடும்.

டிரைவர் பார்வையிலிருந்து மறைந்ததும் அவன் மரத்துக்குப் பின்னால் இருந்து திருப்பத்துக்கு வந்தான். இயல்பாக அந்தத் தெருவில் அவன் நடந்தான். திரும்பினான்.

அவரவர்கள் வீட்டில் அவரவரது வேலைகளில் மூழ்கியிருப்பதை உறுதி செய்துகொண்டான். காரை நெருங்கி சாவிகளைப் பிரயோகித்து முயற்சி செய்ததில் மூன்றாவது சாவி காரின்

டிக்கியைத் திறந்தது. டிக்கி மூடியை உயர்த்தித் திறந்து அவன் உள்ளே பதுங்கிக்கொண்டான். மூடியை இறக்கி மூடிவிட்டான்.

டிக்கிக்குள் இருள் அப்பியிருந்தது. முந்தின பயணங்களில் எடுத்துப்போன பெட்டிகள், வாழைத்தார், பலாப்பழம் போன்ற பலவற்றின் வாசனை குழப்பமாக நிரம்பியிருந்தது. தவிர மியூசிக் சிஸ்டத்துக்கு செல்லும் வயர்கள்...பன்ச்சர் ஆன டயரை மாற்றுவதற்கான ஜாக்கி, மாற்று டயர் என்று மற்ற பொருட்களும், டிக்கியில் அவனுடைய இடத்தைக் கொஞ்சம் அசௌகரியம் ஆக்கின. அதையெல்லாம் அவன் பொருட்படுத்தவில்லை. வெளியே இருந்த வெளிச்சம், சிறு கோடு அளவுக்கு பிளவின் வழியே உள்ளே தெரிந்தது. ஒடுங்கிப் படுத்து, கார் பயணம் செய்வதற்காக அவன் காத்திருந்தான்.

பத்தொன்பது

அண்ணா நகர் காவல்நிலையம்.

சென்னையின் மற்ற பகுதிகளிலிருந்தும், சில போலீஸ் அதிகாரிகள், கான்ஸ்டபிள்கள், கூடுதல் பாதுகாப்புக்காக வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ், நரேந்திரனிடம் விளக்கிக்கொண்டிருந்தார்.

"இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இந்த ஏரியா அத்துப்படி."

"இளநீர் விற்பவராக, தண்ணீர் கேன்களை டெலிவரி செய்பவர்களாக, பூ வியாபாரம் செய்பவர்களாக, ஆட்டோ ஓட்டுபவர்களாக, வெவ்வேறு வேடங்களில் எங்கள் துறையைச் சேர்ந்த ஆண் போலீசும், பெண் போலீசும் அண்ணா நகரில் இன்று இரவு முழுதும் இயங்கிக்கொண்டிருப்பார்கள். சந்தேகத்துக்கு இடமான யாரையும் இந்த ஏரியாவுக்குள் அனுமதிக்கப்போவதில்லை."

"உள்ளே வரும் அத்தனை வாகனங்களும் பரிசோதனை செய்யப்படும்."

"பெரும்பாலும் அவன் நள்ளிரவுக்கு மேல்தான் தன் தாக்குதலைத் துவக்குகிறான்."

"ஆனால் இரவு ஏழு மணியிலிருந்தே போலீசின் கண்காணிப்பு தீவிரமாகிவிடும். ஏற்கெனவே இந்த ஏரியாவில் இருக்கும் பெரும்பாலான பெண்களுக்குத் தகவல் தரப்பட்டுவிட்டது."

"பெண்கள் யாரும் இரவில் தனியாக வெளியே போக வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவசியம் காரணமாக வெளியே செல்ல வேண்டி இருப்பவர்களும் துணைக்கு மஃப்டியில் போலீசை அழைத்துச் செல்லும்படி எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள்."

அண்ணா நகரின் இன்ஸ்பெக்டரும் தன்னுடைய சார்பில் விளக்கங்களைக் கொடுத்தார்.

"இத்தனையும் தாண்டி அவன் தப்பித்துவிட முடியாது..." என்றார் பால்ராஜ்.

"நானும், வைஜயந்தியும், ஜான்சுந்தரும், அனிதாவும்கூட இன்று இரவு அண்ணா நகரில்தான் இருப்போம். அந்த சைக்கோ அடிக்கடி என்னைத்தான் சீண்டிக்கொண்டிருக்கிறான். தகவல்களை என் மூலம்தான் உங்களுக்குத் தெரியப்படுத்திக்கொண்டிருக்கிறான்.."

"வெல்.. வீ வில் வெயிட் ஃபார் தி கேட்ச்.. நம் வேட்டை வெற்றி பெறட்டும்."

பால்ராஜ் சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

"அப்புறம் நரேன், உனக்கு வந்த கடிதத்தில் எந்த விரல்

ரேகைகளும் சந்தேகப்படும்படி கிடைக்கவில்லை. ஏமாற்றம்தான்."

"சைக்கோ ரொம்ப உஷார்.." என்றாள் வைஜயந்தி.

இருபது

இரவு முழுவதும் தூக்கமில்லாததால் இமைகள் கனத்திருந்தன.

நரேந்திரன், போலீஸ் ஸ்டேஷன் மூலையில் வைக்கப்பட்டிருந்த பானையிலிருந்து தண்ணீரை எடுத்து முகத்தில் வாரி அடித்துக்கொண்டான்.

பால்ராஜின் மோட்டார் சைக்கிள் அப்பொழுதுதான் ஸ்டேஷனுக்குள் திரும்பியிருந்தது.

ஸ்டேஷனுக்குள் திரும்பியதும் பால்ராஜ் சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டார்.

"அண்ணா நகரிலுள்ள மகளிர் நற்பணி மன்றங்கள் மூலம் ஒவ்வொரு தெருவிலும் பீதியைக் கிளப்பாமல் பெண்கள் எச்சரிக்கப்பட்டுவிட்டார்கள்.."

"இரவு பத்து மணிக்கு மேல் யாரும் தனியே வெளியே போகவில்லை. அண்ணா நகருக்குள் நுழைந்தவர்களையும் போலீஸ் பாதுகாப்போடு அவரவர்கள் வீட்டுக்கு அழைத்துப் போனார்கள். எந்தத் தெருவையும் விடாமல் ரோந்து சுற்றிக்கொண்டுதான் இருக்கிறோம். நம் சைக்கோ இம்முறை அகப்பட்டுக்கொண்டுவிடுவான். நம்மிடம் அவன் தோற்றுப் போய்விடுவான் என்றுதான் தோன்றுகிறது."

பால்ராஜ் சொல்லி முடிப்பதற்காகவே காத்திருந்தது போல நரேந்திரனின் செல்ஃபோன் இசைக்க ஆரம்பித்தது.

எண்களைப் பார்த்ததும் நரேந்திரனுக்கு திடுக்கிடல் வந்தது.

"அவன்தான்.." என்றான்.

ஃபோனை காதில் வைத்ததும் எதிர்முனையில் ஆண்குரல் சிரித்தது.

"அண்ணா நகர் முழுவதும் சென்னையில் இருக்கும் போலீஸ்காரர்கள் அத்தனை பேரையும் ஏவிவிட்டிருக்கிறாயே.. உன் முட்டாள்தனத்தை நினைத்தால் எனக்கு சிரிப்புதான் வருகிறது.."

"ஏய்.. நீ எங்கே இருந்து பேசுகிறாய்..?"

"நீ இருக்கும் அண்ணா நகரில்தான் நானும் இருக்கிறேன். என் காரியத்தை இப்பொழுதுதான் முடித்தேன். கைகளை சோப்பு போட்டு கழுவினேன். உடனே உனக்கு தகவல் கொடுக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் உனக்கு ஃபோன் செய்தேன்.."

"வாட் டூ யூ மீன்..?"

"விடியும் வரை காத்திருந்தால் உனக்கே விவரம் தெரிந்துபோகும்.. இல்லை ரொம்ப அவசரம் என்றால் முகவரியை நான் உனக்குத் தருகிறேன். பதினைந்து நிமிடங்கள் கழித்து உனக்கு ஃபோன் செய்வேன்.."

மறுமுனை தொடர்பு அறுந்தது.

நரேந்திரன் தனக்கு சொல்லப்பட்ட விபரத்தை பால்ராஜிடம் பரபரப்பாகத் தெரிவித்தான்.

அந்த எண்ணுக்கு மறுபடி மறுப்டி ஃபோன் செய்து பார்த்தான். சைக்கோ தன் ஃபோனை ஸ்விட்ச் ஆஃப் செய்திருந்தான்.

"பால்ராஜ், அவன் காரியத்தை முடித்துவிட்டானாம். சிரித்துக்கொண்டே சொல்கிறான்.." நரேந்திரன் குரலில் பரபரப்பு இருந்தது.

"இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்கிறான் அவன்..?" பால்ராஜ் முகத்தில் கோபம் கொந்தளித்தது.

"அவன் சொல்வது உண்மைதானா என்று இந்த நேரத்தில் ஒவ்வொரு வீடாகத் தட்டி, திறந்து பார்த்துக்கொண்டிருக்க முடியுமா..?"

"அண்ணா நகரைவிட்டு வெளியேறும் அத்தனை வழிகளையும் அடைத்துவிட்டால்..?"

"நடக்கிற காரியமா நரேன்? பொதுமக்கள் கொதித்துவிடுவார்கள். சந்தேகப்படுபவர்களை மட்டும்தான் நாம் நிறுத்தி விசாரிக்க முடியும். ஒவ்வொரு வாகனத்தையும் நிறுத்திக்கொண்டிருக்கலாம். ஆனால் நடந்து போகிறவர்களையெல்லாம் நாம் விசாரிக்க முடியுமா..?"

"வழியே இல்லையா..?"

"அமெரிக்கா போல இங்கே எல்லோரும் தங்களுடைய அடையாள அட்டைகளையுமா சுமந்து போகிறார்கள்? அண்ணா நகரைவிட்டு வெளியே போகிறவர்கள் ரேஷன் கார்டு வைத்துக்கொள்ள வேண்டும் என்று சட்டம் போட முடியுமா..?

"விடிந்ததும் தொழிற்சாலைகளுக்குக் கிளம்பிப்போகும் பணியாளர்கள் எத்தனையோ பேர் இருப்பார்கள். இரவு டியூட்டி முடிந்து வீட்டுக்குத் திரும்புபவர்கள் இருப்பார்கள். அவர்களையெல்லாம் நிறுத்தி, தனித்தனியாக போலீசாரால் விசாரிக்க முடியுமா? இம்ப்பாசிபிள்..

"நம் கண்காணிப்பை சற்று முறுக்கேற்றலாம். வேறு எதுவும் இப்பொழுது செய்ய முடியாது.."

பால்ராஜ் சலிப்புடன் சொன்னார்.

நரேந்திரன் வெளியே வந்தான்.

"என்னால் ஸ்டேஷனில் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை பால்ராஜ். ஒரு ரவுண்டு போய்விட்டு வருகிறேன்.."

பைக்கை உதைத்துக் கிளப்பினான்.

இலக்கு என்ன என்று தெரியாமலேயே அண்ணா நகரின் சாலைகளில் அவனுடைய மோட்டார் சைக்கிள் நுழைந்தது. பயணம் செய்தது. வெளியேறியது. அங்கங்கே நிறுத்தப்பட்டு போலீசாரால்

விசாரிக்கப்பட்டது தவிர வேறு எந்தப் பலனும் இல்லை.

எப்படியும் பதினைந்து நிமிடத்தில் ஃபோன் செய்வதாக அவன்தான் சொல்லியிருக்கிறானே..

நரேந்திரன் காத்திருந்தான்.

பதினான்கு நிமிடங்கள் கடந்திருந்தபொழுது அவனுடைய ஃபோன் மீண்டும் ஒலிக்க ஆரம்பித்தது..

வண்டியை சடக்கென்று நிறுத்தி ஃபோனை எடுத்தான்.

"ஹாய் நரேன்.. எந்தத் தெருவில் சுற்றிக்கொண்டிருக்கிறாய்..?"

"நீ எங்கே இருக்கிறாய்..?"

"நான் எங்கே இருக்கிறேன் என்று கண்டுபிடிக்க வேண்டியது போலீசின் கடமை.. உன்னுடைய சாமர்த்தியம்.. ஆனால் நான் எங்கே இருந்தேன் என்பதை உனக்குச் சொல்கிறேன்.. மனை எண் 68869. இந்த இடத்தில் தேடிப் பார்த்தால் நான் வந்துபோன அடையாளம் உங்களுக்குத் தெரியும்.."

தொடர்பு அறுந்தது.

நரேந்திரன் உடனடியாக பால்ராஜுக்கு ஃபோன் செய்தான்.

இருபத்தொன்று

"நீ எந்தத் தெருவில் இருக்கிறாய்..?" என்றார் பால்ராஜ்.

நரேந்திரன் சொன்னான்.

பால்ராஜ் எதிர்முனையில் அண்ணா நகரின் வரைபடத்தைப் பார்த்து அவசரமாக அவனுக்கு உத்தரவுகள் கொடுத்தார்.

"எந்த டவரிலிருந்து கால் வந்தது என்று பார்த்தோம். அதே தெருவில் நேரே போ.. இடதுபுறம் திரும்பு.. அங்கிருந்து மூன்றாவது ரைட்.."

நரேந்திரன் வண்டியை விரட்டினான்.

தெருமுனையில் போய் அவன் வண்டியைத் திருப்பியபொழுது சரக்கென்று அம்பு பாய்ந்தாற்போல் அவனுக்கு முன்னால் ஒரு சைக்கிள் குறுக்கிட்டது. சைக்கிள் ஓட்டிய நபர், நரேந்திரனைப் பார்த்து கைகளை வீச, அந்த சைக்கிளின் மீது மோதிவிடக்கூடாதே என்று நரேந்திரன் மிக அவசரமாக பிரேக்கை அழுத்த வேண்டியிருந்தது.

சைக்கிளிலிருந்து பேலன்ஸ் தவறி இறங்கியவன் ஆர்மி பச்சையில் சீருடை அணிந்திருந்தான்.

கையில் வைத்திருந்த மூன்றடி தடியால், நரேந்திரனின் பைக்கை தட்டினான்.. சைக்கிளைத் தவறவிட்டு நரேந்திரனை நோக்கிக் கத்தினான்.

"ஏய், யார் நீ..? எங்கே போகிறாய்..?" அவன் குரல் அதிகாரமாக ஒலித்தது.

வெளிச்சம் போதாத அந்தப் பகுதியில் குறுக்கிட்ட அந்த ஆளை கவனித்தான் நரேந்திரன்.

சீருடையைப் பார்த்ததும் அவன், அந்த ஏரியாவில் ரோந்து சுற்றும் வாட்ச்மேன்களில் ஒருவன் என்று புரிந்தது.

ஐந்தடி மூன்றங்குலம் இருப்பான்.. கழுத்தில் ஒரு மஃப்ளரை சுற்றிக்கொண்டிருந்தான்.

நரேந்திரன் கோபத்தை அடக்கிக்கொண்டு, தன்னிடம் கொடுக்கப்பட்டிருந்த அடையாள பாஸைக் காட்டினான்.

அந்த வாட்ச்மேன் சல்யூட் அடித்தான்.

"ஏதாவது தகவல் கிடைத்ததா சார்..?"

"ஆமாம்.. இந்த ஏரியாவில் நமக்கு வேண்டாதவன் நுழைந்திருக்கிறான், அவன் வெளியே போய்விடக் கூடாது.. ஒவ்வொரு வண்டியையும் நிறுத்து.. போலீசில் உத்தரவு வாங்காமல் இந்த இடத்தைவிட்டு யாரையும் அனுப்ப வேண்டாம்.."

நரேந்திரன் பரபரப்பாகச் சொல்லிவிட்டு, பைக்கை உதைத்துக் கிளப்பினான்.

"சார், எங்கே என்று சொன்னால் நானும் வருவேனே!.." என்று

சொல்லி சரிந்திருந்த சைக்கிளை நிமிர்த்தி, அதில் ஏறினான் அந்த வாட்ச்மேன்.

நரேந்திரன் அவனுக்கு பதில் சொல்லாமல் வண்டியை விரட்டி மூன்றாவது வலதில் திரும்பினான்.

இருபத்தியிரண்டு

மேற்கு அண்ணா நகரின் அந்தப் பகுதியில் இரவைக் கிழித்து போலீஸ் வாகனங்கள் அதிரடித்து நுழைந்தன.

அவன் குறிப்பிட்ட மனை எண் புதிய எண்ணுடன் சாலையின் ஒரு கோடியில் இருந்தது.

சிறிய வீடு.. வெளிச்சத்தைப் பாய்ச்சிக்கொண்டு போலீஸ் வேன் வந்து நின்றது.

பால்ராஜ் குதித்து இறங்கினார். பைக்கில் வந்து சேர்ந்திருந்த நரேந்திரன் அவரோடு சேர்ந்து அந்த காம்பவுண்டைத் தாண்டி உள்ளே நுழைந்தான்.

அந்தத் தெருவிலிருந்து வெளியேறக்கூடிய அத்தனை பாதைகளும் போலீசாரால் சீல் வைக்கப்பட்டன. சக்தி வாய்ந்த டார்ச்சுகளை எடுத்துக்கொண்டு அவர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

"லுக் தேர்.." என்றான் நரேந்திரன்.

அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் ஜன்னல் ஒன்று பொக்கை வாயுடன் திறந்திருந்தது. ஜன்னலிலிருந்த கிரில் அமைப்பு கழற்றப்பட்டு கீழே வீட்டின் வெளிப்புற சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது.

"இந்த வீடுதான்.."

அவர்கள் இன்னும் பரபரப்பானார்கள்.

"உதைத்துத் திற..!.." என்றார் பால்ராஜ்.

கான்ஸ்டபிள்கள் தங்கள் தோள்களால் கதவை மோதி உதைத்தனர்.

நரேந்திரன் கைகளில் அவசரமாக கிளவ்ஸ்களை அணிந்து திறந்திருந்த ஜன்னல் வழியே வீட்டுக்குள் குதித்தான்.

வாசல் கதவை உடைத்துத் திறந்துகொண்டு போலீஸ் உள்ளே நுழைந்தது.

நரேந்திரன் குதித்த இடம் படுக்கையறை. டார்ச் வெளிச்சத்தில் கட்டிலைப் பார்த்ததும் அந்த கோரக்காட்சி நரேந்திரனைத் தாக்கியது.

எதையும் கலைத்துவிடாமல் மெல்ல தரையில் இறங்கினான்.

பால்ராஜ் படுக்கையறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்.

கட்டிலின் மீது போர்த்தப்பட்டிருந்த படுக்கை விரிப்பு உள்ளே ஒரு மனித உடலை ஒளித்திருந்தது. புதிய ரத்தம் கசிந்து அந்தத் துணியை சிகப்பாக்கிக்கொண்டிருந்தது.

"எதையும் கலைக்காதீர்கள்.." பால்ராஜ் எச்சரிக்கை செய்துவிட்டு மெல்ல படுக்கையை நெருங்கினார்.

போலீஸ் வாகனங்களின் திடீர் ஒலியால் கவரப்பட்டு,

அக்கம்பக்கத்து வீடுகளில் விளக்குகள் எரிந்தன. ஆர்வம்கொண்ட பலர் எட்டிப் பார்த்தனர். தைரியமான சிலர் வெளியே வந்து விசாரித்துவிட்டுப் போனார்கள்.

நரேந்திரன் அந்த வீட்டுக்கு வெளியே நிகழ்ந்த நடவடிக்கைகளைப் பற்றி எந்தக் கவலையும் இன்றி கவனம் முழுவதையும் கட்டிலின் மீது வைத்திருந்தான்.

பால்ராஜ் தன் ரூல் தடியால் மெல்ல அந்தப் போர்வையின் நுனியை உயர்த்தினார்.

சரேலென்று போர்வையை விலக்கியதும் அதிர்ந்தார்.

கட்டிலின் மீது கழுத்து சீவப்பட்டு ரத்தத்தை வெளியேற்றிக்கொண்டிருந்தது ஒரு பெண் அல்ல.

ஆண் பிணம்!

நரேந்திரனின் செல்ஃபோன் ஒலித்தது.

"என்ன நரேன்? ஆச்சரியமா, அதிர்ச்சியா..?"

"யூ.. யூ.."

"இவ்வளவு பந்தோபஸ்தைத் தாண்டி எப்படி வந்தேன் என்று கேட்க மாட்டாயா..?"

"எப்படி வந்தாய்..?"

"போலீஸ் கெடுபிடி ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே இந்தத் தெருவுக்கு வரும் இன்னொரு காரில் ஏறி ஒளிந்துகொண்டுவிட்டேன். கிட்டத்தட்ட ஆறு மணி நேரங்களுக்கு மேலாக டிக்கியில் ஒளிந்திருந்தேன். அப்புறம் வெளியே வந்து எதிர்வீட்டுக்குள் நுழைவது கஷ்டமாக இல்லை!"

தொடர்பு படக்கென்று அறுந்தது.

நரேந்திரன் முகத்தில் வெறுப்பு வெடித்தது.

இருபத்தி மூன்று

நரேந்திரனும், பால்ராஜும் வளையம் வளையமாக புகையை ஊதிக்கொண்டிருந்தார்கள்.

கலைக்கப்பட்ட எறும்புப் புற்று போல் அந்தப் பிரதேசமே வெகு சுறுசுறுப்பாகியிருந்தது.

போலீஸ் துறையின் வாகனங்கள் கூடி இருந்தன. புலன் விசாரணை செய்யும் அதிகாரிகள், தடயவியல் துறையின் நிபுணர்கள், போலீஸ் ஃபோட்டோகிராஃபர்கள், டாக்டர்கள் என்று பலரும் குவிந்திருந்தனர்.

முதலில் வெளியே வந்தவர் டாக்டர்..

"யூ ஆர் கரெக்ட் இன்ஸ்பெக்டர்.. இந்தக் கொலை நடந்து முடிந்து இரண்டு மணி நேரங்கள்தான் ஆகிறது.. வழக்கமான அதே முறைதான். அறைக்குள் முதலில் மயக்க மருந்து பீய்ச்சப்பட்டிருக்கிறது.. அதன்பின் கிரில் திறந்து அவன் உள்ளே நுழைந்திருக்க வேண்டும். கட்டிலில் மயக்கத்தில் இருந்தவரை நெருங்கி எளிதாக அவருடைய கழுத்தை வெட்டியிருக்கிறான். கொலை செய்யப்படும் முன், எல்லா உடைகளும் நீக்கப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டிருக்கிறார்.."

"இவர் வயிற்றில் நான்கு என்ற எண் எழுதப்பட்டிருக்கிறது. கண்கள் இரண்டும் குடைந்து எடுக்கப்பட்டிருக்கின்றன."

"இட் ஈஸ் அ ஹாரிபிள் சைட்.."

நரேந்திரன் சிகரெட்டை கீழே போட்டு நசுக்கினான்.

"நிஜமாகவே நம்மை முட்டாளாக்கிவிட்டான் பால்ராஜ்.. அவன் செய்துவரும் கொலைகள் எல்லாமே பெண்கள்தான் என்று நாம் நினைத்திருந்தோம்.. அண்ணா நகரில் கூடியவரை பெண்களிடத்தில் எச்சரித்திருந்தோம்.. ஆனால் கொலை செய்ய அவன் தேர்ந்தெடுத்திருப்பது இந்த முறை ஆண். பெண்களைவிட சற்றே வலுவானவர். ஆனால் அவரையும் மயக்க மருந்தால் தாக்கி, கழுத்தில் வெட்டி, கண்களைக் குடைந்தெடுத்து.. எங்கே தவறு நிகழ்ந்துவிட்டது பால்ராஜ்..?"

"தவறு அவனிடம் இல்லை.. நம்மிடம்தான்.." என்றார் பால்ராஜ்.

"ஒரு முறைகூட பெண்களைத்தான் கொலை செய்வேன் என்று அவன் உன்னிடம் சொல்லவில்லை. தன்னுடைய அடுத்த பலி அண்ணா நகரில் இருக்கும் என்றுதான் சொன்னான். அது பெண்ணாகத்தான் இருக்கும் என்று நாம்தானே கற்பனை செய்துகொண்டோம்..?"

"இறந்தவரைப் பற்றி ஏதேனும் தகவல் கிடைத்ததா பால்ராஜ்..?"

"சேகரித்துவிட்டோம்... சொல்கிறேன் கேள்."

இருபத்து நான்கு

"சொல்.." என்றார் ராம்தாஸ்..

"இறந்தவர் பெயர் பாஸ்கர். நாற்பத்தைந்து வயது. ஸ்டேட் பாங்க்கில் ஆஃபீசர்.. மனைவிக்கு நாற்பது வயது. இன்கம் டாக்ஸ் ஆஃபீசில் வேலை பார்க்கிறார். பதினைந்து வயதில் ஒரு மகன், பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கிறான்.

"பாஸ்கர் படுத்துக்கொண்டிருந்த அதே அறையில்தான் அவருடைய மனைவியும் படுத்திருந்தாள். பக்கத்து அறையில் மகன் படுத்திருந்தான்.

"வழக்கம்போல.. இரண்டு அறைகளிலும் ஜன்னல் வழியே மயக்க மருந்து பாய்ச்சப்பட்டிருக்கிறது. கிரில்லைத் திறந்து உள்ளே நுழைந்தவன் பாஸ்கரின் மனைவியைக் காயப்படுத்தவில்லை. பாஸ்கரை மட்டும் தன்னுடைய வழக்கப்படி கொலை செய்து, கண்களைத் தோண்டி எடுத்துவிட்டான். கத்தியால், வயிற்றில் நான்கு என்ற எண்ணையும் எழுதியிருக்கிறான்.."

நரேந்திரன் சொல்லச் சொல்ல ராம்தாஸ் பைப்பை மேஜை மீது வைத்தார்.

"அவன் வேண்டுமென்றே நம்மை குழப்புவதற்காக ஒரு ஆணைக் கொலை செய்திருப்பானா தாஸ்..?"

"நோ.." என்றார் ராம்தாஸ்.

"உனக்கு ஃபோன் செய்து சவால் விடுத்தவன் புத்திசாலியாக இருக்கிறான். அவனுக்கு சவாலில் வெற்றி பெற வேண்டும் என்ற துடிப்பு இருக்கிறது.. முன்கூட்டியே சொல்லிவிட்டு மூன்று கொலைகள் செய்திருக்கிறான். ஸோ, நினைத்திருந்தால் பாஸ்கரை விட்டுவிட்டு அவர் மனைவியை கொலை செய்திருக்க முடியும். அப்படி செய்யாமல்விட்டது நம்மைக் குழப்புவதற்காக அல்ல.. அவன் தேடிப்போனதே பாஸ்கரைத்தான்..!.." ராம்தாஸ் அழுத்தம்திருத்தமாகச் சொன்னார்.

"ஆனால் இது அந்த பேட்டர்னில் ஒத்து வரவில்லை தாஸ்.."

"தட் ஈஸிட். அடுத்து அடுத்து பெண்களைத்தான் கொலை செய்வான் என்று நாம் போட்டு வைத்த பேட்டர்னில் அது வரவில்லை.. ஆனால் இதுவரை கொலையான ஐந்து பேருக்கும் ஏதோ ஒரு பொதுவான தொடர்பு இருக்க வேண்டும். அதைக் கண்டுபிடித்துவிட்டால் பாதி கேஸை முடித்துவிட்டோம் என்று அர்த்தம்.."

"என்னுடைய அடுத்த தூக்கம் அந்தப் பொதுவான அம்சத்தைக் கண்டுபிடித்த பிறகுதான்.." என்று எழுந்தான் நரேந்திரன்.

வானத்து சாம்பலை உதிர்த்துக்கொண்டு சூரியன் வெளியே

வந்தது.

அந்தப் பிரதேசத்தில் நடமாட்டம் அதிகரித்திருந்தது. பெண்களின் அழுகைக் குரல் வீட்டுக்குள்ளிருந்து தொடர்ந்து ஒலித்தது.

காவல்துறையின் நிபுணர்கள் அந்த வீட்டின் பல பகுதிகளை நுணுக்கமாக ஆராய்ந்துகொண்டிருந்தார்கள்.

நரேந்திரனும், பால்ராஜும் அப்பொழுதுதான் வந்துசேர்ந்திருந்த வைஜயந்தியும் ஜீப்பின் அருகில் நின்றிருந்தார்கள்.

"இத்தனை பேர் கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டு அவன் எப்படி பால்ராஜ் தப்பித்துப் போயிருக்க முடியும்..?" வைஜயந்தி கேட்டாள்.

அவள் அணிந்திருந்த மிடி காலைக் காற்றில் படபடத்துக்கொண்டிருந்தது. ஸ்லீவ்லெஸ் டாப்ஸ் அவளுடைய கைகளின் தந்தத் தன்மையை வெளிச்சம் போட்டு காட்டிக்கொண்டிருந்தது. ஆனால் அதை ரசிக்கும் மூடில் நரேந்திரன் இல்லை.

"இரண்டு மூன்று வழிகள் இருக்கின்றன.." என்றார் பால்ராஜ். "அவன் இதே ஏரியாவைச் சேர்ந்தவனாக இருக்கலாம். ஏரியாவைவிட்டு வெளியே போயிருக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. அல்லது இப்போதும் இந்த ஏரியாவிலேயே எங்காவது ஒளிந்திருக்கலாம்.."

"அல்லது நமக்குப் புலப்படாத ஏதோ ஒரு விதத்தில் அவன் தப்பித்துப் போயிருக்கலாம்."

நரேந்திரன் சரேலென்று நிமிர்ந்தான்.

"பால்ராஜ், இந்த ஏரியாவில் போலீஸ்காரர்களைத் தவிர ரோந்து சுற்றும் பணியில் ஈடுபட்ட செக்யூரிட்டி வாட்ச்மேன்களை சேகரியுங்கள்.. அவர்களிடம் சந்தேகப்படும்படியாக நடமாட்டங்கள் ஏதாவது இருந்ததா என்று கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.."

அரைமணி நேரத்தில் நாற்பத்தெட்டு செக்யூரிட்டி கார்டுகள் அங்கே குழுமிவிட்டனர்.

"கொலை நடந்த பகுதியில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த செக்யூரிட்டியை நான் அந்த நேரத்தில் பார்த்தேன் பால்ராஜ்.."

"வாட்..?"

"என் பைக்கின் குறுக்கே வந்து விழுந்தார். அவரைத் தனியே கூப்பிட்டு விசாரிக்க வேண்டும்."

"வந்திருப்பவர்களில் அது யார் என்று பார்.."

கான்ஸ்டபிள் விவரம் சொன்னதும், இரண்டடி முன்னே வைத்த செக்யூரிட்டி இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞன்.

விறைப்பான உடலும், வலுவான தோள்களுமாக நின்றான்.

"இவரில்லை,.." என்றான் நரேந்திரன். "நான் பார்த்த நபர் ஐந்தரை

அடிக்கும் குறைவாகத்தான் இருந்தார். சைக்கிளில் வந்திருந்தார்.."

"நீயே பார்.." என்றார் பால்ராஜ்.

ஒவ்வொரு முகமாகப் பார்த்தான் நரேந்திரன்.

"இவர்களில் அவர் இல்லை பால்ராஜ்."

"உங்களில் யாராவது டியூட்டி முடிந்து வீட்டுக்குப் போயிருக்கலாம் அல்லவா..?" என்று கேட்டார் பால்ராஜ்.

"இல்லை.." என்றான் செக்யூரிட்டி ஆள்..

"கொலை நடந்துவிட்டது என்றதும் போலீஸ் மொத்தமாக ஏரியாவையே சீல் வைத்துவிட்டது.. உபயோகமான சாட்சிகளாக இருப்போம் என்று எங்களையெல்லாம் வீட்டுக்குப் போக வேண்டாம் என்று இன்ஸ்பெக்டர் தடுத்துவிட்டார். நேற்றைக்கு டியூட்டிக்கு வந்தவர்கள் அத்தனை பேரும் இருக்கிறோம்.."

"மை காட்.." என்றான் நரேந்திரன்.

"பால்ராஜ், எனக்கு இப்பொழுது புரிகிறது.. என் பைக்கின் மீது, சைக்கிளோடு வந்து மோதியவன் செக்யூரிட்டி ஆள் இல்லை.. அது அந்த சைக்கோ.கொலைகாரனாக இருக்க வேண்டும்.. அதே ஏரியாவில் வெகு அழகாகத் தப்பித்து வந்திருக்கிறான்.. முட்டாள்தனமாக கைகழுவ விட்டிருக்கிறேன்.."

பால்ராஜ் உஷாரானார்.

"நீ அவனை நெருக்கத்தில் பார்த்தாயா நரேன்..?"

"பார்த்தேன்.. ஆனால் அப்பொழுது இருட்டாய் இருந்தது.. இதோ இந்த உயரம் இருப்பான். இந்த அகலம் இருப்பான்.. கழுத்தைச் சுற்றி ஒரு மஃப்ளர் போட்டிருந்தான்.."

"மஃப்ளர்.. இந்த வெயில் காலத்திலா..?"

வைஜயந்தி நரேந்திரனின் பின்னந்தலையில் செல்லமாகத் தட்டினாள்.

"உடனே உனக்கு சந்தேகம் வந்திருக்க வேண்டாம்..?"

"மிஸ் பண்ணிவிட்டேன்.."

"அப்படியே இருந்தாலும், இந்த ஏரியாவைவிட்டு எந்த செக்யூரிட்டி கார்டும் சைக்கிளில் வெளியே போகவில்லை என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.." என்றார் ஹெட் கான்ஸ்டபிள்.

"முதலில் கொலை நடந்த இடத்திலிருந்து செக்யூரிட்டி கார்டு போல வெளியேறிவிட்டான். அப்புறம் ஏரியா மனிதர்களின் உதவியையும் அவன் ஒரு செக்யூரிட்டிபோல் நாடி இருந்தால், வெகு சுலபமாக இந்த ஏரியாவுக்குள் சைக்கிளை மிதித்துக்கொண்டு வேறு பகுதிக்கு அவனால் சென்றிருக்க முடியும்.. யாருக்கும் சந்தேகம் வந்திருக்காது."

"அங்கிருந்து எப்படியோ மாயமாகிவிட்டான்.." என்றாள் வைஜயந்தி, சலிப்பாக.

"என்னைவிட ஓரடி முன்னாலேயே இருக்கிறான்.." என்றான் நரேந்திரன், ஆற்றாமையுடன்.

இருபத்து ஐந்து

ஈகிள்ஸ் ஐ..

ராம்தாஸின் அறை..

ஏ.ஸி-யை மீறி ராம்தாஸின் வழுக்கை சற்றே வியர்த்திருந்தது. அறையில் கூடியிருந்தவர்களை ஒவ்வொருவராக ராம்தாஸ் பார்த்தார்.

நரேந்திரன், வைஜயந்தி, ஜான்சுந்தர், அனிதா, இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

பளபளப்பான மேஜை மீது ஏராளமான காகிதங்கள் பரப்பப்பட்டிருந்தன.

நடந்து முடிந்த கொலைகளைப் பற்றிய விபரங்கள் அடங்கிய ஃபைல்கள் திறந்திருந்தன.

ராம்தாஸ் சில காகிதங்களை எடுத்தார். ஏற்கெனவே அதில் சிகப்பு மையாலும், பச்சைப் பேனாவாலும் பல பகுதிகள் வட்டமிடப்பட்டிருந்தன..

ராம்தாஸ் பைப்பை உதடுகளிலிருந்து எடுத்து அலங்காரமான ஆஷ்ட்ரேயில் வைத்தார். தெளிவான குரலில் பேசினார்.

"இதுவரை சேகரித்த எல்லா விவரங்களையும் அலசிப் பார்த்தாகிவிட்டது. வெவ்வேறு ஊர்களில் இருந்த நான்கு பெண்களும், சென்னையில் இருந்த ஒரு ஆணும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

"இவர்களுக்கெல்லாம் பொதுவான அம்சம் இருக்க வேண்டும் என்பதுதான் இப்பொழுது அலசிப் பார்க்கப்பட்டது.

"ஒரு குறிப்பிட்ட விஷயம் நமக்கு இங்கு கிடைத்திருக்கிறது. மூன்று வருடங்களுக்கு முன்னால் கொலை செய்யப்பட்ட இவர்கள் எல்லோரும் ஜூன் மாதத்தில் கொடைக்கானலில் இருந்திருக்கிறார்கள்.

"ஜூன் பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று தேதிகளில் குறைந்தபட்சம் இரண்டு நாட்களிலாவது இந்த ஐந்து பேரும் இருந்திருக்கிறார்கள்.. இன்னொரு விஷயம்.. இவர்கள் எல்லோரும் தங்கியிருந்தது மலை வைரம் என்ற ஹோட்டலில்..

"கொடைக்கானலில் இவர்கள் தங்கியிருந்தபோது அங்கு நடந்த ஏதோ ஒரு அசம்பாவித்தை இவர்கள் பார்த்திருக்கலாம்.. யாருடனாவது எந்த முறையிலாவது இவர்களுக்குப் பகை ஏற்பட்டிருக்கலாம்.. அந்தப் பகை காரணமாக கொலைகாரன் இவர்களைப் பழிவாங்க முடிவு செய்திருக்கலாம். மனரீதியாக பாதிக்கப்பட்ட அந்த சைக்கோ, ஒவ்வொருவராகத் தேர்ந்தெடுத்து கொலை செய்துகொண்டிருக்கிறான்...

"கொடைக்கானலுக்குப் போய் இவர்கள் தங்கியிருந்த நாட்களில், அங்கு நடந்த வித்தியாசமான அசம்பாவிதங்கள் என்னென்ன என்று விசாரித்துவிட்டால் கொலைகாரனை நெருங்கிவிட முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது.."

பால்ராஜ் நிமிர்ந்தார்.

"நீங்கள் சொன்ன தியரி சரியாக இருக்கும் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது தாஸ், தேங்க் யூ! கொடைக்கானல் இன்ஸ்பெக்டரை எனக்குத் தெரியும். நாங்கள் உடனே இந்த விவகாரத்தை ஆராய்கிறோம்."

ராம்தாஸ் பைப்பில் இருந்த புகையிலையை ஆஷ்ட்ரேயில் தட்டினார்.

"ஜான்சுந்தரும், அனிதாவும்தான் அத்தனை பேருடைய பழைய குறிப்புகளையெல்லாம் எடுத்து இந்தத் தகவல்களை சேகரித்துக் கொடுத்தார்கள்.. தாங்க் தெம்.." என்றார்.

இருபத்து ஆறு

கொடைக்கானலின் முகடுகளை மேகங்கள் தழுவி வருடிக்கொண்டிருந்தன.

பூத்துக் குலுங்கிய பூக்களை காற்று கிச்சுகிச்சு மூட்டி விரைந்தது. பாதையோரம் வளர்ந்திருந்த பசுமை மட்டும் டீசல் புகைகளால் கறுத்து, உயிர் விட்டிருந்தது.

மலைப்பாதையில் அந்த ஜிப்சி சீறி ஏறியது. வளைவுப் பாதையில் லாகவமாகத் திருப்பி நிமிர்த்திய நரேந்திரனின் மீது வைஜயந்தி சற்றே சாய்ந்து நிமிர்ந்தாள்.

"என்ன இருந்தாலும், இங்கிலீஷ்காரனுக்கு முன்யோசனை அதிகம். இதற்காகவே, கொண்டையூசி வளைவுகளைக் கட்டியிருக்கிறான், பார்"

"ரோடைப் பார்த்து ஓட்டு.." என்று பற்களைக் கடித்தாள், வைஜயந்தி.

"என்ன சென்ட் போட்டிருக்கிறாய், வைஜ்? புதிதாய் இருக்கிறது, வாசனை..?"

"தெரியாத்தனமாக இந்த சட்டைக்குள் செருப்பைச் சுற்றி வைத்திருந்தேன். போதுமா? என்னையே மோப்பம் பிடித்துக்கொண்டிருக்காமல், மூக்கை நேராக வைத்துக்கொண்டு ஓட்டு. உன் ஸ்டைலைக் காட்டப் போய், நம்மை அதல பாதாளத்தில் கண்டுபிடிக்கும்படி ஆகிவிடப் போகிறது.."

"அப்படியானால் ஒரு கடிதம் எழுதிவிடு, வைஜ்"

"என்னவென்று..?"

"எங்கள் காதலுக்கு எதிர்பார்த்த இடங்களிலிருந்து எந்தத் தடையும், எதிர்ப்பும் இல்லை. அதனால், ஏமாற்றமாகி, மனமுடைந்து நாங்கள் இணைந்தே எடுத்த முடிவு இது என்று எழுதிவிட்டால், போலீஸ் வேலை மிச்சமாகும், பார்"

"காதலா? அப்படியொரு கனவு வேறு இருக்கிறதா உனக்கு? வேண்டுமானால், இப்படி எழுதுகிறேனே..?"

"எப்படி..?"

"இந்த ஸ்கௌண்ட்ரலின் தொந்தரவு தாங்காமல் நான்தான் இவனை மலையிலிருந்து உருட்டிவிட்டேன் என்று எழுதிவிட்டு, இறங்கிவிடுகிறேன். நீ மட்டும் எந்த வளைவிலிருந்து குதிக்க வேண்டுமோ, குதித்துக்கொள்"

"அடிப் பாவி.." நரேந்திரன் வண்டியை அடுத்த திருப்பத்தில் திருப்பிய வேகம் பார்த்து, குரங்குகள் அவசரமாக மரம் மாறின. "உன் மேல் ஆசை வைத்ததற்கு சில்க் ஸ்மிதா செத்தபோது, பேசாமல் நானும் சேர்ந்து தற்கொலை செய்துகொண்டிருக்கலாம்.

மதிப்பாகவாவது இருந்திருக்கும்.."

சொன்ன வேகத்தில் நரேந்திரன் பிரேக் அடித்து வண்டியை நிறுத்த வேண்டியிருந்தது.

குறுக்கில் கைகளை வீசிக்கொண்டு பாதைக்குள் வந்து நின்றவனுக்கு முப்பது வயதிருக்கும். நைந்து போன கறுப்பு கோட், நிறம் இழந்த காலருடன் உள் சட்டை. கழுத்தில் தொங்கும் கேமிரா.

"இரண்டு பேரும் ஜோடியாக போட்டோ எடுத்துக்கொள்ளுங்கள், சார். டயானா வந்தபோதுகூட நான்தான் எடுத்தேன். ஆல்பம் பார்க்கிறீர்களா, சார்..?" என்று மூக்குக் கண்ணாடியை ஏற்றிவிட்டுக்கொண்டே அவன் மூச்சிரைத்து நின்றான்.

"இப்படி குறுக்கில் நிற்காமல் அதோ, அந்தப் பள்ளத்தில் போய் காத்திருங்கள். இரண்டு பேருமாக சேர்ந்து குதிப்பதை போட்டோ எடுக்கலாம்.."

"இரண்டு பேரில்லை. அவர் மட்டும் பறந்து வருவார்.." என்று திருத்தினாள், வைஜயந்தி.

"மேடம், உங்களைப் பார்த்தால், ஹாலிவுட் ஹீரோயின் போலவே இருக்கிறீர்கள்.." என்று அவன் ஆல்பத்தைத் திறந்து பிடித்து வைஜயந்தியின் முகத்துக்கு நேரே நீட்டினான்.

"கண்டுபிடித்துவிட்டீர்களே. இவள்தான் கோஸ்ட் படத்தில் மேக்கப் போடாமல் நடித்து ஹாலிவுட்டையே கலங்கடித்தாள்"

"தேவதை போல் இருப்பவர்களை இப்படிப் பேசுகிறீர்களே, சார்..?"

"யோவ், நீ இப்போது நகரவில்லையென்றால், நாளையிலிருந்து நீயும் பிசாசாக அலைய வேண்டியதுதான். மோதித் தூக்கிவிடுவேன்"

நரேந்திரன் ஜிப்சியை படக்கென்று வளைத்துத் திருப்பி அவனைக் கடந்து விரட்டினான்.

கோடை ஏரியை ஒட்டியிருந்த பெரிய சாலையில் ஏற்றத்தில் இருந்தது அந்த ஹோட்டல்.

'மலை வைரம்' என்ற எழுத்துக்கள் நியான் குழாய்களாக வளைந்திருந்தன. சற்றே மேடிட்டிருந்த மலை பூமியில் குத்தி வைத்த கான்க்ரீட் கத்தி போல் அந்தக் கட்டிடம். பார்க்கிங் பகுதியில் ஜிப்சியை நிறுத்தியதும், சீருடை அணிந்த பணியாளன் வந்து சாவியை வாங்கிக்கொண்டான். இன்னொருத்தன், பெட்டிகளை இறக்கினான்.

"ரிசர்வேஷன் இருக்கிறதா, சார்..?"

"யா.." என்றாள், வைஜயந்தி ஒயிலாக.

ரிசப்ஷனில் டை கட்டிய ரிசப்ஷனிஸ்ட், வைஜயந்திக்குக் கூடுதலான பணிவு காட்டி, "வெல்கம், மேடம். என்ஜாய் யுவர் ஹனிமூன்.." என்று எல்லாப் பற்களையும் காட்டினான்.

"ரிசர்வேஷன் என் பெயரில்தான் இருக்கும்.." என்று நரேந்திரன்

ரிஜிஸ்தரில் தட்டினான்.

"யெஸ், சார். உங்களுக்கு மூன்றாவது மாடியில் லேக்வியூ ரூம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அறை எண் 606"

இருபத்து ஏழு

அறை அகலமாய் இருந்தது.

ஒரு புறம் முற்றிலும் திரையிட்ட கண்ணாடிச் சுவர். வெளியே ஆழத்தில் கொடைக்கானலின் ஏரிப் பரப்பில் காகித பொம்மைகள் போல் மிதக்கும் படகுகள்.

"மேடம், டிபன் அறைக்குக் கொண்டுவரவா, ரூஃப் கார்டன் வந்து எடுத்துக்கொள்கிறீர்களா..?" என்றான், பெட்டிகளை இறக்கி வைத்த சிப்பந்தி.

"நாங்களே வருகிறோம்.." என்றாள் வைஜயந்தி.

சிப்பந்தி வெளியேறியதும், நரேந்திரன் கதவைத் தாளிட்டான்.

"பால்ராஜ் எப்படியும் பத்து மணிக்குதான் வருவதாகச் சொல்லியிருக்கிறார். அதுவரைக்கும் விளையாடிக்கொண்டிருக்கலாம், வாயேன்.." என்று கட்டிலில் தொபுக்கடீர் என்று விழுந்தான்.

"கிரேட் ஐடியா. இதை வைத்து விளையாடிக்கொண்டிரு.." வைஜயந்தி தன் ஹேண்ட் பேகிலிருந்து சைனீஸ் க்ளோபை எடுத்து அவன் மீது எறிந்தாள்.

பல துண்டங்களாகப் பிரிந்து நசுங்கிய முட்டை போல் கிடந்த அந்தப் பகுதிகளை ஒன்றுடன் ஒன்று சரியாகப் பொருத்தினால், பந்து போல் முழுமை பெறும் என்று அவனுக்குத் தெரியும்.

"கொடைக்கானல் வந்துவிட்டு, ஹனிமூன் ஜோடி போல் நடந்துகொள்ளாவிட்டால், அந்தப் பாவத்துக்கு நரகத்தில் எண்ணெய்க் கொப்பரைக்குள் போட்டுவிடுவார்கள், வைஜ்.."

"அது எவ்வளவோ பரவாயில்லை"

"உனக்கு இரக்கமே கிடையாதா..?"

"ராத்திரி வரைக்கும் நீ என்னைத் தொடாமல் இருந்தால், நீ எதிர்பார்க்காத ஒரு பரிசு கொடுப்பேன்"

"ப்ராமிஸ்..?"

"ப்ராமிஸ்.."

வைஜயந்தி சடக்கென்று பாத்ரூமுக்குள் நுழைந்துவிட்டாள்.

பக்கத்தில் இருந்த தலையணையை அணைத்துக்கொண்டு ஏரியை வேடிக்கை பார்த்தபடி நரேந்திரன் படுத்திருக்க-

அவன் செல்போன் ஒலித்தது. அதன் இசையைக் கேட்டதும், தலையணையைத் தள்ளிவிட்டு, நரேந்திரன் பாய்ந்து எடுத்தான்.

"சொல், சைக்கோ.."

எதிர்முனையில் ஒலித்த குரலில் மெலிதான சிரிப்பு இருந்தது.

"எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது"

"எதற்கு..?"

"ஈகிள்ஸ் ஐ பற்றி நான் வைத்திருந்த அபிப்ராயம் தவறவில்லை. நான் எதிர்பார்த்ததைவிட வேகமாகவே செயல்பட்டிருக்கிறாய், நரேன்"

"தேங்க்யூ"

"கொடைக்கானலுக்கு நீ போய்விட்டதால், என் அட்டவணையை மாற்றி, நான் கொஞ்சம் அவசரமாக என் அடுத்த நடவடிக்கையில் இறங்கவேண்டியிருக்கிறது"

"அடுத்து என்ன செய்யப்போகிறாய்..?" நரேந்திரனின் குரலில் கவலை சேர்ந்துவிட்டது.

"என்னுடைய அடுத்த தாக்குதல் தமிழ்நாட்டுக்கு வெளியே.."

"எங்கே..?"

"கண்டுபிடி. சவாலில் நீ ஜெயிக்கப்போகிறாயா, நான் ஜெயிக்கப்போகிறேனா என்று ஒரே படபடப்பாக இருக்கிறது.."

"இப்போதாவது நீ யார் என்று சொல்லலாமே..?"

"அதே சைக்கோ"

மறுமுனைத் தொடர்பு அறுந்தது.

நரேந்திரன் எழுந்து உட்கார்ந்துவிட்டான். தமிழ்நாட்டுக்கு வெளியே என்றால், எங்கே? கேரளாவிலா, உத்தரப் பிரதேசத்திலா, காஷ்மீரிலா, மகாராஷ்டிராவிலா, எங்கே?

மறுபடி போன் ஒலித்தது. இந்த முறை எண்ணைப் பார்த்ததும் நிம்மதி மூச்சுவிட்டான்.

"சொல்லுங்கள், பால்ராஜ்"

"கொடைக்கானல் வந்து சேர்ந்தாயிற்று. இன்னும் இருபது நிமிடங்களில் அங்கே இருப்பேன்.." என்றார், இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

மொட்டைமாடியில் அமைந்திருந்த பூங்கா விடுதியில் மெலிதான குளிர் பூத்திருந்தது.

அங்கிருந்து எட்டிப் பார்த்தால் மரங்கள் விளிம்பிட்ட ஏரியின் அழகு கூடிப்போனது. பிளாஸ்டிக் படகுகளில் பெடல் செய்யும் இளம் பெண்கள் அங்கிருந்தே நரேந்திரனுக்குக் கை அசைத்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். துடுப்புப் படகில் பயணம் செய்யும் ஒரு புது ஜோடி வைஜயந்தியைப் பார்த்து துடுப்பைவிட்டு இரு கைகளையும் வீசிக் காட்டியது.

நரேந்திரனின் தோளில் கை விழுந்தது.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"ஹாய் டியர்ஸ். நமக்கு அந்த மேஜை ஒதுக்கப்பட்டிருக்கிறது"

ஏரியைப் பார்த்தவாறு அமரக்கூடிய பகுதியில் அவர் குறிப்பிட்ட மேஜை அமைக்கப்பட்டிருந்தது.

நரேந்திரன், வைஜயந்தி, பால்ராஜ் மூவரும் ஒருவரைப் பார்த்து

ஒருவர் அமர்ந்தார்கள். தேநீர் ஆர்டர் செய்தார்கள்.

நீல வானத்தில் கலைந்து கிடந்த மேகங்களின் வழியே பளீரிட்டுக்கொண்டிருந்த சூரிய வெப்பம் இதமாயிருந்தது.

"இதுவரை கொலையானவர்கள் எல்லோரும் மூன்று வருடங்களுக்கு முன் ஜூன் மாதம் பன்னிரண்டாம் தேதி இந்த ஹோட்டலில் நான்காவது மாடியில் தங்கியிருந்தவர்கள்தான் என்று ஹோட்டல் ரிஜிஸ்தரைப் பார்த்து உறுதி செய்து விட்டேன்.." என்றார், இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"ஸோ..?"

"அவனை நெருங்கிவிட்டோம், நரேன்"

"எப்படி பால்ராஜ்..?"

"ராம்தாஸ் துல்லியமாகக் கணித்துவிட்டார். அவர்கள் எல்லோரும் கொடைக்கானலுக்கு வந்திருந்த நேரத்தில் இங்கு எல்லோரையும் தொடர்புபடுத்தி, ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்க வேண்டும் என்றாரே, தீர்க்க தரிசனம். அவர்கள் இங்கிருந்த தேதிகளில் என்னென்ன குற்றங்கள் இங்கே நடந்திருக்கின்றன என்று ரெக்கார்டுகளைப் புரட்டி, பட்டியலைக் கொண்டுவந்திருக்கிறேன். ஒரு அம்சம் ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது"

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் நீட்டிய காகிதத்தை நரேந்திரன் பார்வையால் மேய்ந்தான். வைஜயந்தி சற்று உரக்கவே படித்தாள்.

"ஏரியில் படகு கவிழ்ந்து சென்னைக் கல்லூரிப் பெண்கள் மூவர் மரணம். பாஸ்போர்ட் திருடப்பட்டுவிட்டதாக அமெரிக்கப் பயணி புகார். அம்பாஸிடர் மீது மோதி போலீஸ் ஜீப் விபத்து. ஹோட்டல் மலை வைரத்தில் இளம்பெண் கற்பழித்துத் துணிகரக் கொலை.."

வைஜயந்தி சட்டென்று நிமிர்ந்தாள்.

"இந்த ஹோட்டலிலேயே கொலை..!" என்றாள், படபடப்பை அடக்க முடியாமல்.

"கொடைக்கானல் போலீஸ் அதிகாரி அந்தக் கொலை பற்றிய முழு விவரத்துடன் நம்மை இப்போது சந்திக்க வருகிறார்"

"அவர் வரும் வரை நாம் ஏன் சும்மா இருக்க வேண்டும்? நானும், வைஜூம் போட்டிங் போய்விட்டு வருகிறோம். நீங்கள் ரோஸ்லின் ஆன்ட்டியுடன் போனில் பேசிக்கொண்டிருங்களேன்.."

"நீ தனியாகப் போய் வா. நான் இங்கே ஹோட்டல் மேனேஜரிடம் விசாரித்துக்கொண்டிருக்கிறேன்.." என்றாள் வைஜயந்தி.

"பாருங்கள், பால்ராஜ். ஒரு சீனியர் மேனாக எனக்காக நீங்கள் எடுத்துச் சொல்லக் கூடாதா..?"

"உன்னுடன் நான் வரட்டுமா..?" என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ், கண்ணடித்து.

“தேங்க்யூ, நான் எங்கேயும் போகவில்லை..” என்று நரேந்திரன் சொல்லி முடிப்பதற்குள், “குட் மார்னிங்..” என்ற குரல் கேட்டது.

வெளிர்சாம்பல் நிறத்தில் பனியன் அணிந்து, சற்றே சதுரமான முரட்டு முகத்துடன் அவர் நின்றிருந்தார். காவல் துறை என்று முத்திரை குத்தாமலேயே முகத்தின் அமைப்பு காட்டிக் கொடுத்தது.

“மீட் இன்ஸ்பெக்டர் ரஞ்சித். கொடைக்கானல் போலீஸின் மிக முக்கிய அதிகாரி”

இன்ஸ்பெக்டர் ரஞ்சித்தின் பார்வை நரேந்திரன் மீது சற்றே தயங்கிவிட்டு, வைஜயந்தி மீது சற்று அதிகப்படியாக நிலைத்து மீண்டது.

நாற்காலியைத் திருப்பி அவர்கள் பக்கம் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

“உங்களையெல்லாம் சந்தித்ததில் சந்தோஷம். லுக் அட் திஸ்..” என்று கொண்டுவந்திருந்த ஃபோல்டரைத் திறந்தார்.

பதினெட்டு அங்குல போட்டோவில் அந்த இளம்பெண் சிரித்தாள்.

“இவள் பெயர் குயிலி. பெங்களூரைச் சேர்ந்த கல்லூரிப் பெண். இதே ஹோட்டலில் நான்காவது மாடியில் மூன்று வருடங்களுக்கு முன் ஜூன் மாதத்தில் தங்கியிருந்தாள். தங்கியிருந்த அறை எண் 713. தன் தோழிகளுடன் வந்திருந்தாள். அவர்கள் எல்லோரும் திரும்பிப்போன பின், இவள் மட்டும் இரண்டு நாள் கூடுதலாகத் தங்கியிருக்க முடிவு செய்ததுதான் தப்பாகிவிட்டது. ஜூன் பன்னிரண்டாம் தேதி..”

இன்ஸ்பெக்டர் ரஞ்சித் விவரிக்க விவரிக்க காட்சி கண் முன் விரிந்தது.

*ஒரு சின்ன ஃப்ளாஷ்பேக்:*

நள்ளிரவு தாண்டி யாராவது ரூம் சர்வீஸிற்குக் கூப்பிட்டாலும், முகம் சுளிக்காமல் போக வேண்டும் என்பது மலை வைரத்தில் எழுதப்படாத சட்டம்.

ஆனால், அதை மனோகர் என்றைக்குமே ரசித்ததில்லை. நிம்மதியாகத் தூங்க விடாமல், குழாயை அழுத்தி மூடவும், எரியாத மேஜை விளக்கை சரி பண்ணவும் அழைப்பவர்கள் மீது கோபமாக வரும். அப்படி கோபமாகத்தான் லிஃப்ட் பொத்தானை அழுத்திவிட்டுக் காத்திருந்தான். மூன்றாவது மாடியில் இருந்த அறையில் ஜன்னலை அழுத்தி மூட முடியவில்லை என்றும் குளிர்க் காற்றை தாங்க முடியவில்லை என்றும் அழைப்பு வந்திருந்தது.

தூக்கக் கலக்கத்துடன் லிஃப்ட் வந்து நின்றதும், கதவைத் திறந்தவன், அலறியடித்துப் பின்வாங்கினான்.

என்ன, என்ன இது? லிஃப்டுக்குள் என்ன இது?

லிப்ட்டின் தரையில் ஒரு ஓரத்தில் அவள் ஒருக்களித்துக் கிடந்தாள். கூந்தல் சிடுக்காகிக் கிடந்தது. வாயோரம் உடைந்து ரத்தம் ஒரு கோடாக வெளியேறிக்கொண்டிருந்தது. உடைகள் தாறுமாறாகக் கிழிந்து தொங்கின. முதுகில் நகக் கீறல்கள். கழுத்தில் பற்களின் அடையாளங்கள். இடுப்பில் ரத்தக் கோடு.

அவன் அலறல் அத்தனை ஊழியர்களையும் எழுப்பியது.

அரை மணி நேரத்தில் போலீஸ் வந்தது.

"இவள் பெயர் குயிலி. 713-ம் எண் அறையில் தங்கியிருக்கிறாள்.." என்றார் மேனேஜர், நடுங்கும் குரலில்.

"நல்ல வேளை இரவு நேரத்தில் நடந்திருக்கிறது. காலை நேரமாயிருந்தால், ஹோட்டலின் பிஸினஸே படுத்துவிடும்"

"ஹோட்டலைவிட்டு யாரும் வெளியேறக் கூடாது.." என்று இன்ஸ்பெக்டர் ரஞ்சித் உத்தரவு போட்டார்.

போலீஸ் டாக்டர் வந்தார்.

"கற்பழித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறாள். இறந்து ஒன்றரை மணி நேரத்துக்குள்தான் இருக்கும்.." என்றார்.

விசாரணை துவங்கியது. ஹோட்டலில் அப்போது தங்கியிருந்த அத்தனை பேரின் கைரேகைகளும் எதிர்ப்புக்கிடையில் எடுக்கப்பட்டன. ஆண்களின் மீது அதிகப்படியான கவனம் செலுத்தப்பட்டது.

தேன்நிலவு ஜோடிகளாக வந்தவர்களில்கூட ஆண்களைத் தவிர்க்கக் கூடாது என்று போலீஸ் மும்முரமாயிருந்த நேரத்தில்தான் அந்தக் கடிதம் போலீஸ் ஜீப்பில் கண்டெடுக்கப்பட்டது. யார் போட்டுவிட்டுப் போனார்கள் என்று தெரியவில்லை. இடது கையால் எழுதியது போல் கோணலான எழுத்துக்கள். ஆனால் குறிப்பிட்டிருந்த விஷயம் வெடிகுண்டாய் வெடித்தது:

'நீங்கள் எங்கள் அத்தனை பேரின் அடையாளங்களை எடுத்தாலும் புண்ணியமில்லை. ஏனென்றால், கொலைகாரன் இங்கில்லை. அந்தப் பெண்ணைக் கொலை செய்தது யார் என்று எனக்குத் தெரியும். அவன் இருபத்தி நான்கு மணி நேரத்துக்கு முன்பாகவே இந்த ஹோட்டலைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டான். அவன் இருந்த அறை எண் 715. நட்சத்திரங்களைப் பார்க்க தற்செயலாக என் அறைக் கதவைத் திறந்து நான் வெளியே வரப் பார்த்தபோது, அவன் லிஃப்ட்டுக்குள் அந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டு வந்து போடுவதை நான் என் கண்களால் பார்த்தேன். ஆனால், நல்ல வேளை அவன் என்னை கவனிக்கவில்லை. என் பெயரைக் கேட்காதீர்கள்'

*ஃப்ளாஷ்பேக் முற்றும்..*

"அந்தக் கடிதம் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டது.." என்றார்,

இன்ஸ்பெக்டர் ரஞ்சித்.

"அந்தக் கடிதம் மட்டும் வராமல் இருந்திருந்தால் போலீஸ் திக்குமுக்காடியிருக்கும். 715-ம் அறையில் தங்கியிருந்து காலி செய்துகொண்டு போனது யார் என்று விசாரித்தோம். அவன் பெயர் ரத்னா என்று ரிஜிஸ்தர் சொன்னது. அறையை முந்தின நாளே காலி செய்துவிட்டாலும், எல்லோரும் அடங்கிய பிறகு, அவன் ரகசியமாக ஹோட்டலுக்குள் நுழைந்திருக்கிறான். 713-ம் அறைக் கதவைத் தட்டி உள்ளே நுழைந்திருக்கிறான். குயிலியைக் கதறக் கதறக் கற்பழித்திருக்கிறான். கண்ணாடித் தடுப்புகளைத் தாண்டி வெளியே சத்தம் கேட்கவில்லை. அவளைக் கடைசியில் கொலை செய்து லிஃப்ட்டில் போட்டுவிட்டு தப்பித்துப் போயிருக்கிறான் என்று புரிந்தது. அவனைப் பற்றிய அடையாளங்கள் இருந்ததால், பஸ் ஸ்டாண்ட், டாக்ஸி ஸ்டாண்ட் எல்லா இடத்திலும் விசாரித்து, அவன் பிரைவேட் கார் எடுத்து மதுரைப் பக்கம் போனதைக் கண்டுபிடித்தோம். அப்புறம் அவனை மடக்குவது கஷ்டமாயில்லை"

"அந்த மொட்டைக் கடிதத்தை எழுதியது யார் என்று போலீஸ் கண்டுபிடித்ததா..?"

"இல்லை. கடைசி வரை இல்லை. அதற்கு அவசியம் இல்லாமல் , ரத்னாவுடைய ரத்தம், விந்து எல்லாவற்றையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்ததில் ரத்னாதான் அந்தக் கொலையைச் செய்தவன் என்பது சந்தேகத்துக்கிடமில்லாமல் நிரூபணமாகிவிட்டது. கோர்ட்டில் பதினான்கு வருடம் ஆயுள் தண்டனை என்று தீர்ப்பாகியது.."

"யூ நோ சம்திங்? எட்டு மாதங்களுக்கு முன் வேலூர் சிறையிலிருந்து தப்பிய ஆறு கைதிகளில் ரத்னாவும் ஒருத்தன்.." என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

வைஜயந்தி பரபரப்பாக எழுந்தாள்.

"இப்போது புரிகிறது. நான்காவது மாடியில் லிப்டில் அவன் அந்தப் பிணத்தைக் கொண்டுவந்து போட்டபோது, யாரோ கவனித்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் அந்த மாடியில் தங்கியிருந்தவர்களில் ஒருத்தராகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்திருப்பான். அவர்கள் மட்டும் அந்தக் கடிதத்தை எழுதாமல் விட்டிருந்தால், போலீஸின் சந்தேகப் பார்வை ஏற்கெனவே காலி செய்துவிட்டுப் போன அவன் மீது விழுந்திருக்காமலேயே போயிருக்கும். அவனைக் காட்டிக் கொடுத்தது யார் என்று குறிப்பிட்டுத் தெரியாததால், அந்த மாடியில் இருந்த அத்தனை பேரையும் பழிவாங்க ரத்னா முடிவு செய்துவிட்டான். ஒவ்வொருத்தராகத் தேடிப் பிடித்துத் தீர்த்துக்கொண்டிருக்கிறான்.."

"பால்ராஜ், பாக்கி இருப்பவர்கள் யார் யார் என்று உடனே நாம்

பட்டியல் தயாரிக்க வேண்டும். அவர்களை அவன் நெருங்கும் முன் எச்சரிக்க வேண்டும்.."

"நாம் கீழே ஹோட்டல் மேனேஜரின் அறைக்குப் போகலாம். அங்கே எல்லா விவரங்களும் கிடைக்கும்.." என்றார் இன்ஸ்பெக்டர் ரஞ்சித்.

இருபத்து எட்டு

மலை வைரம் ஹோட்டலின் மேனேஜர் அறை அறுகோண வடிவில் அமைக்கப்பட்டிருந்தது.

கண்ணாடிச் சுவர்கள். மறைத்துத் தொங்கும் துணித் திரைகள்.

வழுக்கை பளபளத்த மேனேஜர், 'ராமலிங்கம்' என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டார்.

"நீங்கள் குறிப்பிடும் ஜூன் மாதத்தில் நான்காவது மாடியில் ஒருபுறம் இருந்த அறைகளில் மராமத்து வேலை நடந்துகொண்டிருந்தது. அதனால் அந்த மாடியில் மறுபுறம் இருந்த எட்டு அறைகளைத்தான் வாடகைக்கு விட்டிருந்தோம். அந்த அறைகளில் தங்கியிருந்தவர்களின் பெயர்கள் இதோ"

அவர் நீட்டிய பட்டியலில் நரேந்திரன் பார்வையை ஓட்டினான்.

701 : மங்களம், சேலம்

703:ஸ்வப்னா, பம்பாய்

705: சுமலதா, மாலினி, பெங்களூர்

707:பாஸ்கர், சென்னை

709: பாண்டியன், புஷ்பா, சென்னை

711 :மன்சூர், சலீம், ஹைதராபாத்

713 :குயிலி

715 : ரத்னா

"பள்ளிக்கூட வாத்தியார் அட்டென்டன்ஸ் எடுப்பது போல வரிசைப்படிதான் ஒவ்வொரு தலையாக எடுத்து வருகிறான்.." என்றாள் வைஜயந்தி.

"மாலினி, சுமலதா இரு சகோதரிகளும் ஒரே அறையில் தங்கியிருந்ததால் இருவருக்கும் மூன்று என்று ஒரே எண் எழுதப்பட்டதன் அர்த்தம் இப்போது புரிகிறது.." என்றான் நரேந்திரன்.

"கொலை செய்வது சரி. அதென்ன கண்களைத் தோண்டி எடுப்பது..?" மேனேஜர் கைகளைக் குறுக்கிக்கொண்டு கேட்டார்.

"அவன் குயிலியைக் கற்பழித்து, பிணத்தைக் கொண்டுவந்து லிஃப்ட்டில் போட்டபோது அந்த மாடியில் தங்கியிருந்த யாரோ பார்த்துத்தானே போலீஸிற்குத் தகவல் கொடுத்தார்கள்? கண்கள் இருப்பதால்தானே பார்க்க முடிகிறது? பார்த்ததால்தானே புகார் கொடுக்க முடிகிறது? தன்னைக் காட்டிக் கொடுத்த அந்தக் கண்களைக் குடைந்து எடுத்துவிடுவதன் மூலம் அவர்களை முழுமையாகப் பழி வாங்கிவிட்டதாக அவனுக்கு ஒரு வக்கிர சந்தோஷம்.."

வைஜயந்தி சட்டென்று மேனேஜரைப் பார்த்துத் திரும்பினாள்.

"வெயிட். அன்றைய தேதியில் ஹோட்டலின் நான்காவது மாடியில் தங்கியிருந்தவர்கள் யார், யார் என்ற பட்டியல் அவனுக்கு எப்படிக்

கிடைத்திருக்கும்? எங்களைப் போலத்தானே அவனும் விசாரித்திருக்க வேண்டும்? அப்படி இங்கே வந்து யார் யார் விசாரித்தார்கள் என்று சொல்ல முடியுமா..?"

"அந்த விவரத்தைத் தெரிந்துகொள்ள அவன் ஹோட்டல் ரிஜிஸ்தரைத் தேடி வந்திருக்க வேண்டியதில்லை, மேடம். கேஸ் பரபரப்பாக கோர்ட்டில் நடந்தபோது, செய்தித்தாள்களில் ஹோட்டலில் தங்கியிருந்தவர்களின் பட்டியலைப் பிரசுரித்து, இதில் போலீஸிற்குத் தகவல் தந்த புண்ணியவான் யார்? என்று சுவாரஸ்யத்துக்காகப் போட்டுவிட்டார்கள். அந்த பேப்பரைப் பிடித்துவிட்டால், முழுப் பட்டியலும் அவனுக்குக் கிடைத்திருக்கும்.."

"அப்படித்தான் இருக்கும். இதுவரை அடுத்தது யார் கொலையாவார்கள் என்று புரியாமல் இருந்தது. இப்போது நம்மிடம் பட்டியல் இருக்கிறது. பாக்கி இருப்பவர்கள் நான்கு பேர்தான். அடுத்த கொலைகளை நாம் நிச்சயம் தவிர்க்க முடியும். அடுத்த தாக்குதல் தமிழ்நாட்டுக்கு வெளியே என்று அவன் திமிராகச் சொன்னான். அப்படியானால், அது ஹைதராபாத்தாகத்தான் இருக்க வேண்டும்.." என்று நரேந்திரன் எழுந்தான்.

"சென்னையில் இருப்பவர்களையும் நாம் எச்சரித்தாக வேண்டும்.." என்று பரபரத்தாள் வைஜயந்தி.

"நாம் இன்னொரு காரியம் செய்யலாம், பால்ராஜ்"

"என்ன நரேன்..?"

"ஒரு சின்ன ரிஸ்க் எடுக்கலாம். பாஸ்கர்தான் ரத்னாவைப் போலீஸில் காட்டிக் கொடுத்தவர் என்று சொல்லிவிட்டால்? போலீஸ் இப்போதுதான் வெளிப்படையாக அறிக்கை கொடுப்பதாக அறிவித்துவிடலாம்.."

"அறிவித்துவிட்டால்..?"

"தன்னைக் காட்டிக் கொடுத்தவனைப் பழி வாங்கிவிட்டதாக நினைத்து ரத்னா சமாதானம் ஆகிவிட மாட்டானா..?"

"பாஸ்கர் வீட்டில் ஆட்சேபணை இருக்கலாம். ஆனால், மற்றவர்களைக் காப்பாற்ற இந்தத் தந்திரத்தைச் செய்யலாம்.." என்று துடிப்பாக எழுந்தார், இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

இருபத்து ஒன்பது

சென்னை.

பரபரப்பான கச்சேரி ரோடு. பாண்டியா டிபார்ட்மென்ட்டல் ஸ்டோர்ஸ் இரண்டு அடுக்குகளாக விரிந்திருந்தது. ஜவுளி விற்பனை முடிந்து மேல்தளம் மூடப்பட்டுவிட்டது. மளிகை சாமான்கள் விற்பனையாகும் கீழ்த்தளத்தில் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு விளக்குகள் ஒவ்வொன்றாக அணைந்துகொண்டிருந்தன. கம்ப்யூட்டர் நீள காகித ரிப்பனை அச்சடித்துத் துப்பிக்கொண்டிருந்தது.

பாண்டியன் சற்றே களைப்பாக உணர்ந்தான். மாதத்தின் முதல் வாரம் என்றாலே இப்படித்தான். கடை மூடும் நேரம் தள்ளிப்போய்விடும். ஓய்வில்லாமல் வேலை குவிந்துவிடும். ஆனால், சலிக்காத உழைப்புதான் அவனையும் இந்தக் கடையையும் இவ்வளவு தூரம் வளர்த்துவிட்டிருக்கிறது என்பதை அவன் மறக்க முடியுமா?

கேஷியர் ஒப்படைத்த பணக் கட்டுகளை சரிபார்த்து இரும்புக் காப்பறைக்குள் அடுக்கிவிட்டு தன் இருப்பிடத்துக்குத் திரும்பியபோது, அவன் அறையில் அவர்கள் காத்திருந்தார்கள்.

"ஈகிள்ஸ் ஐயிலிருந்து வருகிறோம்"

"ஏற்கெனவே நிறைய ஏஜன்ஸிகள் எங்களுக்கு சப்ளை செய்துகொண்டிருக்கின்றன. புதிய ஏஜன்ஸிகளை நாங்கள் வரவேற்பதில்லை சார்"

"ஈகிள்ஸ் ஐ புரொவிஷன் விற்கும் ஏஜன்ஸி இல்லை. டிடக்டிவ் ஏஜன்ஸி"

பாண்டியனின் முகம் சரேலென்று பிரகாசமானது. "நீங்கள் மிஸ்டர் நரேந்திரனா..?"

"அதே. இது பால்ராஜ். இன்ஸ்பெக்டர் பால்ராஜ். யூனிஃபாமில் வரவில்லை.."

பாண்டியன் முகத்தில் காற்றடித்தது போல் பூரிப்பு.

"சொல்லுங்கள் சார். நான் உங்களுக்கு என்ன செய்ய முடியும்..?"

"உங்கள் வேலைகளை முடிக்க இன்னும் எத்தனை நேரம் வேண்டும்..?"

"பதினைந்து நிமிடம்.."

"காத்திருக்கிறோம். நாம் சற்று நிதானமாகப் பேச வேண்டும்"

"வேலு, இரண்டு கோக் உடைத்துக் கொடு"

பன்னிரண்டே நிமிடங்களில் பாண்டியன் வந்து அவர்களுக்கெதிரில் அமர்ந்தான்.

"கொடைக்கானலுக்குப் போயிருந்தீர்களே, நினைவிருக்கிறதா, பாண்டியன்..?" என்றார், இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"ஆமாம்.. டீ பாக்கெட் விற்பனையில் நாங்கள் முதலிடத்தில்

இருந்தோம் என்று அந்தக் கம்பெனியில் கொடைக்கானலில் நான்கு நாள் தங்குவதற்கு பாஸ் கொடுத்தார்கள். நானும் என் மனைவியும் போயிருந்தோம். நாங்கள் போயிருந்த நேரம் ஹோட்டலில் ஒரு அசம்பாவிதம். ஒரு கொலை நடந்து விசாரணை அது இது என்று மூடே அவுட்டாகிவிட்டது. அந்த வழக்குதான் முடிந்துவிட்டதே..?"

"இல்லை, ரத்னா சிறையிலிருந்து தப்பித்துவிட்டான். ஹோட்டலில் அன்றைய தேதியில் நான்காவது மாடியில் தங்கியிருந்தவர்களை ஒவ்வொருத்தராகத் தேடித் தேர்ந்தெடுத்து பழி வாங்கிக்கொண்டிருக்கிறான்"

பாண்டியன் முகத்தில் திடுக்கென்று அச்சம் சூழ்ந்தது.

"ஐயையோ"

"இன்றைக்கு தொலைக்காட்சியிலும், ரேடியோவிலும், பிரெஸ் மீட்டிலும் ரத்னாவைக் காட்டிக் கொடுத்தது பாஸ்கர்தான் என்று சொல்லியிருக்கிறோம். ஆனாலும் அந்த சைக்கோவிடம் சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது.."

"நான் என்ன செய்ய வேண்டும்..?" பாண்டியன் முகத்தில் அதீத வியர்வை.

"உங்கள் மனைவியை பயமுறுத்த வேண்டாம். ஆனால், நீங்கள் இருவரும் பாதுகாப்பாக இருப்பது நல்லது. இரவுகளில் ஜன்னல்களைத் திறந்து வைத்துக்கொண்டு தூங்காதீர்கள். அவனைப் பிடிக்கும்வரை உங்கள் வீட்டுக்கு போலீஸ் காவல் போட வேண்டியிருக்கும். பொறுத்துக்கொள்ளுங்கள்"

பாண்டியன் முகத்தில் கவலை தெரிந்தது. "என் மனைவி புஷ்பா அவள் அம்மா வீட்டுக்குப் போயிருக்கிறாளே"

"எந்த ஊருக்கு..?"

"பக்கத்தில்தான் செங்கல்பட்டுக்கு"

"பயமுறுத்தாமல் அவர்களை அங்கிருந்து சென்னைக்குத் திரும்பிவிடச் சொல்லுங்கள். சேர்ந்தே இருங்கள். போலீஸூடன் நீங்கள் ஒத்துழைத்தால், அவனை நாம் சீக்கிரம் பிடித்துவிடலாம்.." என்று நரேந்திரன் சொல்லிக்கொண்டிருந்தபோது அவன் போன் ஒலித்தது.

"ஹாய் நரேன், நீ இன்னும் சென்னையில் இருப்பதற்கு தேங்க்ஸ்.."

"சைக்கோ.. தவறு செய்கிறாய். இனி உன்னால் தப்ப முடியாது"

எதிர்முனையில் தொடர்ந்து பலமான சிரிப்பு ஒலித்தது. "நீங்கள் இதுவரை கேட்ட இசை நிகழ்ச்சி இத்துடன் முடிவடைந்தது.." என்ற குரலைத் தொடர்ந்து தொடர்பு துண்டிக்கப்பட்டது.

"இசை நிகழ்ச்சி முடிவடைந்தது என்றான். ஹைதராபாத் சகோதரர்களைத்தான் குறிப்பிடுகிறான்.." என்று பரபரப்பாக

எழுந்தான், நரேந்திரன். "பாண்டியன், இன்ஸ்பெக்டர் பால்ராஜ் உங்களுக்கு முக்கியமான உத்தரவுகள் தருவார். தவறாமல் கடைப்பிடியுங்கள்"

"தேங்க்யூ வெரிமச்.." என்றான் பாண்டியன், நெகிழ்ச்சி ததும்ப.

முப்பது

புஷ்பா சற்றே வெறுப்பும், சற்றே அச்சமும் கலந்து தன் துணிகளை அவசரமாக அந்தப் பயணப்பையில் அடைத்துக்கொண்டிருந்தாள்.

சற்று முன்தான் பாண்டியனிடமிருந்து போன் வந்திருந்தது. 'என்ன ஏது என்று கேட்டுக்கொண்டிருக்காதே. இரவு ஜன்னல் பக்கத்தில் படுக்காதே. விடிந்ததும் உன்னை சென்னைக்கு அழைத்து வர ஒரு போலீஸ்காரர் மப்டியில் வருவார். கவலைப்படாதே. அவருடைய பாதுகாப்பில் வருவதுதான் நல்லது' என்று சொல்லியிருந்தான். அவள் வற்புறுத்திக் கேட்டதும்தான் கொடைக்கானல் போயிருந்தபோது நடந்த அசம்பாவிதத்தைப் பற்றி நினைவுபடுத்தினான்.

இந்த சமயம் பார்த்து அவள் அப்பா பத்ரிநாத் பயணப்பட்டிருந்தார். அம்மாவுக்குத் துணையாக பதினைந்து நாள் வந்து இருப்பதாகச் சொல்லியிருந்தாள். இப்போது, எல்லாவற்றையும் கத்தரித்துவிட்டு அம்மாவையும் அழைத்துக்கொண்டு வரச் சொல்லி பாண்டியனிடமிருந்து உத்தரவு வந்துவிட்டது.

"மாப்பிள்ளையே வந்து அழைத்துப் போகலாமில்லையா? இப்படி யாரோ போலீஸ்காரனுடன் வரச் சொல்லிவிட்டாரே.." என்று அவள் அம்மா கொஞ்சம் புலம்பிவிட்டு அப்போதுதான் ஓய்ந்திருந்தாள்.

ஜன்னல்களை எல்லாம் சாத்தி உள்ளே தாளிட்டுக்கொண்டிருந்தபோது, அழைப்பு மணி ஒலித்தது.

அம்மாதான் கதவருகில் இருந்த ஜன்னலை சற்றே திறந்து எட்டிப் பார்த்தாள்.

வெளியே நின்றிருந்த ஆள் அவளைப் பார்த்ததும் வணக்கம் சொன்னான்.

"செங்கல்பட்டு போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வருகிறேன். புஷ்பா மேடம் இருக்கிறார்களா..?"

"காலையில்தானே கிளம்ப வேண்டும் என்றார்கள்..?"

"ஆமாம். விடிந்ததும் வெளிச்சத்தில்தான் புறப்படுகிறோம். அதில் மாற்றமில்லை. போலீஸ் காரிலேயே போய்விடலாம். ஆனால், என் முகத்தைப் பார்த்து வைத்துக்கொள்ளச் சொல்லி இன்ஸ்பெக்டர் அனுப்பினார். வேறு யாராவது வந்து கூப்பிட்டால் போய்விட வேண்டாம்.."

"புஷ்பா.." என்று அம்மா உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தாள்.

புஷ்பா வந்து சேர்ந்ததும், "கதவைத் திறக்க வேண்டாம். அப்படியே ஜன்னல் வழியே என் முகத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்.." என்றான். வெளிச்சம் விழும் பகுதியில் நகர்ந்து நின்றான்.

புஷ்பாவும், அவள் அம்மாவும் அவன் முகத்தைப் பார்க்க ஜன்னல்

கம்பிகளின் மீது இணைந்து முகம் பதித்து நிற்க, அவன் பாக்கெட்டிலிருந்து குப்பியை நொடி நேரத்தில் எடுத்தான்.

முப்பத்தொன்று

செல்போன் தொடர்ந்து ஒலித்து பாண்டியன் சடக்கென்று விழித்தான்.

கட்டிலின் தலைமாட்டில் இருந்த டிஜிட்டல் கடிகாரம் மணி அதிகாலை மூன்று என்றது. இந்த நேரத்தில் போன் செய்வது யார்?

"ஹலோ..?"

"பாண்டியன், உன் மனைவியை உயிருடன் பார்க்க ஆசையா..?"

பாண்டியன் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தான்.

"யார் பேசுவது..?"

"உன்னால் காட்டிக் கொடுக்கப்பட்டவன்.."

"ரத்னாவா? சத்தியமாக நான் யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை. பாஸ்கர்தான் காட்டிக் கொடுத்தார் என்று போலீஸே சொல்லிவிட்டதே..?" பாண்டியன் நடுங்கினான்.

"சின்னக் குழந்தையை ஏமாற்றுவது போல் என்னை ஏமாற்றப் பார்க்கிறார்கள், முட்டாள்கள்.." என்று அவன் சிரித்தான்.

"போலீஸிடம் தகவல் தெரிவிக்க முயற்சி செய்தால், புஷ்பா உன் வீட்டுக் கொல்லைப்புறத்தில் உடல் வேறு, தலை வேறாகக் கிடைப்பாள்.."

தொடர்பு அறுந்தது.

பாண்டியன் தவித்தான். அவன் வீட்டு ஹாலில் துணைக்கு ஒரு போலீஸ்காரர் படுத்திருக்கிறாரே. அவரிடம் சொல்லலாமா கூடாதா?

பதற்றம் தாக்க, செங்கல்பட்டில் இருந்த புஷ்பாவின் அம்மா வீட்டு எண்ணுக்கு டயல் செய்தான். தொடர்பே கிடைக்கவில்லை.

செல்போன் மறுபடி ஒலித்தது.

பாண்டியன் பதறி எடுத்தான். "ஹலோ, ஹலோ.." என்றான். பதில் இல்லை. மறுபடி மறுபடி உதிர்த்த ஹலோக்களுக்கும் எந்த பதிலும் இல்லை.

போலீஸிடம் சொல்லாமல் வெளியே போகாதே என்று மூளை எச்சரித்தது. இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கொடுத்திருந்த எண்ணுக்கு வீட்டு போனில் டயல் செய்தான். கொர்ர்ர்ர என்று விநோதமாக போன் தொடர்ந்து உறுமியதே தவிர, வீட்டு போனும் வேலை செய்யவில்லை. செல்போனை இயக்கினான். அதிர்ந்தான். செல்போனில் போதிய வெளிச்சமே இல்லை. அவன் ஏதோ எண்ணை டயல் செய்தால் வேறு ஏதோ எண் ஒளிர்ந்தது. செல்போனின் இயக்கமே முடங்கி விட்டாற் போல் தோன்றியது. இந்த போன் கூட இப்படி சதி செய்யுமா?

அச்சம் உச்சமாகத் தாக்க, ஹாலில் படுத்திருக்கும் போலீஸ்காரரை எழுப்புவது என்று தீர்மானித்தான். அவரிடமிருக்கும் போனைப் பயன்படுத்தலாம்.

படுக்கையறைக் கதவைத் திறந்து மெல்ல வெளியே வந்தான். ஹாலை நெருங்கினான். எட்டிப் பார்த்தான். அவர் சோபாவில் படுத்திருந்தார். நெருங்கினான். தோளைத் தொட்டு சற்றே உலுக்கினான்.

"சார், சார்"

"அவரால் எந்தப் புண்ணியமும் இல்லை.." என்று நெருக்கமாக அவன் பின்கழுத்தருகே குரல் கேட்டதும், அதிர்ந்து திரும்பினான்.

இதயத்தை அப்படியே உறைய வைப்பது போல் அவன் மிக மிக நெருக்கமாக நின்றிருந்தான்.

"என்னைத் தெரிகிறதா? ரத்னா. உன்னால் காட்டிக் கொடுக்கப்பட்டவன்.."

"ஐயோ, நா.. நான் யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை.."

அச்சத்தில் நாக்குழற, பாண்டியன் திரும்பி ஓட முயற்சி செய்த நேரம் அவன் முகத்தில் ஏதோ ரசாயனம் பீய்ச்சப்படுவதை உணர்ந்தான். அவன் கடைசியாக உணர்ந்த உணர்வு அதுதான்.

முப்பத்து இரண்டு

ஹைதராபாத் விமான நிலையம்.

இருட்டு விலகட்டுமா, வேண்டாமா என்று கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில் சென்னையில் ஏறிய விமானம் நல்ல காலை வெளிச்சத்தில், ஹைதராபாத் ரன்வேயை முத்தமிட்டது.

நரேந்திரன், இன்ஸ்பெக்டர் பால்ராஜ் இருவரும் தத்தம் பயணப் பைகளுடன் விமானத்தைவிட்டு வெளியேறினர்.

"செல்போன்களை இனி பயன்படுத்தலாம்.." என்று விமானப் பெண் பணியாளர் புன்னகையுடன் சொன்னாள்.

அணைத்து வைத்த போனை நரேந்திரன் இயக்கினான். காத்திருந்தது போல், நரேந்திரனின் செல்போன் ஒலித்தது.

"ஹாய் நரேன், ஹைதராபாத்திலா இருக்கிறாய்..?" சைக்கோ ரத்னாவின் குரல்.

"நீ..?" என்றான் நரேந்திரன்.

எதிர்முனையில் எள்ளலான சிரிப்பொலி.

"நான் நிம்மதியாக சென்னையில்தான் இருக்கிறேன். எப்போதாவது நான் கொடுத்த சத்தியங்களை மீறுவது உண்டு. ஹைதராபாத்தில்தான் என் அடுத்த தாக்குதல் இருக்கும் என்று நீ நினைத்துக்கொள்ளும்படி பேசினேனே தவிர, அப்புறம் மனசு மாறிவிட்டேன். உன்னை அங்கே அனுப்பிவிட்டு, இங்கே எந்தப் பிரச்னையும் இல்லாமல் என் காரியங்களை முடித்துக்கொண்டுவிட்டேன், என் வரிசையை மாற்ற வேண்டிய அவசியம் வரவில்லை.."

நரேந்திரன் அதிர்ந்தான்.

"ஏய்.."

தொடர்பு அறுந்தது.

"எனி பிராப்ளம்..?" என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"ஏமாற்றிவிட்டான்.."

நரேந்திரன் தவிப்புடன் சகிள்ஸ் ஐ எண்ணைத் தட்டினான்.

பாண்டியன் வீட்டு வாசலில் போலீஸ் வாகனங்கள் குழுமியிருந்தன.

வைஜயந்தி டிசைனர் ஜீன்ஸில் புத்துணர்ச்சி குறையாமல் சுறுசுறுப்பாய்த் தெரிந்தாள். ஜென்னிலிருந்து இறங்கியதும், கூந்தலை க்ளிப்பில் சிறைப்படுத்தினாள்.

வைஜயந்தியைப் பார்த்ததும், சப்இன்ஸ்பெக்டர் சேகரன் பிரியமானதொரு புன்னகையை விரித்தார்.

"வழக்கமான அதே முறை.." என்றார்.

"பாண்டியனுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்ததா

இல்லையா..?"

"அடுத்த தாக்குதல் தமிழ்நாட்டுக்கு வெளியே என்ற தகவலை நம்பியதால் சற்று அசட்டையாக இருந்துவிட்டோம். காவலுக்கிருந்த கான்ஸ்டபிள் சோபாவில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்திருக்கிறார். அவர் முகத்தில் மயக்க மருந்து பீய்ச்சப்பட்டிருக்கிறது. ஜன்னல் திறக்கப்பட்டிருக்கிறது. அவரைக் காயப்படுத்தாமல், பாண்டியனை மட்டும் அவன் தாக்கியிருக்கிறான்"

கான்ஸ்டபிள் மயக்கம் முற்றிலும் தெளியாமல் அலங்கமலங்க விழித்தபடி சோபாவில் சரிந்து உட்கார்ந்திருந்தார். சுற்றிலும் காவல் துறையின் பல்வேறு சக்கரங்கள் இயங்கிக்கொண்டிருந்தன.

"உங்களுக்கு யார் தகவல் தந்தது..?"

"பாண்டியனின் மனைவி புஷ்பாவை அழைத்து வர அதிகாலையில் அவர்கள் வீட்டுக்கு செங்கல்பட்டு போலீஸ் போயிருக்கிறார்கள். அங்கே புஷ்பாவின் அம்மா மயக்கத்தில் கிடந்திருக்கிறார். கிச்சனில் கேஸ் சிலிண்டர் அருகில், புஷ்பா பிணமாகக் கிடைத்தாள். உடனே பரபரப்பாகி எங்களுக்குத் தகவல் தந்தார்கள்.."

படுக்கையறைக்குள் நுழையும் இடத்தில் பாண்டியன் கிடந்தான்.

"ஹாலுக்கு பாண்டியன் வந்திருக்கிறார். அங்கேயே மயக்கமாகியிருக்கிறார். அப்படியே தரையோடு இழுத்து வந்து உள்ளே போட்டு.."

பாண்டியனை மூடியிருந்த வெள்ளைத் துணி சிகப்பாகியிருந்தது.

"அங்கே புஷ்பா, இங்கே பாண்டியன் இருவர் வயிற்றிலும் ஐந்து என்ற எண் கத்தியால் செதுக்கப்பட்டிருக்கிறது"

"மை காட், எங்களையும், போலீஸையும் திசை திருப்பி விட்டுவிட்டு, பாண்டியன் புஷ்பா இருவரையும் அவன் திட்டப்படி தீர்த்துவிட்டான்!.." வைஜயந்தி ஆச்சரியமும், அதிர்ச்சியுமாகச் சொன்னாள்.

"பாண்டியன் படுக்கையறையைவிட்டு வெளியே வராமல் இருந்திருந்தால் தப்பித்திருப்பார்"

"ஆபத்தென்றால் பாண்டியன் உங்களுக்கு ஒரு போன் செய்திருக்கலாமே. அதுகூடவா தோன்றாமல் போய்விட்டது..?"

"வந்தவுடன் அதைத்தான் செக் பண்ணினோம், வைஜயந்தி மேடம். போன் லைன் கட் பண்ணப்பட்டிருக்கிறது"

"செல்போன்..?"

வெள்ளைத் துணியில் வைத்திருந்த செல்போனை வைஜயந்தியிடம் அவர் காட்டினார்.

"இந்த போனும் சரியான சமயத்தில் வேலை செய்யாமல் ரிப்பேராகித் தொலைத்திருக்கிறது.."

விரலைத் துணியால் சுற்றிக்கொண்டு, கவனமாக அந்த செல்போனை இயக்கிப் பார்த்தாள், வைஜயந்தி.

"தற்செயலாக நடந்த விபத்தில்லை அது.." என்றாள் வைஜயந்தி. "இந்த செல்போனுக்கு மெஸேஜ் போல் ஒரு குறிப்பிட்ட வைரஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. அது செல்போனின் சில பகுதிகளை செயலிழக்க வைத்துவிடும். ரத்னா வெகு புத்திசாலி. பாண்டியனிடம் பேச வேண்டியதெல்லாம் பேசிவிட்டு, இந்த வைரஸ் மெஸேஜை அனுப்பியிருப்பான்.."

"இவ்வளவு முன்னெச்சரிக்கையாக இருந்தும், கோட்டை விட்டுவிட்டோமே.." என்றார் சப் இன்ஸ்பெக்டர் சேகரன், வருத்தமான குரலில்.

முப்பத்து மூன்று

ஈகிள்ஸ் ஐ அலுவலகம்.

நரேந்திரன் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் அழுத்திக் கசக்கித் தேய்த்த விதத்தில் அவன் கோபமும், ஆற்றாமையும் புலப்பட்டன.

"ஒவ்வொரு முறையும் அவன் எச்சரிக்கை கொடுத்துவிட்டு அதே விதத்தில் நடந்துகொண்டதால், இந்த முறையும் அதையேதான் எதிர்பார்த்தேன். இப்படிக் காலை வாரி விட்டுவிட்டானே. என்னுடைய முட்டாள்தனத்தால், அநியாயமாக இரண்டு உயிர்கள் பலியாகிவிட்டன.."

"இப்படிச் சொல்வதுதான் முட்டாள்தனம்.." என்றாள் வைஜயந்தி. "நீ ஹைதராபாத் போனது எந்த விதத்திலும் தப்பில்லை. இன்ஸ்பெக்டர் பால்ராஜ் என்னென்ன முன்னெச்சரிக்கைகள் செய்ய வேண்டுமோ, செய்துவிட்டுத்தான் உன்னுடன் வந்தார். புஷ்பா யாரோ ஒருத்தனை போலீஸ் என்று நம்பி ஜன்னல் கம்பி மீது முகத்தைக் கொண்டுபோய் வைத்துக்கொண்டதுதான் முட்டாள்தனம்.."

"அது யாரோ ஒருத்தனில்லை. ரத்னாவாகத்தான் இருக்க வேண்டும். ரத்னா போனில் என்னுடன் பேசும்போதெல்லாம் எந்த ஏரியாவிலிருந்து சிக்னல் வருகிறது என்று கண்டுபிடிக்க செல்போன் கம்பெனியிடம்கூட போலீஸ் பொறுப்பைக் கொடுத்திருந்தது. ராஸ்க்கல். அவன் ஒவ்வொரு முறை ஒவ்வொரு போனிலிருந்து, வேறு வேறு ஏரியாக்களிலிருந்து பேசிக் கழுத்தறுக்கிறான்.."

"நரேன், எதிரி புத்திசாலியாக இருந்தால்தான் அது நமக்கு சரியான சவால். அவனை எப்படி எதிர்கொள்வது என்று யோசி. வழிமுறை கண்டுபிடி. அதுதான் உனக்குப் பெருமை.."

"நீ எப்போது பாட்டி கிளப்பில் சேர்ந்தாய்..?" என்று நரேந்திரனின் உதடுகள் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தனவே தவிர, அவன் மூளையில் கர்ரக், கர்ரக் என்ற பல்சக்கரங்கள் சுற்றிக்கொண்டேயிருந்தன.

சடக்கென்று அவன் முகத்தில் பிரகாசம்.

"ஐ காட் இட்..." என்றான். "வா, உடனே இன்ஸ்பெக்டர் பால்ராஜிடம் சொல்வோம்"

"என்ன ஐடியா..?"

"ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக்கொண்டே கேட்கலாம். கமான்"

நரேந்திரன் பரபரப்பாக எழுந்தான்.

"மிகப்பெரிய ரிஸ்க் எடுக்கச் சொல்கிறாய், நரேன்.." –

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் புகை வளையங்களை ஊதிக்கொண்டே யோசித்தார்.

"சிங்கத்தை வேட்டையாடுவது சுலபம், பால்ராஜ். நரியை

வேட்டையாடுவதற்கு தந்திரங்களும் தேவைப்படுகின்றன.."

நரேந்திரன் சிக்லெட்டை வாயில் போட்டு மென்றுகொண்டே பேசினான்.

"உடனே டிஸ்கவரி சேனல் நடத்த ஆரம்பித்துவிடாதே.." என்று தொடையில் கிள்ளினாள், வைஜயந்தி.

"ரத்னாவைப் பற்றி போலீஸிடம் இருக்கும் எல்லாத் தகவல்களும் அர்த்தமற்றவையாகிவிட்டன. அவன் கொடுத்த முகவரி தப்பு. நண்பர்கள் லிஸ்ட் மாறிவிட்டது. அவனுடைய பழைய இருப்பிடங்களில் அவனைப்பற்றிச் சொல்ல ஆள் இல்லை. சிறையில் அவனுடன் பழகிய நண்பர்கள் யார் யார் என்று கேட்டு அவர்களைத் தோண்டித் துருவி விசாரித்தாயிற்று. உபயோகமேயில்லை. ஹோட்டல்களில், லாட்ஜ்களில் விசாரித்து ஏமாந்தாயிற்று.." இன்ஸ்பெக்டர் பால்ராஜ் பெருமூச்சு ஒன்றை உதிர்த்தார்.

"ஊர் ஊராகப் பயணம் செய்துகொண்டிருக்க அவனிடம் ஏது இவ்வளவு பணம் என்றும் யோசித்தோம். பணம் புழங்கும் தப்பான இடங்களில் கண்ணி வைத்துக் காத்திருந்தும் பார்த்துவிட்டோம். எங்கேயும் அவனைப் பற்றிய வாசனைகூட கிடைக்கவில்லை. அதனால்தான் நீ சொல்லும் ரிஸ்க்கை எடுக்கலாமா என்று எனக்கு சபலமாக இருக்கிறது. ஆனால் மேலதிகாரிகள் இதற்கு சம்மதிக்க மாட்டார்கள்"

"மேலதிகாரிகளிடம் இதைத் தெரிவிக்க வேண்டாம், பால்ராஜ். ரத்னா போன் பண்ணித் தொடர்புகொண்டது நரேனோடு. போலீஸோடு இல்லை. அதனால், நரேன் தனிப்பட்ட முறையில் அவனுக்கு சவால் விடுவதாகவே இருக்கட்டும். நீங்கள் பின்னணியில் எங்களுக்கு உதவிகள் செய்தால் போதும்.." என்றாள் வைஜயந்தி.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் இன்னும் இரண்டு சிகரெட்களைப் புகையாக்கிவிட்டு நிமிர்ந்தார்.

"அதுதான் ஒரே வழி.." என்றார்.

"பால்ராஜ் மனம் மாறுவதற்குள், இப்போதே ஃபோன் செய், நரேன்.." என்று வைஜயந்தி அவன் கையில் போனைத் திணித்தாள்.

நரேந்திரன் தன் செல்போனை எடுத்தான். கடைசியாக ரத்னா எந்த எண்ணிலிருந்து போன் செய்தானோ, அந்த எண்ணுக்கு டயல் செய்தான்.

ஆச்சரியகரமாக, மறுமுனை உடனே எடுக்கப்பட்டது.

"நல்ல வேளை. இன்னும் இரண்டு நிமிடம் கழித்து போன் செய்திருந்தால், நாம் பேசியிருக்க முடியாது. என் போனைக் குப்பைத் தொட்டியில் போடுவதற்காக எடுத்துக்கொண்டு போகிறேன்.." என்றது மறுமுனை, சற்றே சிரிப்புடன்.

"ரத்னா, இதுவரை நீயே சவால்களில் ஜெயித்திருக்கிறாய். அதைப் பற்றி உனக்கு சந்தோஷமா..?"

"நிச்சயமாய். சாதாரண ஆளோடு நான் மோதவில்லையே. தி கிரேட் நரேந்திரன். அவனைக் கண்ணைக் கட்டிக் காட்டில் விடுவது என் சாமர்த்தியம்தானே..?"

"ஆனால், எல்லாமே உனக்கு சௌகர்யமாய் நீ அமைத்துக்கொண்ட சவால்கள். ஒளிந்திருந்து நடத்தும் தாக்குதல்கள். கிழக்கே போ என்று கை காட்டி என்னை அனுப்பிவிட்டு மேற்கில் தனியாக நின்று ஜெயிப்பது உண்மையான வெற்றியா..?"

"அது என் சாமர்த்தியம்"

"நான் கொடுக்கும் இரண்டு சவால்களை நீ சந்திக்கத் தயாரா..?"

மறு முனையில் சிரிப்பு பொங்கியது. "போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச் சொல்வது முதல் சவாலா..?"

"இல்லை. என்னைத் தனியாக சந்திக்கத் தயாரா? எந்த ஆயுதமும் இல்லாமல் நான் வருகிறேன். துப்பாக்கி தவிர வேறு எந்த ஆயுதமும் நீ எடுத்துக்கொண்டு வரலாம்"

"நீ ஆயுதம் எடுத்து வரவில்லை என்பதை நான் எப்படித் தெரிந்துகொள்வது, நரேன்..?"

"உனக்கு நம்பிக்கையான யாரையாவது அனுப்பு. செக் பண்ணி என்னை அனுப்பட்டும்"

மறு முனையில் ரத்னாவின் குரல் பீறிட்டு சிரித்தது.

"நரேன், நீ புத்திசாலிதான். ஆனால், என்னை முட்டாளாக நினைத்துவிட்டாயே? எனக்கு நெருக்கமாக இருப்பவர்கள் யார் என்று தெரிந்துகொள்ள மற்ற முயற்சிகள் எல்லாம் தோற்றுவிட்ட நிலையில் என் மூலமே அதைத் தெரிந்துகொள்ள மூக்கைச் சுற்றி முதுகைத் தொடப் பார்க்கிறாயா? இந்த முதல் சவாலை நான் ஏற்கவில்லை"

"எதிர்பார்த்தேன். நீ கோழை. உன்னை மற்றவர்கள் தைரியசாலிகள் என்று நினைக்க வேண்டும் என்று போலியாக சவால்கள் விட்டுக்கொண்டிருக்கிறாய்.."

எதிர்முனையில் சற்று நேரம் குழப்பமான நிசப்தம்.

"உன் இரண்டாவது சவால் என்ன..?"

"நீ உண்மையான ஆண்பிள்ளையாக இருந்தால், அடுத்த தாக்குதலுக்கு நீ நாள் குறிக்காதே. நான் குறிக்கிறேன். அந்த நாளில் தாக்கு. பார்ப்போம்"

"இன்ட்டரஸ்ட்டிங். இந்த சவால் எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால், பூட்டிய வீட்டுக்குள் அவர்களை ஒளித்து வைத்து, அந்த ஏரியா பூரா ராணுவத்தை நிறுத்தி வைத்து, கிட்டே நெருங்கவே முடியாமல் நீ செய்ய நினைத்தால், நான் சவாலில் தோற்றாலும் பரவாயில்லை

என்று அந்தப் பக்கமே வர மாட்டேன். நான் மாட்டும் வரை அவர்களுக்கு சுதந்திரம் போய்விடும். நிம்மதி போய்விடும். கக்கூஸ் போனால்கூட இரண்டு பேர் துப்பாக்கி தூக்கிக்கொண்டு பக்கத்திலேயே நின்றிருப்பார்கள். பரவாயில்லையா..?"

"ஜூன் பன்னிரண்டாம் தேதி. மாலை ஆறிலிருந்து பத்து மணி வரை கிடைக்கும் நான்கு மணி நேரங்களில் உன் கை வரிசையைக் காட்டு பார்ப்போம்.."

"சவாலை நான் ஏற்கிறேன்.." என்றான் ரத்னா. "யார் புத்திசாலி என்று பன்னிரண்டாம் தேதி தீர்மானிக்கட்டும்"

மறுமுனை தொடர்பு அறுந்தது.

இன்ஸ்பெக்டர் பால்ராஜின் போன் ஒலித்தது.

"நீங்கள் குறிப்பிட்ட செல்போன் எந்த ஏரியாவிலும் நிலையாக நிற்கவில்லை, சார். ஏரியா விட்டு ஏரியா மாறிக்கொண்டே இருந்தது. அந்த ஆசாமி காரிலோ, பைக்கிலோ பயணம் செய்துகொண்டே பேசியிருக்கலாம்.." என்று செல்போன் கம்பெனியிலிருந்து தகவல் வந்தது.

"தேங்க்யூ.." போனை அணைத்துவிட்டு பால்ராஜ் நரேந்திரனைப் பார்த்தார்.

"பன்னிரண்டாம் தேதியை ஏன் தேர்ந்தெடுத்தாய், நரேன்..?"

"அன்றைக்கு மாலை நேரம் மன்சூர், சலீம் இருவரும் ஒரு கச்சேரியில் இருப்பார்கள். ரத்னா தனிமை விரும்பி. தனக்கேற்ற சூழ்நிலையில் நிதானமாக செயல்பட்டுத்தான் பழக்கம். அரங்கத்தில் இருக்கும் ஆயிரம் பேரையும் மயக்க மருந்து அடித்து மயக்க முடியாது. பொது இடத்தில் செயல்படும் அளவுக்கு அவனிடம் வசதி இருக்காது. சவாலில் ஜெயிப்பதற்காக அப்படி வந்துவிட்டால், நிச்சயம் மாட்டிக்கொள்வான். அந்த அளவுக்கு வலையை விரித்து வைப்போம்.."

"நாம் பெரிய ரிஸ்க்கை எடுக்கிறோம்.." என்றார், இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"சிறுத்தையைப் பிடிக்க ஆட்டுக் குட்டியைக் கட்டி வைப்பது உண்டு, பால்ராஜ்."

"மறுபடியும் டிஸ்கவரி சேனல்"

"ஒன்றல்ல, இரண்டு ஆடுகளைக் கட்டப் போகிறோம். இரண்டும் பிரபல ஆடுகள்.." என்று பெருமூச்சுவிட்டார், இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

முப்பத்து நான்கு

ஹைதராபாத்.

ஜூன் மாதத்து வெயில் உலர்ந்து இருந்தது. சந்திரபாபு நாயுடு வளர்த்த நகரம், புதிய ஆட்சி பற்றிய கவலை இன்றி வழக்கம் போல் இயங்கிக்கொண்டிருந்தது.

விமான நிலையத்திலேயே அவர்களை வரவேற்க ஆந்திரக் காவல் துறை காத்திருந்தது. சதுர முகத்துடன் கமிஷனர் அகலமான கையைக் கொடுத்தார்.

"வெல்கம் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்."

"இது நரேந்திரன். இவரால்தான் இந்தக் கேஸின் முக்கியத் திருப்பம் ஏற்பட்டது.." என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

கமிஷனர் அவனுடைய கையையும் குலுக்கிவிட்டு நிமிர்ந்தார்.

"நீங்கள் சொன்னபடி மன்சூர் வீட்டுக்குப் பாதுகாப்பு கொடுத்தாயிற்று. மன்சூர், சலீம் இருவரும் சகோதரர்கள். சன்த்தூர் வாத்தியம் வாசிக்கும் இசைக் கலைஞர்கள் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவர்களைப் பாதுகாக்க ஆந்திர போலீஸ் உங்களுடன் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறது"

ஹிமாயத் நகரில் இருந்தது அந்த சிறு பங்களா.

இஸ்லாமிய அமைப்பில் முகப்பு. துப்பாக்கிகளுடன் காவலிருக்கும் செக்யூரிட்டி பணியாளர்கள். பளிங்குப் படிகள். பச்சை நிறத்தில் மிதியடி. நுழைந்ததும் உயரமான கூரையுடன் ஹால். குஷன் சோபாக்கள். மெலிதான சன்த்தூர் இசை.

சுவர்களிலும் ஷோகேஸ்களிலும் சகோதரர்கள் நடத்திய இசை நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், அவர்கள் வாங்கிய பரிசுகள் அலங்கரித்தன.

வணக்கம் சொல்லி வரவேற்றார், மன்சூர். ஐம்பத்தைந்து வயதில் தனி கம்பீரம். நெடு நெடுவென்ற உயரம். முழங்காலைத் தாண்டித் தொங்கும் உடை. கருகருவென்ற மீசை. குறுந்தாடி. உச்சி நெற்றியில் தொழுகைத் தழும்பு. கண்களை அழகுபடுத்துவது போல் தங்க விளிம்புடன் கண்ணாடி. சுகந்தமான வாசம். புன்னகைத்தபோது சீரான பெரிய பற்கள் பளீரிட்டன.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அந்தப் புகைப்படத்தை அவரிடம் காட்டினார்.

"இவனைத் தெரிகிறதா..?"

"இல்லை.."

"ரத்னா. கொடைக்கானலில் ஒரு பெண்ணைக் கற்பழித்துக் கொலை செய்த வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவன்.."

"ஆமாம், ஆமாம், இப்போது நினைவுக்கு வருகிறது. போலீஸ்

எங்களிடம்கூட அப்போது விசாரணை நடத்தியதே..?"

"அவன் சிறையிலிருந்து தப்பிவிட்டான். ஹோட்டல் மலை வைரத்தில் அன்றைக்குத் தங்கியிருந்தவர்களைத் தேடித் தேடி கொலை செய்துகொண்டிருக்கிறான். அடுத்த குறி உங்களை இருக்கலாம் என்பதற்காகத்தான் இந்தப் பாதுகாப்பு.." என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

மன்சூரின் பார்வையில் களைப்பு இருந்தது.

"எப்போதோ கொடைக்கானலுக்கு நானும் தம்பியும் போனதற்கு இன்றைக்கு பயப்படச் சொல்கிறீர்களே, இன்ஸ்பெக்டர்? அங்கே அன்றைக்கு நடந்த கொலைக்கும், இப்போது நடக்கும் தொடர் கொலைகளுக்கும் தொடர்பு இருக்கலாம். ஆனால், எங்களுக்கும் அந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லையே. நானும் என் தம்பியும் அன்றைக்கிரவு அறையைவிட்டு வெளியே வரவேயில்லை என்று ஏற்கெனவே போலீஸில் சொன்னோமே..?"

"போலீஸ் உங்களை நம்பியது. ஆனால், அவன் நம்பியதாகத் தெரியவில்லையே.." என்றான் நரேந்திரன்.

"அவனை நாங்கள் மடக்கிப் பிடிக்கும் வரையில் நீங்கள் ஒத்துழைக்க வேண்டும், மன்சூர் சார்"

"இன்றைக்கு மாலை கஸ்தூரிபா ஹாலில் ஒரு கச்சேரிக்கு ஒப்புக்கொண்டிருக்கிறோம். அவனுக்கு பயந்து அதை கேன்ஸல் பண்ணச் சொல்கிறார், கமிஷனர். வெளிநாட்டிலிருந்து சிலரும் அந்தக் கச்சேரிக்கு வந்திருக்கிறார்கள். தடால் புடால் என்று அப்படியெல்லாம் கேன்ஸல் பண்ண முடியாது"

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கமிஷனரைப் பார்த்துத் திரும்பினார்.

"கச்சேரியை ரத்து செய்ய வேண்டாம். போலீஸ் பாதுகாப்பை அதிகரிப்போம். ரத்னா பொதுவாக தனிமையில் தனக்கு நிறைய நேரம் வைத்துக்கொண்டுதான் தாக்குகிறான். பொது இடத்தில் எந்தப் பிரச்னையும் செய்ய மாட்டான். என்ன சொல்கிறாய், நரேன்..?" என்று என்னவோ அப்போதுதான் தீர்மானம் செய்வது போல் பால்ராஜ் கேட்டார்.

நரேந்திரன் ஆமோதித்தான். "ஆனால், கச்சேரிக்குப் போகும்போதும், திரும்பும்போதும் போலீஸ் பாதுகாப்பை மறுக்காதீர்கள், சார்"

"ஓகே.." என்று தோள்களைக் குலுக்கினார், மன்சூர், அவர் பலியாடாகக் கட்டப்படுவது பற்றித் தெரியாமல்.

முப்பத்து ஐந்து

கஸ்தூரிபா ஹால்.

தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த முகப்பு. மன்சூர், சலீம் சகோதரர்களின் படங்களைத் தாங்கிய போஸ்டர்கள். அங்கங்கே மஃப்டியில் நின்றிருந்த போலீஸ்காரர்கள். அவர்கள் யாரை மடக்கக் காத்திருந்தார்களோ, அவன் டாக்ஸியிலிருந்து இறங்கினான்.

ரத்னா குறுந்தாடி ஒட்டி, தலையில் இஸ்லாமியத் தொப்பி அணிந்திருந்தான். பாத்ரூம் கண்ணாடியில் தன்னைப் பார்த்து திருப்தியுற்ற பிறகுதான் டிக்கெட் வாங்கினான். ஒரு இஸ்லாமியக் குடும்பத்துடன் கலந்து நடந்து வந்தான்.

மன்சூர், சலீம் இருந்த அறையில் நரேந்திரன் நுழைந்தான்.

"குட் ஈவினிங், சார்"

"குட் ஈவினிங்.." என்றார், மன்சூர் பனியனை அணிந்துகொண்டே. இசை நிகழ்ச்சிக்கு சற்று முன்னதாக சலவை உடைகளை அணிவது அவர் பழக்கம் என்று நரேந்திரன் கேள்விப்பட்டிருந்தான்.

"இதெல்லாம் தங்கப் பொத்தான்களா..?" என்று கண்ணாடிக்கெதிரில் இருந்த பொத்தான்களைப் புரட்டிக்கொண்டிருந்தான்.

"ஆமாம்"

"நாங்கள் சொன்னதையெல்லாம் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், சார். சந்தேகத்துக்கிடமான யாருடனும் பேசாதீர்கள். ரசிகர்களாயிருந்தால்கூட கிட்டே விடாதீர்கள். ஏதாவது வேண்டுமானால் போலீஸ் அட்டை வைத்திருப்பவர்களிடம் மட்டுமே கேளுங்கள்.."

"கிட்டத்தட்ட ஜெயிலில் அடைத்துவிட்டீர்கள்.." என்றார் மன்சூர், வேதனையுடன்.

நரேந்திரன் நன்றி சொல்லிவிட்டு வெளியேறினான். அங்கு நின்றிருந்த காவலரிடம் கடைசி நொடி உத்தரவுகளை உறுதிப்படுத்திக்கொண்டான்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜைத் தேடி நடந்தான்.

அந்த கச்சேரி ஹாலுக்குள் ரத்னா நுழைந்தபோதே, பார்வையை நாலாபுறமும் மேயவிட்டான்.

இவ்வளவு பேரைக் கொண்டுவந்து குவித்திருக்கிறார்களா? சவாலின் வீரியம் அதிகரிக்க அதிகரிக்க அவனுள் மகிழ்ச்சி எட்டிப் பார்த்தது.

அதோ குர்தா அணிந்து அப்பாவி மாதிரி நிற்கிறானே, அவன் முகத்தில் போலீஸ் என்று ரகசியமாக முத்திரை குத்தப்பட்டிருக்கிறது. ரத்னா அந்த ஆளை நெருங்கினான். சலாம் வைத்தான்.

"நீங்கள் ஆடிட்டோரியத்தைச் சேர்ந்தவரா..?" என்றான், பணிவான குரலில்.

"ஏன்..?" என்றார் அந்த மப்டி போலீஸ், கண்களில் சந்தேகத்தோடு.

"ஹாலின் மேடைக்குப் போகும் வழியில் தடுப்பு இருக்கிறதே, அங்கே ஒரு ஆள் அக்கம்பக்கம் பார்த்துக்கொண்டு ரகசியமாக நுழைந்தான். செட் போட வைத்திருக்கும் மரச் சாமான்களுக்குப் பின் ஒளிந்து உட்கார்வதை நான் பார்த்தேன். ஒருவேளை டிக்கெட் வாங்காமல் நுழையப் பார்க்கிறானோ என்று தோன்றுகிறது. அதுதான் உங்களிடம் சொல்லலாமே என்று.."

ஓசி டிக்கெட்டைவிட முக்கியமடா, முட்டாளே. அந்தக் கயவன் மட்டும் என்னிடம் கிடைத்துவிட்டால், கமிஷனரிடம் எனக்கல்லவா பாராட்டுகள் கிடைக்கும்! அந்த மப்டி கான்ஸ்டபிள் பரபரப்பானார். ஆளைப் பிடித்துவிட்டு மேலதிகாரியிடம் தகவல் தரலாம் என்று முடிவு செய்தார்.

"எந்த அறை என்று காட்ட முடியுமா..?"

"என் மீது அவனுக்குக் கோபம் வராமல் பார்த்துக்கொள்ளுவீர்களா..?" என்று கேட்டுக்கொண்டே, ரத்னா அவரை அழைத்து வெளியே வந்தான்.

கச்சேரிக்கான நேரம் நெருங்கிவிட்டதால், டிக்கெட் வாங்கியவர்கள் பரபரப்பாக உள்ளே விரைந்துகொண்டிருந்தார்கள். அவர்களைக் கடந்து, பக்கவாட்டில் அரங்கத்தைவிட்டு அவர்கள் வெளிப்பட்டார்கள். மேடைக்குப் பின்புறமிருந்த அறை நோக்கி ரத்னா கை காட்டினான், அங்கே சற்றே வெளிச்சம் குறைவாயிருந்தது.

போலீஸும், ரத்னாவும் அந்த அறைக்குள் சேர்ந்தே நுழைந்தார்கள்.

ரத்னா செயல்பட்டான்,

அந்த அறையைவிட்டு வெளியே வந்தபோது, ரத்னா உடை மாற்றியிருக்கவில்லை.

ஆனால், போலீஸ்காரர் வைத்திருந்த அடையாள அட்டையும், துப்பாக்கியும் இப்போது அவன் பாக்கெட்டில் இருந்தன.

அடையாள அட்டை அவனை சுலபமாக மேடையின் பின்வாசல் வழியே உள்ளே அழைத்துப்போனது.

மேடையில் தபலா வாசிப்பவர் அமர்ந்து சுருதி பார்த்துக்கொண்டிருந்தார். மற்ற பக்க வாத்தியக்காரர்கள் தத்தம் இடத்தில் மைக்கைத் திருத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னே, அரங்கத்தை மறைத்து கனமான வெல்வெட் திரை தொங்கியது. சன்த்தூர் கருவிகள் அமைக்கப்பட்டு, சகோதரர்கள் வருவதற்காக எல்லோரும் காத்திருந்தார்கள்.

ரத்னா மேடையின் விலாவில் இருந்த குளிரூட்டப்பட்ட அறைக்கு

வந்தான். மீசை வைத்த காவலரால் தடுக்கப்பட்டான். அடையாள அட்டையைக் காட்டினான். அனுமதிக்கப்பட்டான்.

கண்ணாடிக்கெதிரில் தங்கப் பொத்தானை சரி செய்துகொண்டிருந்த மன்சூர் திரும்பினார். உருவத்தில் மெலிதாக இருந்த இளையவர் சலீம் சிறு கண்ணாடிக் கோப்பையில் இருந்த தேன்நிற திரவத்தை ஒரே மடக்கில் தொண்டையில் சரித்துக்கொண்டு திரும்பினார்.

"குட் ஈவினிங், சார்.." என்று அவரை நெருங்கி, ரத்னா சல்யூட் அடித்தான்.

"கமிஷனர் இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்.." என்று பாக்கெட்டிலிருந்து அந்தக் குப்பியை எடுத்தான்.

வழக்கத்தைவிட வலுவான மருந்து. ஐந்தும், ஐந்தும் பத்து நொடிகளில் மன்சூர், சலீம் இருவரும் துணி மூட்டைகள் போல் தொய்ந்து விழுந்தார்கள்.

இதில் மன்சூர் மீது பீய்ச்சப்பட்ட அளவு குறைவு. இருவரில் மன்சூர்தான் கனமானவர். இன்னும் நான்கு நிமிடங்களில் எழுந்துவிடுவார். ரத்னா கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

"இங்கே பாருங்களேன், இவர்களை.." என்று குரலை உயர்த்தாமல், அங்கு காவலுக்கு நின்றிருந்தவரிடம் பரபரத்தான்.

காவலுக்கு இருந்த மட்டி எட்டிப் பார்த்து, கீழே கிடந்த சகோதரர்களைப் பார்த்துப் பரபரப்பாகி உள்ளே அடி எடுத்து வைத்தார். அடுத்த ஐந்து நொடிகள் அவருக்காக செலவாயின.

ரத்னா கீழே கிடந்த மூவரையும் ஒரு பெருமிதத்துடன் பார்த்தான்.

பாக்கெட்டில் கைவிட்டான். ஏற்கெனவே தயார் செய்திருந்த மெசேஜை நரேந்திரனின் எண்ணுக்கு அனுப்பினான்.

முப்பத்து ஆறு

பீப் ஒலி கேட்டு நரேந்திரன் செல்போனை இயக்கினான்.

ஆங்கில வார்த்தைகள் ஓடின.

'இரண்டு பேரைக் காப்பாற்ற இருநூறு பேரைக் காவு கொடுக்க வேண்டுமா என்று யோசி. மன்சூர், சலீம் சகோதரர்கள் இப்போது என் வசம். அவர்கள் இருவர் உடல்களிலும் வெடிகுண்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவர்களைக் காப்பாற்ற நினைத்து என்னைத் தாக்கினால், அவர்களோடு சேர்ந்து சுற்று வட்டாரத்தில் இருநூறு மீட்டர் தூரத்துக்கு எல்லாம் வெடிக்கும். தேவையா? தவிர்க்க நினைத்தால், உன் காவல்துறை நண்பர்களிடம் சொல்லி, நாங்கள் வெளியேறும்வரை எல்லோரையும் அமைதியாக இருக்கச் சொல்..'

நரேந்திரன் பரபரப்பாகி பக்கத்தில் இருந்த இன்ஸ்பெக்டர் பால்ராஜிடம் செல்போனைக் காட்டினான். அவர் படித்து முடிப்பதற்குள் நரேந்திரனின் போன் ஒலித்தது. சலீமின் எண். அவசரமாக எடுத்தான்.

ஒலித்தது, சைக்கோவின் குரல்.

"மேடையின் பின்புறம் சலீமின் எஸ்டீம் கார் நிற்கிறது. நம்பர் 2030. அந்தக் காரில் நாங்கள் ஏறும் வரை போலீஸ் தொந்தரவு செய்யக் கூடாது. எஸ்டீமில்தான் நாங்கள் பயணமாகிறோம். இன் கேட் வழியே வெளியேறுவோம். அந்த வழியில் தப்பித் தவறி வேறு வாகனம் குறுக்கிட்டால்கூட, அது ஹைதராபாத் சகோதரர்களுக்கு ஆபத்தாக முடியும். உன் நண்பர்களிடம் காரை மறிக்காமல் வழிவிடச் சொல். தொடரப் பார்த்தாலோ, தடுக்கப் பார்த்தாலோ, மொத்தமாக வெடித்துச் சிதறுவோம். நாங்கள் வெளியேறி ஐந்து நிமிடங்களுக்குப் பிறகுதான் மேடையில் இருக்கும் மற்ற கலைஞர்களிடமும், மக்களிடமும் இன்றைக்கு கச்சேரி கிடையாது என்று அறிவிக்க வேண்டும்.."

தொடர்பு துண்டிக்கப்பட்டதும், நரேந்திரன் பரபரப்பாக இன்ஸ்பெக்டர் பால்ராஜிடம் தகவல்களைக் கொட்டினான்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கமிஷனரைத் தேடி விரைந்தார்.

ரத்னா மன்சூரின் விலாவில் நுனிக்காலால் குத்தினான்.

மன்சூர் இமைகளைத் திறந்தபோது முதலில் மசமசப்பாக உணர்ந்தார். எதிரே நிற்பவனும் போலீஸ்காரன்தானே? இவன் ஏன் தன்னைத் தாக்குகிறான்? எதற்காக முகத்தைப் பாதி மூடி துணி கட்டியிருக்கிறான்? அடுத்த கெந்தலில் மூளை இன்னும் தெளிவானது.

"எழுந்திரு.." என்றான் ரத்னா. "உன் இடுப்பில் கட்டப்பட்டிருக்கும் பெல்ட்டைத் தொடாதே. அதில் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டிருக்கின்றன"

மன்சூர் திடுக்கிடலோடு எழுந்து அமர்ந்தார். கண்களைக்

கசக்கிக்கொண்டார்.

"சின்ன வயதிலிருந்தே உன் தம்பியை நீதானே கவனித்துக்கொள்கிறாய்? இப்போதும் நீதான் அவனைத் தோளில் தூக்கிப் போட்டுக்கொள்ளப் போகிறாய். அவன் இடுப்பிலும் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அலுங்காமல் நலுங்காமல் கார் வரை அவனை சுமந்து வா. உங்கள் இருவரையும் வெடிக்க என் கையில் ரிமோட் தயாராக இருக்கிறது.."

"யார் நீ..?" என்றார் மன்சூர், பதற்றத்துடன்.

"பேசாதே. ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு பல் உடையும்"

மன்சூரிடம் அவ்வளவு மரியாதைக் குறைவாக யாருமே அதுவரை அப்படிப் பேசியதில்லை. காட்டில் சிக்கிக்கொண்டவர் போல் அவனை மிரட்சியுடன் பார்த்தார்.

"தூக்கு.."

தம்பி மெலிதாக இருந்தாலும், அந்த வயதில் அவரைத் தூக்கித் தோளில் போட்டுக்கொள்வது என்பது மன்சூருக்குப் பெரும் சிரமமாக இருந்தது. அதுவும் பெல்ட் பகுதியில் அணிவிக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் போல் தோற்றமளித்த சங்கிலி அமைப்பு அவர் உடலில் நடுக்கம் கொண்டுவந்தது.

மூச்சிரைக்க மூச்சிரைக்க அந்தக் கதவைத் திறந்து அவர் முதலில் வெளிப்பட, பின்னாலேயே ரத்னா தொடர்ந்தான்.

"பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டோம்.." என்றார், இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"அவனைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டோம்"

"இல்லை, பால்ராஜ். இந்த மாதிரியொரு டெவலப்மென்ட்டைத்தான் எதிர்பார்த்தேன். எஸ்டீம் காரைக் கொண்டுவந்து மேடையின் பின்னால் நிறுத்துவதற்கு முன் அதை நான் பார்க்க விரும்புகிறேன்.."

"நேரம் குறைவு, நரேன். கமிஷனரிடம் வேறு தெரிவிக்க வேண்டும்"

"கவலைப்படாதீர்கள். அவனை சமாளித்துவிட முடியும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.." நரேந்திரன் வேகமாக நடந்துகொண்டே பேசினான்.

"அவர்கள் உயிர்களுக்கு எந்த ஆபத்தும் வராமல் கவனித்துக்கொள். நான் கமிஷனரிடம் ஓடுகிறேன்"

"காரில் போலீஸின் சென்ஸார் ஒன்றைப் பொருத்திவிடுங்கள். அவன் கண்ணில் படாமல் தொடரலாம்.."

நரேந்திரன் தன் துப்பாக்கியில் தோட்டாக்கள் நிரம்பியிருக்கிறதா என்று சரி பார்த்துக்கொண்டே மேடையின் பின்புறத்துக்கு ஓடினான்.

முப்பத்து ஏழு

எஸ்டீமின் டிக்கியைத் திறந்து நரேந்திரன் ஏறி ஒளிந்து மடங்கி உட்கார்ந்தான்.

கதவைச் சாத்திக்கொண்டான்.

கமிஷனரின் செல்போன் ஒலித்தது.

அவருக்குப் பழக்கமில்லாத ரத்னாவின் குரல் ஒலித்தது.

"மன்சூர், சலீம் இருவரும் என் வசம் மாட்டியிருக்கிறார்கள். இருவர் உடல்களிலும் வெடிகுண்டுகள் சுற்றப்பட்டிருக்கின்றன. குறுக்கிடாமல், தடை ஏற்படுத்தாமல் எங்களுக்கு ஒரு அரசுக் கார் வேண்டும். காரில் யார் ஒளிந்திருந்தாலும், மொத்தக் காரும் வெடித்துச் சிதறும். ஐந்து நொடிகளில் காரை மேடையின் தெற்குப்புற வாசலுக்குக் கொண்டுவந்து நிறுத்த வேண்டும்.."

கமிஷனர் அதிர்ந்து நிமிர்ந்தார். இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அவரை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தார்.

மேடையின் பக்கக் கதவு திறந்து, திரைகளிலிருந்து சலீமை சுமந்தபடி மன்சூர் வெளிப்பட்டார்.

பின்னாலேயே அவர் நிழலாக ரத்னா.

நரேந்திரன் தன்னை ஒடுக்கிக்கொண்டு கார் புறப்படக் காத்திருந்த சில விநாடிகள் கழித்து, டிக்கியின் கதவு வெளியிலிருந்து திறக்கப்பட்டது.

நரேந்திரன் சரேலென தன் துப்பாக்கியை உருவி முன்னே நீட்டினான்.

நேரெதிரே வைஜயந்தி நின்றிருந்தாள். "துப்பாக்கியை மடக்கு. அவன் உன்னைவிட புத்திசாலி.." என்றாள்.

"என்ன சொல்கிறாய்..?" நரேந்திரன் எழுந்து வெளியே வந்தான்.

"எஸ்டீம் வேண்டுமென்று உன்னிடம் சொல்லிவிட்டு, அவன் கமிஷனருக்கு போன் செய்து, மன்சூர், சலீம் இருவரும் தன்னிடம் இருப்பதைச் சொல்லியிருக்கிறான். கொண்டை விளக்கு வைத்த அரசாங்கக் கார் வேண்டுமென்று சொல்லிவிட்டான். அந்த அம்பாசிடரில் ஏறித் தப்பித்துவிட்டான்.."

"பதினாறடி பாய்கிறான்.." என்றான் நரேந்திரன்.

"நீ சொன்னாயே என்று சென்ஸார்களை இந்த எஸ்டீம் காரில் பொருத்தினரர்கள். இப்போது இது இங்கேயே நிற்கப் போகிறது.."

"அம்பாசிடரிலும் சென்ஸார் பொருத்தப்பட்டிருக்கிறது.." என்றான் நரேந்திரன். அவன் குரலில் பரபரப்பு இருந்தது.

"பொருத்த நேரமில்லை, நரேந்திரன். காரை அடுத்தடுத்து அவன் மாற்றினால் என்ன செய்வாய்..?" என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"எத்தனை கார் மாற்றினாலும், சென்ஸார் நமக்கு வழி காட்டும்,

பால்ராஜ்"

"வாட் டு யூ மீன்..?"

"மன்சூர் அணிந்திருக்கும் சட்டையில் ஒரு தங்கப் பொத்தானுக்குப் பின்னால் சென்ஸார் இருக்கிறது. உங்களிடம்கூட சொல்லாமல் பொருத்தினேன்"

"வாட் அவன் அவர்களைக் கடத்துவான் என்று எதிர்பார்த்தாயா..?"

"ரத்னா கூட்டத்தில் செயல்பட மாட்டான். சவாலை மதித்து வந்தால், அவர்களை அரங்கத்திலேயே தனிமைப்படுத்தப் பார்ப்பான் என்று எதிர்பார்த்தேன். அதனால் மன்சூர் இருக்கும் இடத்தைக் காட்ட ஒரு சென்ஸாரைப் பொருத்தினேன். ஆனால், அரங்கத்தைவிட்டே வெளியேறுவான் என்று நினைக்கவில்லை.."

"மன்சூர், சலீம் இருவரின் உயிர்களுக்காகப் பார்க்க வேண்டியிருக்கிறது. மற்றபடி அவன் எடுத்துப் போயிருக்கும் வாகனத்தை போலீஸ் மடக்குவது கஷ்டமில்லை.." என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"அவனுக்கும் அது தெரியும். தப்பித்துப் போக வேண்டுமென்பது அவன் ஐடியா இல்லை. மன்சூர், சலீம் இருவரையும் பழி வாங்கி முடித்ததும், அவன் மனம் சமாதானமாகிவிடும். போலீஸிடம் சந்தோஷமாக சிக்கிக்கொள்வான். அல்லது தன்னையே சுட்டுத் தற்கொலை செய்துகொள்வான். அவர்களுக்கு ஆபத்து வருவதற்கு முன் அவனை மடக்க வேண்டும்.."

நரேந்திரன் தங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஜென் காரில் ஏறினான். வைஜயந்தி மறுபுறம் பாய்ந்து ஏறினாள்.

"என்ன செய்யப் போகிறாய்..?" என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"என்னை நம்பி பொறுப்பை விடுங்கள், பால்ராஜ்"

"ஐ'ம் ஸாரி. இது ஹைதராபாத். இந்தப் போலீஸை மீறி நான் எதுவும் செய்ய முடியாது".

"நீங்கள் கமிஷனருடன் சேர்ந்து செயல்படுங்கள். என் போன் உங்களுக்கு சீக்கிரம் வரும்"

நரேந்திரன் சரக்கென்று காரைக் கிளப்பினான்.

முப்பத்து எட்டு

செல்போனை இயக்கி சலீமின் எண்ணைத் தொடர்புகொண்டான்.

"ஹாய், நரேன். அரங்கத்தில் எல்லோரும் நலமா..?"

"நீ ஆடுவது அழுகுணியாட்டம், ரத்னா"

"எந்த விதத்தில்? நீ குறிப்பிட்ட தேதி பன்னிரண்டு. நீ குறிப்பிட்ட நேரம் மாலை ஆறிலிருந்து பத்து வரை. இன்றைக்கு தேதி பன்னிரண்டு. சரியாக இரவு பத்து மணிக்கு நாம் மறுபடி பேசுவோம். என் வெற்றியைப் பற்றி நானும், உன் தோல்வியைப் பற்றி நீயும் அப்போது விவாதிப்போம்.."

தொடர்பு அறுந்தது.

ஆந்திர அரசால் ஆறு மாதத்துக்கு முன் வாங்கப்பட்டிருந்த அந்த அம்பாசிடர் கார் சாலையிலிருந்து விலகி மண் பாதையில் இறங்கி மரங்களின் அடர்த்திக்குள் நுழைந்தது.

அந்தக் குலுக்கல்களில் இடுப்பில் கட்டப்பட்ட வெடிகுண்டு பெல்ட் வெடித்துவிடப் போகிறதே என்று மன்சூர் மிரண்டிருந்தார். மடியில் கிடந்த தம்பி கண்களைத் திறந்தே பார்க்காதது வேறு அச்சத்தை உண்டுபண்ணியது. போலீஸ் எச்சரித்தபோது இவ்வளவு விபரீதங்களை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

"சத்தியமாக உன்னை நாங்கள் இருவரும் காட்டிக் கொடுக்கவில்லை. எங்களை என்ன செய்யப் போகிறாய்..?" என்றார், குரல் நடுங்க.

"பேசினால் ரிமோட்டை இயக்கிவிடுவேன்.." என்று சிரித்தான் ரத்னா. அரசுக் காரை அங்கிருந்த மரத்தின் மீது கிட்டத்தட்ட மோதி நிறுத்தினான்.

"தம்பியைத் தூக்கிக்கொண்டு இறங்கு. அங்கே நிற்கிறது பார், அந்த மாருதி வேனில் ஏறு"

மன்சூர் தன் சகலங்களும் நடுங்கிக்கொண்டிருக்க, அவன் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்தார்.

வைஜயந்தி தன் மடியில் அந்த சிக்னல் ரிசீவரை வைத்திருந்தாள்.

வட்டமான அந்த மீட்டரில் ஒரு மையப் புள்ளியில் துவங்கும் ஏராள நேர்க்கோடுகள் சூரிய கிரணங்கள் போல வட்டத்தின் வெவ்வேறு புள்ளிகளைத் தொட்டுக்கொண்டிருந்தன. பெரிய முற்றுப் புள்ளி வைத்தது போல் ஒளிரும் ஒரு பச்சை விளக்கு அவ்வப்போது அந்த மீட்டரில் திசை மாறிக்கொண்டேயிருந்தது.

மன்சூர் அணிந்திருந்த தங்கப் பொத்தானிலிருந்து அனுப்பப்படும் சிக்னல்களை வைத்துதான் அந்த வெளிச்சப் புள்ளி திசை மாறியது. அதன் போக்கை வைத்துக்கொண்டு நரேந்திரன் ஜென்னை செலுத்தினான்.

முக்கிய சாலைகள் அத்தனையிலும் போக்குவரத்து அடர்ந்துவிட்டது. அங்கங்கே போலீஸ் தலைகள் தெரிந்தன. ஆனால், எந்த இடத்திலும் தடுப்புகளோ, தடைகளோ இல்லாததைப் பார்த்தால், போலீஸ் அவசரப்படாமல் கவனமாகவே செயல்படுகிறது என்று தெரிந்தது.

ஹைதராபாத் நகரத்தின் விளிம்புக்கு வந்தாயிற்று. கடைசியில், மீட்டரில் பச்சை வெளிச்சம் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் தொடர்ந்து சற்று நேரம் நீடித்தது.

நரேந்திரனின் செல்போன் இயங்கியது.

"அவன்தானா..?"

"இல்லை. பால்ராஜ்.." என்று நரேந்திரன் போனை இயக்கினான்.

"ரத்னா சென்ற அரசாங்கக் காரைக் கண்டுபிடித்துவிட்டார்கள். அதை மரங்களுக்கு நடுவில் விட்டுவிட்டு அவன் வேறு காரில் ஏறி மாயமாகிவிட்டான்.." என்றார் பால்ராஜ்.

"அந்த வேறு காரின் டயர் தடயங்கள் கிடைத்ததா, பால்ராஜ்..?"

"பார்த்தால் மாருதி வேனுடைய டயர்கள் போல் தெரிகிறது, நரேன்.."

"இன்னும் ஐந்து அல்லது பத்து நிமிடத்தில் அவனை நாங்கள் நெருங்கிவிடுவோம், பால்ராஜ்"

"எப்படிச் சொல்கிறாய்..?"

"மன்சூரின் சட்டையிலிருந்து வந்துகொண்டிருக்கும் சிக்னல் கொஞ்ச நேரமாக ஒரே இடத்தில் ஆணி அடித்தது போல் நின்றுவிட்டது. அந்தத் திசை நோக்கித்தான் போய்க்கொண்டிருக்கிறோம். இடத்தைச் சொல்கிறேன். குறித்துக்கொள்ளுங்கள். ஆனால், பெரிய போலீஸ் படையுடன் வர வேண்டாம். அவன் அதிர்ச்சியாகிவிட்டால், வெடிகுண்டுகளை வெடித்துவிடக்கூடும்.."

நரேந்திரன் அவர்கள் இருந்த பகுதியை இன்ஸ்பெக்டர் பால்ராஜிற்கு போனில் விளக்கினான்.

செல்போனை சைலன்ட் மோடுக்கு மாற்றினான்.

"இங்கே எங்கேயோ இடது பக்கத்திலிருந்துதான் சிக்னல் வருகிறது.." என்றாள் வைஜயந்தி.

நரேந்திரன் இடது புறம் பார்த்தான். தார்ச் சாலையிலிருந்து விலகிப் பிரியும் குறுகலான மண் சாலை தெரிந்தது. இருபுறமும் அடர்ந்த மரங்கள் இருட்டை அதிகப்படுத்தியிருந்தன. காரை நிறுத்தாமல் சற்று தூரம் செலுத்தி, நரேந்திரன் மரங்களின் நிழலில் வெளியே தெரியாத இடத்தில் ஜென்னை நிறுத்தினான்.

"கம்.." என்று காரிலிருந்து இறங்கினான்.

ராணுவ வீரர்கள் போல் மரங்கள் நெருக்கமாக நின்றிருந்தன.

அவற்றைத் தாண்டி நட்சத்திரப் பொத்தல்களுடன் வானத்தின் நீலம் சில திட்டுகள் மட்டும் தெரிந்தது.

வைஜயந்தி தன் கையில் இருந்த மீட்டரைக் காட்டினாள். அதை வைத்து திசை தீர்மானித்து, சருகுகளில் ஒலி எழுப்பாமல் அவர்கள் மெல்ல மெல்ல முன்னேறினர். மரங்களின் வரிசை ஓரிடத்தில் முடிந்து பூமியில் பெரிய இடைவெளிவிட்டு மீண்டும் துவங்கியது. அந்த இடைவெளியில் சலசலத்து ஓடும் நீரின் மெலிதான ஒலி கேட்டது.

"ஓடை ஒன்று குறுக்கிடுகிறது.." என்று கிசுகிசுத்தான் நரேந்திரன்.

வைஜயந்தி அவன் புஜத்தை இறுகப் பற்றினாள். இருட்டில் காட்டினாள்.

சில நூறு மீட்டர்கள் தள்ளி, இருட்டில் மசமசப்பாக மரங்களின் நிழலில் அந்த மாருதி வேன் நின்றிருப்பது தெரிந்தது.

நரேந்திரன் தன் துப்பாக்கியை உருவிக்கொண்டான்.

"மன்சூர், சலீம் இருவருக்கும் வெடிகுண்டு பெல்ட்கள் அணிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மறக்காதே.." என்றாள் வைஜயந்தி.

"தெரியும். ஆனால், ரத்னா தன் வழக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை என்றால், நமக்கு ஆபத்து இல்லை"

"என்ன சொல்கிறாய்..?"

"ரத்னா கொலை செய்யும் முன் மயக்க மருந்து கொடுத்து நினைவிழக்கச் செய்வான். அப்புறம் உடைகளைக் கழற்றி அம்மணமாக்கிவிடுவான். அப்புறம்தான் கழுத்தை சீவுவான். ஆள் இறந்த பிறகுதான் கண்களை.."

"அதைச் சொல்லாதே.."

"அவர்களை நெருங்கும் வரை என் வீரத்தைக் காட்டப்போவதில்லை. நான் முதலில் போகிறேன். இடைவெளிவிட்டு நீ வா"

முப்பத்து ஒன்பது

நரேந்திரன் மரங்களின் பின்னால் நிழலாக நகர்ந்தான்.

ஓடை புருவம் போல் வளைந்து திரும்பியது. அதன் கரையில் பூமி முண்டும் முடிச்சுமாக அழகில்லாமல் கிடந்தது. காற்றின் விஷ்ஷ் தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருந்தது. மாருதி வேனைக் குறி வைத்து நரேந்திரன் ஒவ்வொரு அடியாக முன்னேறினான். அவன் மிதித்ததால் இருப்பிடம் கலைக்கப்பட்டு ஒரு எலி சருகுகளை சப்தித்துக்கொண்டு ஓடியது.

அந்த சப்தம் அடங்கும் வரை நரேந்திரன் அசையாமல் நின்றிருந்தான். அந்த திடீர் ஒலியால் யாரும் கவரப்பட்டுவிடவில்லை என்று தீர்மானித்துக்கொண்டு, மெல்ல நகர்ந்தான். மிக மெலிதான விசில் இசை காற்றில் மிதந்து வந்தது.

சட்டென்று அவர்கள் அவன் பார்வையின் வீச்சிற்குள் வந்தார்கள்.

ரத்னா, மன்சூர், சலீம்.

இங்கு வந்தபின் மன்சூர் முகத்திலும் மயக்க மருந்து பீய்ச்சப்பட்டிருக்க வேண்டும். களைத்து மல்லாந்து கிடந்தார். அவர் பக்கத்தில் சலீம். ரத்னா கைகளைத் தேய்த்துக்கொள்வது தெரிந்தது. தொழிலுக்குத் தயாராகிறான். மெல்லிய விசில் ஒலி அவன் உதடுகளில் இருந்துதான் கசிந்தது. தன் வேலையை அவன் அனுபவித்துச் செய்கிறானாம்.

ரத்னாவின் கைக்கெட்டும் தொலைவில் கையடக்கமான ரிமோட் ஒன்று தரையில் கிடந்தது. அதை அழுத்தினால், மன்சூர், சலீம் இருவரும் வெடித்துவிடுவார்கள் என்று நரேந்திரனுக்குப் புரிந்தது.

நரேந்திரன் காலடியில் மீண்டும் அந்த எலி ஓடி ஒலியெழுப்பப் பார்க்க, நரேந்திரன் அதன் வாலைத் தன் ஷூக் காலால் மிதித்தான்.

'கொஞ்சம் இரு கண்ணா. இப்போது சப்தமெழுப்பினால், எல்லோருக்கும் ஆபத்து'

ரத்னா மண்டியிட்டு அமர்ந்து, சலீமின் சட்டைப் பொத்தான்களை ஒவ்வொன்றாக விலக்கிக்கொண்டிருந்தான். நரேந்திரன் தன் முதுகில் தானே மானசீகமாக தட்டிக்கொண்டான்.

நரேன், நீ நினைத்தது கரெக்ட். அந்த வெடிகுண்டு பெல்ட் அவர்கள் உடலிலிருந்து விலகிவிடும்.

ஆனால், நரேந்திரனுக்கு வேறொரு அதிர்ச்சி காத்திருந்தது. சலீமின் உடலிலிருந்து பெல்ட், அதைத் தொடர்ந்து பைஜாமா, குர்தா எல்லாமே விலக்கி சற்றுத் தள்ளி கவனமாக அடுக்கப்பட்டதே தவிர, மன்சூர் தொடப்படவேயில்லை.

சலீம் முற்றிலும் உடைகள் களையப்பட்டு நினைவின்றி மல்லாந்து கிடந்தார்.

ரத்னா தன் சட்டைக்குள்ளிருந்து அந்த கூர்க் கத்தியை எடுத்தான். அந்த இருளிலும், கசிந்த நிலா வெளிச்சத்தில் கத்தியின் விளிம்பும், அவன் கண்களின் விளிம்பும் பளபளத்தன.

அடப் பாவி. மன்சூரின் வெடி பெல்ட்டைக் கழற்றாமலேயே செயல்படுகிறான். ஒவ்வொருத்தராகக் கொலை செய்யப்போகிறான்.

இப்போது நெருங்கினாலும் ஆபத்துதான். மன்சூர் வெடித்துவிடுவார். அதைத் தவிர்க்க வேண்டுமானால், முதலில் அந்த ரிமோட்டை எடுக்க வேண்டும். அதற்கு முன் அந்தக் கத்தியைப் பிடுங்க வேண்டும்.

நரேந்திரனுக்கும், ரத்னாவுக்கும் இடையில் நாற்பதடிக்கும் மேல் இடைவெளி இருந்தது. ஒலியெழுப்பாமல் கிட்டே போய்ச் சேர்வதற்குள் விபரீதமாகிவிடும்.

நரேந்திரன் குனிந்து அவனிடமிருந்து தப்பிக்கத் தவித்துத் திமிறிக்கொண்டிருந்த எலியின் வாலைப் பிடித்தான். சட்டென்று வாலைப் பற்றி எலியை உயர்த்தி காற்றில் சுழற்றி குறி பார்த்து வீசினான்.

கத்தியின் கூர் முனையை சலீமின் கழுத்தில் ரத்னா வைத்த நேரம் எலி அவன் முகத்தின் மீது தொம்மென்று மோதியது. மோதிய வேகத்தில் அச்சத்தில் பிடிமானம் தேடி அவன் மூக்கை எலி அப்படியே பற்றிக்கொள்ள, ரத்னா திடுக்கிட்டு தன் கையால் முகத்தைத் தட்டிக்கொண்டு தூக்கிவாரிப் போட்டு எழுந்தான். எலி அவனிடமிருந்து குதித்துத் தப்பித்து இருட்டுக்குள் உச்ச வேகத்தில் ஓடியது.

ரத்னாவின் உடலில் சிலிர்த்த நடுக்கம் மெல்ல அடங்கியது. அச்சம் விலகி இப்போது அங்கே புன்னகை குடி வந்தது.

ச்சே, குட்டி எலி! மரத்திலிருந்து விழுந்திருக்கும். இதற்கா பயந்துவிட்டேன்?

சிரித்து மறுபடி மண்டியிட்டு அவன் அமர்ந்தபோது, காற்றில் விஷ்க் என்று ஒரு ஒலி. நரேந்திரனின் லெதர் பெல்ட் அவன் கையைச் சுற்றி வளைத்து இழுத்தது. அவன் கையிலிருந்த கத்தி எகிறி இருட்டுக்குள் போனது. ரத்னா அதிர்ந்து திரும்பிய வேகத்திலும், ரிமோட்டை அள்ளப் பார்த்தான்.

"ஸாரி. ரிமோட் என்னிடம் இருக்கிறது.." என்றான் நரேந்திரன். "ஆட்டம் முடிந்துவிட்டது. கைகளை உயர்த்திக் கழுத்துக்குப் பின்னால் கோத்துக்கொள்"

ரத்னா திரும்பிப் பார்த்தான்.

நரேந்திரனின் கையில் இருந்த துப்பாக்கி முனையின் வட்டம் நிலா வெளிச்சத்தில் அந்தரத்தில் ஒளிர்ந்தது.

ரத்னா பயமில்லாமல் சிரித்தான்.

"உன்னை இங்கே பார்த்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம், நரேன். நீ என்னை ஏமாற்றவில்லை. ஆனால், இந்த இடத்தை எப்படிக் கண்டுபிடித்தாய்..?"

"நீ புத்திசாலி. நான் படு புத்திசாலி"

"கைகளை நான் தூக்காவிட்டால், என்னை சுட்டுவிடுவாய், அப்படித்தானே..?"

"அப்படித்தான்.."

"இப்போது சுடு.." ரத்னா சரேலென்று புரண்டு தாவி பக்கத்தில் கிடந்த மன்சூர் மீது குப்புறப் படுத்தான். "மன்சூரின் இடுப்பில் இன்னும் வெடிகுண்டு பெல்ட் இருக்கிறது. அதை இழுத்தால், எல்லோரும் வெடித்துச் சிதறுவோம். செய்யவா..?"

நரேந்திரன் அதிர்ந்தான்.

"நரேன், நீ இவ்வளவு தூரம் தேடி வந்து என்னைப் பிடித்தாயே, அதுவே உன் வெற்றிதான். உனக்கு நான் தலை வணங்குகிறேன். ஆனால், என் கடமையை நான் முடிக்க இன்னும் இரண்டு உயிர்களும், நான்கு கண்களுமே பாக்கி இருக்கின்றன. அதை முடித்தவுடன் நானே சத்தியமாக உன்னிடம் சரணடைகிறேன். அதுவரை பொறு. அதற்கு முன் அவசரப்பட்டால், இந்த பெல்ட்டை எப்படியும் இயக்குவேன். உயிர்களும் போகும், கண்களும் செயலிழக்கும். ஆனால், அது என் ஸ்டைலில் இருக்காதே என்றுதான் யோசிக்கிறேன்.."

நரேந்திரன் குரலில் கனிவைச் சேர்த்துக்கொண்டான்.

"உன்னைக் காட்டிக் கொடுத்தவர் இறந்துவிட்டார், ரத்னா. இவர்களை விட்டுவிடு."

ரத்னா சிரித்தான்.

"மூன்று வருடங்களுக்கு முன் என்னைக் கைது செய்த அன்றைக்கே போலீஸ் இதைச் சொல்லியிருந்தால் இவ்வளவு பேருக்குப் பிரச்னை இருந்திருக்காது. என் தீர்ப்புகளை இப்போது திருத்தி எழுத முடியாது. நீ உயிர் வாழ விரும்பினால், அந்தத் துப்பாக்கியை தூர எறி. வீணாக விவாதிக்காதே!"

நரேந்திரன் தன் வசமிருந்த துப்பாக்கியை இருட்டில் எறிந்தான்.

"நரேன், சலீம் மீதிருந்து கழற்றிய வெடிகுண்டு பெல்ட்டை நீ எடுத்து அணிந்துகொள்"

"எதற்கு..?"

"அப்போதுதான் என் காரியத்தை முடிக்கும் வரை நீ தொந்தரவு செய்யாமல் சும்மா கிடப்பாய். ரிமோட் இல்லாவிட்டாலும், ஓங்கி அடித்தால் இந்த குண்டுகள் வெடிக்கும் என்று உனக்குத் தெரியுமா? எடுத்து அணிந்துகொள்."

"வேண்டாம், ரத்னா. வெடிகுண்டுகளை அடிக்கடி தொந்தரவு செய்யக்கூடாது.."

"சொன்னதைச் செய்..!.." திடீரென்று ரத்னாவின் குரல் அதிகாரமாக ஒலித்தது.

நாற்பது

ரத்னாவின் கைக்கு எட்டாத தொலைவுக்கு நகர்த்திய அந்த வெடிகுண்டு பெல்ட்டை நரேந்திரன் மெல்ல எடுத்தான்.

அதை அவன் தன் மீது அணிந்துகொள்வான் என்று ரத்னா பார்த்திருக்கையில், நரேந்திரன் சரேல் என்று அதைச் சுழற்றித் தூக்கி எறிந்தான். இருட்டில் பறந்து ஓடைத் தண்ணீரில் அது போய் இறங்கியது. இறங்கிய வேகத்தில் இரவின் அமைதியையும், இருட்டையும் கிழித்துக்கொண்டு வெடித்தது. தண்ணீர் குபீர் என்று எழும்பி அடங்கியது.

"ஈகிள்ஸ் ஐயில் வெடிகுண்டுகளை எப்படிக் கையாள வேண்டும் என்று பயிற்சியும் எடுத்திருக்கிறோம்.." என்றான் நரேந்திரன்.

ரத்னா திடுக்கிட்டுப் பார்த்தான்.

"தப்பு பண்ணிவிட்டாய், நரேன். எல்லோர் கவனத்தையும் இந்தப் பக்கம் இழுத்துவிட்டாய். என் தனிமையைக் கெடுத்துவிட்டாய். உன்னைச் சும்மா விடப்போவதில்லை.." என்று எழுந்தான்.

மன்சூர் மீதிருந்து நகர்ந்ததுதான் அவன் செய்த மிகப் பெரிய தப்பு.

நரேந்திரன் பெரிய ரிஸ்க் எடுத்து ரத்னா மீது பாய்ந்தான். பாய்ந்த வேகத்தில் அவன் வயிற்றில் நரேந்திரனின் உச்சி மண்டை மோதியது. அப்படியே மன்சூரிடமிருந்து விலக்கி ரத்னாவைப் பின்னால் தூக்கித் தள்ளியது.

இருவரும் விழுந்து புரண்ட வேகத்தில் பூமியின் மேடுகளைக் கடந்து, ஓடையின் சரிவில் இறங்கிவிட்டார்கள். அப்படியே சேற்றில் உருண்டு உருண்டு தண்ணீரில் போய் தொபேல் என்று விழுந்தார்கள்.

ரத்னாவின் சக்தி அசாத்தியமாய் இருந்தது. நரேந்திரனை தலை நிமிர்த்த விடாமல் நரேந்திரனின் பின்கழுத்தில் இரு கைகளையும் ஊன்றி, அப்படியே தண்ணீரில் அழுத்திப் பிடித்தான்.

நரேந்திரன் தண்ணீருக்குள் கைகளை இருட்டில் வீசினான். ரத்னாவின் கால்கள் சிக்கியதும், அப்படியே பிடித்து இழுத்தான்.

ரத்னா தண்ணீரை இறைத்துக்கொண்டு சப்தமெழுப்பிக்கொண்டு விழுந்தான்.

சரக்கென்று நரேந்திரனின் வயிற்றைக் குறி வைத்து கையைப் பாய்ச்சினான். நரேந்திரன் அப்படியே வயிற்றை எக்கி இடது கையை தற்காப்புக்காக அங்கே கொண்டுபோனான்.

தாக்கிய ரத்னாவின் கை வெறும் கை இல்லை. அந்தக் கையில் கூரான கத்தி ஒன்று பிடிக்கப்பட்டிருந்ததை நரேந்திரன் உணரும் முன், கத்தி நரேந்திரனின் வயிற்றைக் குறி வைத்து நெருங்கி, தடுத்த இடது கரத்தில் பாய்ந்தது.

நரேந்திரனை உச்ச வலி தாக்கியது. அந்தக் கையில் எலும்பு நிச்சயமாக முறிந்துவிட்டதை நரேந்திரன் உடனே உணர்ந்தான். குபீர் என்று சிகப்பு ரத்தம் வெளியே பாய்ந்து தண்ணீரில் கலந்தது.

தடுமாறி நரேந்திரன் தண்ணீரில் விழுந்தான். இடது கையிலிருந்து வலி பேரலைகளாக எழும்பியது. ஒற்றைக் கையால் தண்ணீரில் அடித்து எழுந்திருக்கப் பார்த்தான்.

ரத்னா தன் கையை ஆதரவாக நீட்டினான்.

"என்னைப் பற்றி எல்லாம் தெரிந்துகொண்டிருந்தால் இன்னொரு விஷயத்தையும் தெரிந்துகொண்டிருப்பாய், நரேன். ஒருத்தரைக் கொலை செய்யப் பயன்படுத்திய கத்தியை அடுத்த ஆளுக்கு நான் பயன்படுத்துவதில்லை. அதனால், மன்சூருக்கு ஒரு கத்தி, சலீமிற்கு ஒரு கத்தி என்று இரண்டு கத்திகள் கொண்டுவந்திருந்தேன். ஒன்றைத்தான் நீ தட்டிவிட்டாய். இன்னொன்றை இப்போது வெளியே எடுக்கும்படி ஆகிவிட்டது.."

நரேந்திரன் ரத்னா நீட்டிய கையைத் தொடாமல் பொங்கும் ரத்தத்தை நிறுத்த தன் சட்டையைக் கழற்றிச் சுற்ற முனைந்தான். சட்டையைக் கழற்றுவது சுலபமாய் இல்லை. வலியில் உயிர் தவித்தது.

"ஸாரி, நரேன். எனக்கும் உனக்கும் நேரடிப் பகை கிடையாது. சொல்லப் போனால் உன் மீது எனக்கு நிறைய நிறைய மரியாதை உண்டு. அதனால்தான் எனக்கு ஒரு சரியான சவாலாக இருக்க வேண்டும் என்று உன்னைத் தேர்ந்தெடுத்து உனக்குத் தகவல்களைக் கொடுத்தேன். உனக்கும் எனக்குமான போராட்டம் செஸ் ஆட்டம் போல் புத்திசாலித்தனமானதாக மட்டும் இருக்கும் என்றுதான் நினைத்திருந்தேன். உன்னுடன் அடிதடிக்கு நான் ஆசைப்பட்டது கிடையாது. ஆனால், இப்போது உன்னைக் காயப்படுத்தும் நிலைமை வந்துவிட்டது. ரொம்ப ஸாரி. மன்சூர், சலீம் இருவரையும் தீர்த்துக் கட்டிவிட்டு உன்னை நானே ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகிறேன்.."

ரத்னா நரேந்திரனின் இடது கையைக் கருணையுடன் தொட்டான்.

நரேந்திரன் அதைத்தான் எதிர்பார்த்தான். அவன் கைக் காயத்தைப் பார்த்து, ரத்னா சற்று கவனம் கலைந்திருந்த நேரம் வலது கையைக் குவித்து முழு வேகத்துடன் செலுத்தினான். அது ரத்னாவின் இடது கன்னத்தில் ராக்கெட் போல் மோதியது. ரத்னா இரும்பு உலக்கையால் தாக்கப்பட்டவன் போல் எகிறி, தண்ணீரில் விழுந்தான்.

ஆத்திரத்தில் நரேந்திரனின் கால்களை கத்தியால் சீவ ஆசைப்பட்டு வீசினான்.

தண்ணீரில் கத்தியின் வீச்சு வேகமிழந்து, விசை குறைந்து அவனைத் தடுமாற்றிவிட்டது. அவன் தடுமாறி

எழுந்திருக்க, காற்றில் விஷ்க்கென்று ஒரு சப்தம்.

மீண்டும் லெதர் பெல்ட் ரத்னாவின் கையைத் தாக்கிக் கத்தியைத் தூர எகிற வைத்தது. ஆனால் இந்த முறை அது நரேந்திரனின் பெல்ட் இல்லை. வைஜயந்தியின் பெல்ட்.

அடுத்த சுழற்சியில் வைஜயந்தியின் பெல்ட் ரத்னாவின் தாடையைத் தாக்கியது.

ரத்னா கத்தியைத் தவறவிட்டு கீழே விழுந்து எழுந்தபோது அவன் முகத்துக்கு நேரே வைஜயந்தியின் துப்பாக்கி நீண்டிருந்தது.

"என்னாயிற்று? ஏன் இத்தனை நேரம்? மேக்கப் போட்டுக்கொண்டிருந்தாயா..?" என்றான் நரேந்திரன், சற்றே சலிப்பாக.

"அறுத்துப் போட்டாலும் ஆடுமாம் ஆட்டின் வால். வெட்டுப்பட்டாலும் வெத்துப் பேச்சு போகவில்லை உனக்கு. மன்சூர் இடுப்பில் கட்டப்பட்டிருந்த வெடிகுண்டு பெல்ட்டைக் கழற்றி செயலிழக்க வைத்துவிட்டு வர வேண்டாமா? நான் வரும் வரை நீ உன்னைப் பார்த்துக்கொள்வாய் என்று நினைத்தேன்.."

வைஜயந்தியின் கவனம் திசை திரும்பியிருப்பதாக நினைத்து, ரத்னா இருட்டில் தண்ணீருக்குள் பாய்ந்தான். நரேந்திரன் வைஜயந்தியின் கையிலிருந்து ரிவால்வரைப் பிடுங்கினான். விசையை இழுத்தான். தோட்டா தண்ணீரை சிதறடித்தது. ரத்னாவின் அலறல் நிசப்தத்தை சிதறடித்தது.

"சுட்டுவிட்டாயா..?" வைஜயந்தி பதறினாள்.

"முழங்காலைப் பெயர்த்துவிட்டேன். அவனால் நீச்சலடிக்க முடியாது. தப்பித்து ஓட முடியாது. வெளியே எடுத்துப் போடு.."

தண்ணீரில் பாதியும், கரையில் பாதியுமாக அசைய முடியாமல் வலியின் வேதனையில் கிடந்த ரத்னா நரேந்திரனைப் பார்த்து சற்றே சோகத்துடன் புன்னகைத்தான். வலியை வெளியே காட்டாமல் பேசினான்..

"எப்படியும் மறுபடி சிறையிலிருந்து தப்பிப்பேன். மன்சூர், சலீம் இருவர் கண்களையும் தோண்டி உனக்குப் பரிசாக அனுப்பிவிட்டுத்தான் ஓய்வேன்"

தூரத்தில் சைரன்களின் ஒலி கேட்கத் துவங்கியது.

நாற்பத்து ஒன்று

சென்னை.

தாஜ் ஹோட்டல். அந்த மாலை விருந்தில் முக்கிய விருந்தாளிகளாக ஹைதராபாத் சகோதரர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

நரேந்திரனின் இடது கை கட்டு போடப்பட்டு மருத்துவத் தூளியில்

ஊஞ்சலாடிக்கொண்டிருந்தது.

"அப்புறம்..?" என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

"இதோடு நாற்பது முறை சொல்லிவிட்டேன். ஆனாலும் நான் அடிபட்டுக் கிடந்ததையும், வைஜயந்தி வந்து காப்பாற்றியதையும் கேட்டுக் கேட்டு இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ஆனந்தப்படுகிறார்.." என்றான் நரேந்திரன், பொய்யான கோபத்துடன்.

மன்சூர் சிரித்தார். "அல்லாதான் சரியான நேரத்தில் உங்களையெல்லாம் அனுப்பி எங்களைக் காப்பாற்றினார்.."

"ஆபத்தான ஜல்லிக்கட்டு விளையாட்டை இருட்டில் விளையாடிவிட்டு வெளியேறிய மாதிரி இருக்கிறது.." என்றான் நரேந்திரன், கையை ஆசையாக வருடிக் கொடுத்து.

"கடவுள் மட்டும் இடதுகை என்று ஒன்றைக் கொடுக்காமலிருந்தால், இவன் வயிற்றில் அடுத்த நம்பரை ரத்னா எழுதியிருப்பான்.." என்றாள் வைஜயந்தி.

"38.." என்றான் நரேந்திரன்.

"முப்பத்தெட்டா? முட்டாள். ஆறு என்றுதானே எழுதியிருப்பான்..?"

"நான் அந்த நம்பரைச் சொல்லவில்லை"

"பின்னே..?"

"அங்கே பார். நீல ஸ்லீவ்லெஸ் போட்டிருக்கிறதே ஒரு பட்சி, அதன் அளவைச் சொன்னேன்.."

சொன்ன அடுத்த கணம் நரேந்திரனின் வலது கையை வைஜயந்தியின் அன்பிரேக்கபிள் பிளேட் தாக்கியது.

**முற்றும்**


A
SUSPENSE
THRILLER
JUNE-12 முதல்
TO
JUNE-12 வரை
சுபா